Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 20




# ஈழநாடு

வார மலர்

மலர் 11 | சௌமிய மார்கழி 1 | ஷவ்வால் 6 | (16-12-69) | செவ்வாய்க்கிழமை | இதழ் 306

# கொழும்பு, பதுளை நகரங்களில் மீண்டும் யு.என்.பி. நிர்வாகம்

## நீதிராஜா, மீனு இரத்தினம், மென்டிஸ் வெற்றி; விவியன் தோல்வி

(நமது நிருபர்கள்)

கொழும்பு பதுளை நகரங்களின் ஆட்சி நிர்வாகத்தை மீண்டும் ஐகக்கிய தேசியக் கட்சியே கைப்பற்றியுள்ளது. நேற்று நடைபெற்ற கொழும்பு பதுளை மாநகரசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட அபேட்சகர்களே பெரும்பான்மையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

47 ஸ்தானங்களைக் கொண்ட கொழும்பு மாநகரசபைக்கு நடைபெற்ற தேர்தலில் ஐக்கியதேசியக்கட்சி 32 ஸ்தானங்களைக் கைப்பற்றியுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆறு ஸ்தானங்களையும், லங்கா சமசமாஜக் கட்சி ஐந்து ஸ்தானங்களையும், கம்யூனிஸ்ட் கட்சி இரண்டு ஸ்தானங்களையும் கைப்பற்றியுள்ளன. சுயேச்சையாளர் இரு ஸ்தானங்களைப் பெற்றுள்ளனர்.

கொழும்பு நகர நிர்வாகம் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சிக்கே கிடைத்துள்ளது.

கொழும்பு நகரின் தற்போதைய மேயர் ஜாபிர் ஏ. காதர், காலி நகரமேயர் டபிள்யூ. டி. எஸ். அபயகுணவர்த்தன பதுளை நகரமேயர் ஆகியோர் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். கொழும்பு மாநகரசபைக்கு திருமதி மீனு இரத்தினம், செனட்டர் நீதிராஜா திரு மகேந்திரா இராசரத்தினம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். ஜனுப் எம். டி. கிச்சிலான் திரு எட்மன் சமரவிக்கிரம திரு நீதிராஜா, எம் ஜி. மெண்டிஸ் ஆகிய செனட்டர்களும் கொழும்பு மாநகரசபை அங்கத்தவர்களாகத் தெரிவுசெய்யபபட்டுள்ளனர்.

தொழிற்சங்கத் தலைவர்களில் ஒருவரான திரு. எம். ஜி. மெண்டிஸ் கொழும்பு மாநகரசபைக்குத் தெரிவுசெய்யப்பட்டார் மற்றொரு தொழிற்சங்கத் தலைவரான திரு எல். டபிள்யூ' பண்டித தோல்வியடைந்தார். தொழில் அமைச்சர் அல்ஹாஜ் முகமதுவின் மகன் மாநகரசபைக்கு ஓர் அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் அதே சமயம் லங்கா சமசமாஜக் கட்சியின் பிரமுகரான திருமதி விவியன் குணவர்த்தன தோல்வியடைந்துள்ளார்

## பதுளையும் யு.என்.பி.க்கு

முன்னாள்மேயர் திரு. அபயகுணவர்த்தன, உதவி மேயர் ஆகியோர் வெற்றி பெற்றனர். ஆனால் முன்னைய சபையில் அங்கம் வகித்த 7 பேர் இம்முறை தோல்வியடைந்தனர்:

பதுளை மாநகரசபையை யு- என். பி. மீண்டும் கைப்பற்றியுள்ளது. பதினைந்து வட்டாரங்களுக்கும் நேற்று நடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 9 ஸ்தானங்களையும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 3 ஸ்தானங்களையும், லங்கா சமசமாஜக் கட்சி 2 ஸ்தானங்களையும், கம்யூனிஸ்ட்கட்சி ஒரு ஸ்தானத்தையும் கைப்பற்றியது முன்னாள் மேயர் திரு. விஜயசேகரா வெற்றிபெற்றுள்ளார்.

1-ம் வட்டாரம் (மட்டக்குளி)
ஒகஸ்தின் டயஸ்(யு என் பி)
பெரும்பான்மை - 1069

2-ம் வட்டாரம் (முகத்துவாரம்)
வி ஜி பி பெரேரா(யு என் பி)
பெரும்பான்மை - 337

3-ம் வட்டாரம் (மகாவத்தை)
ஷெல்டன் ஜே அபயரத்தின (யு என் பி
பெரும்பான்மை - 317

4-ம் வட்டாரம் (அளுத்மாவத்தை)
அமீர் ஏ ஷெரிப்(யு என் பி)
பெரும்பான்மை - 974

5-ம் வட்டாரம் (உப்புக்குளம்)
எச் ஜே பெரேரா (யு என் பி)
பெரும்பான்மை - 534

6-ம் வட்டாரம் (புளுமெண்டால்)
வீரசிங்க மல்லிமாராச்சி (யு என் பி)
பெரும்பான்மை - 145

7-ம் வட்டாரம் (கொட்டாஞ்சேனை கிழக்கு)
ஆர் ஏ ஜே பெரேரா (யு என் பி)
பெரும்பான்மை - 408

8-ம் வட்டாரம் (கொட்டாஞ்சேனை மேற்கு)
ஹரிஸ் விக்ரமதுங்க (சுயேச்சை)
பெரும்பான்மை - 48

9-ம் வட்டாரம் (கொச்சிக்கடை)
திரு ரி நீதிராசா(யு என் பி)
பெரும்பான்மை - 265

10-ம் வட்டாரம் (ஜிந்துப்பிட்டி)
ஜோ ஜி பிரிட்டோ(யு என் பி)
பெரும்பான்மை - 411

11-ம்வட்டாரம் (மசங்கா வீதி)
அகமத் ஹுசன் (யு என் பி)
பெரும்பான்மை - 577

12-ம் வட்டாரம் (புதுக்கடை)
வின்சென்பொரரா (யு என் பி)
பெரும்பான்மை - 1673

13-ம் வட்டாரம் (பாலத்துறை வடக்கு)
ஜே டபிள்யு மகாகுமாரகே (யு என் பி)
பெரும்பான்மை - 633

14-ம் வட்டாரம் (பாலத்துறை தெற்கு)
ஏ எச் எம் பௌசி (யு என் பி)
பெரும்பான்மை - 1267

15-வட்டாரம் (மாளிகாவத்தை மேற்கு)
எம் எச் முகம்மது (யு. என். பி.)
பெரும்பான்மை - 721

16-ம் வட்டாரம் (அளுத்கடை)
ஏ எம் நவீர் (யு என் பி)

17-ம் வட்டாரம் (புதுக்கடை மேற்கு)
சாள்ஸ் வேதக்கன் (கம்யூ)
பெரும்பான்மை - 257

18-ம்வட்டாரம்(வாழைத்தோட்டம்)
பியதாச பெரேரா (யு என் பி)
பெரும்பான்மை - 290

19-ம் வட்டாரம் (கொச்சிக்கடை தெற்கு)
முகமது ஸெயின் டீன் (யு என் பி)

]16-ம் பக்கம் பார்க்க)

## காலி முன்னணி வெற்றி

காலி மாநகரசபைக்கு நேற்று நடந்த தேர்தலில் அமைச்சர்டாக்டர்டபிள்யூ. தஹநாயக்காவின் கோஷ்டியான காலி ஐக்கிய முன்னணி ஆறு இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 4 இடங்களையும், முன்னாள் மேயர் திரு. அபயகுணவர்த்தன கோஷ்டியினர் 3 இடங்களையும், லங்கா சமசமாஜக் கட்சி ஒரு இடத்தையும், சோஷலிஸ்ட் சுயேட்சை ஒரு இடத்தையும் கைப்பற்றியது.

நத்தார் - புதுவருட மலிவு விற்பனை

ஆரம்பம் 18-12-69

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச்சங்கம் பிடவைப்பகுதி

420, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் — அரசியல் நிருபர்

# வேலைநிறுத்தங்களுக்கு முடிவு காண வழியே இல்லையா ?

வேலைநிறுத்தம்வியாதி தீவிரமாகப் பரவிக் கொண்டிருக்கிறது. ஓர் இடத்தில் ஒரு வேலைநிறுத்தம்தொடங்கினுல் அது தொற்று நோய் போல் இதர இடங்களுக்கும் பரவுவது நமது நாட்டில் வழக்கம். அரசாங்கமும் நிர்வாகமும் ''விட்டுப்பிடித்துப் பார்ப்போம் களைத்துப் போவார்கள்'' என்ற அபிப்பிராயத்தில் விட்டுப் பிடிப்பதும் கடந்த காலத்தில் கண்ட சம்பவங்கள். வேலை நிறுத்தம் நீடிக்கநீடிக்க இப்படிக் களைப்பு ஏற்படுவதும் ''துரோகிகள் காட்டிக் கொடுத்துவிட்டார்கள்'' என்ற பரஸ்பரக் குற்றச் சாட்டுகளுடன் சந்தர்ப்பம் பார்த்து வேலையைக் காப்பாற்றிக் கொள்ளும் நிபந்தனையுடன் வேலைக்குத்திரும்புமாறு வேலைநிறுத்தம்செய்பவர்களைதொழிற்சங்கங்கள் கேட்பதும் வழக்கம்தான். வேலைநிறுத்தத்தை விட்டுப் பிடித்து தொழிற்சங்கங்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்துவது தல்ல தந்திரம் தான் என்ருலும் அதுவும் இதுவரை பூரண வெற்றியளிக்கவில்லையே.

வேலை நிறுத்தங்களை நீடிக்க விடுவதும் பின்னர் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தி அத்தியாவசிய சேவையைப் பிறப்பிப்பதும் இங்கு நடைபெறும் நிகழ்ச்சிகள் வேலைக்குத் திரும்ப வேண்டுமென்று காலக்கெடு விதிப்பதும் அந்தக் கெடுவுக்குள் திரும்பாவிட்டால் வேலையில் இருந்து நீக்கப்பட்டதாகக் கருதப் படுவார்களென்றும் எச்சரிச்கைசெய்வதுமுண்டு,

ஆனுல் இதில் எதுவும் நடைபெறுவதில்லை. வேலை நிறுத்தம் செய்பவர்களை விட்டுப் பிடிப்பதும் பின்னர் எச்சரிக்கை செய்வதும் அடுத்து அவர்களை வேலைசெய்ய அனுமதிப்பதும் சாதாரண நிகழ்ச்சிகள் அதேபோல் கோரிக்கைகள் கிடைத்தால் தான் வேலைக்குத் திரும்புவதென்று கூறுவதும் பின்னர் ''எங்களுக்கு வெற்றிதான்'' என்று கூறிக்கொண்டு வேலை போகாமல் விட்டாலே போதும்'' என்ற நிலையில் வேலைக்குத் திரும்புவதும் இங்குநடைபெறும்நிகழ்ச்சி.

சம்பள உயர்வு வேண்டுமென்பதும்போனஸ்வேண்டுமென்பதும்தான் இப்போது நடைபெறும்வேலைநிறுத்தங்களுக்குப் பெரும்பாலும் காரணம். வேலையில்லாதிருக்கும் சுமார் மூன்று லட்சம் மக்களின் நிலைமையைப்பற்றியோ, சம்பள விகிதம், வருடாந்த சம்பள உயர்வு, மற்றும்வசதிகள்எதுவுமில்லாத தனியார் துறை ஊழியர்பற்றியோ, அன்ருடம் உழைத்தால் தான் வாழ்வு இல்லையேல் அனுதை விடுதி என்ற நிலையிலுள்ளவர்களைப்பற்றியோ காலை முதல் மாலை வரை வயலிலும் தோட்டத்திலும் பாடுபடும் மக்களைப்பற்றியோ யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

சிலவருடங்களுக்கு முன்னர் சோஷலிஸ நாடொன்றில் சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுவந்த சமயத்தில் முக்கியமான துறையிலுள்ள ஊழியர்கள் சம்பள உயர்வுகோரினுர்கள். சம்பள உயர்வு கொடுக்கக்கூடிய நிலையில் நாடு இல்லை என்று

## பொதுமக்கள் அறியவேண்டும்

அரசாங்கம் தெரிவித்ததாம். 'இல்லை எப்படியும் சம்பளஉயர்வு தந்தேயாக வேண்டும்' என்று அவர்கள் பிடிவாதம் பிடித்தனர் சரி என்றது அரசாங்கம். அதன்படி சம்பள உயர்வுகொடுக்கப்பட்டது. அதேசமயம் அந்தச் செலவை ஈடுகட்ட புதியபுதிய வரிகளை விதித்ததுடன் எந்தெந்தத்துறையில் சம்பளம் கூட்டப்பட்டதென்பதையும் எந்தெந்தத் துறையினுல் நாட்டுக்குச் செலவென்பதையும் அரசாங்கம் எடுத்துக்காட்டியதாம்.

இப்பொழுது அங்கு மீண்டும் பழைய கட்டுப்பாடு வந்துவிட்டது. சம்பள உயர்வுகேட்கிருர்களா, முன்னர்கொடுத்தசம்பளஉயர்வு இன்னமும் கிடைக்கிறதாவென்பது தெரியவில்லை.

நமது நாட்டில் அரசாங்க ஊறியர்களுக்குக் குறையில்லாமலில்லை. ஆனுல் இங்கு நடைபெறும்வேலைநிறுத்தங்கள் பெரும்பாலும் ''அரசாங்க ஊழியரில் அவர்களுக்குச் சம்பள உயர்வு கொடுத்தால் எங்களுக்கு ஏன் கொடுக்கக்கூடாது? எங்களுக்கும்கொடுக்கவேண்டும்'' என்ற அடிப்படையில் தான் நடைபெறுவதாக இருக்கிறது. 'சம்பளக்கமிஷன் செய்த சிபார்சை நிறைவேற்றவேண்டும்'' என்று ஒரு துறையில் வேலை நிறுத்தம் நடைபெற்ருல் ''சம்பளக் கமிஷன் பாரபட்சம் காட்டிவிட்டது; அந்த சிபார்சுகளை ஏற்றுக்கொள்ளக்கூடாது; அதை நிராகரிக்கவேண்டும்'' என்று மறு துறையில் வேலைநிறுத்தம் நடைபெறுவதையும் இங்கு காணலாம்.

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்குப் பதில் சம்பளத்தை உயர்த்திக்கொண்டேபோனுல் இதே நிலைதான் நீடிக்கும். நிலைமை இன்னும் மோசமாகுமேதவிர திருந்துவதற்கு இடமிருக்காது.

ஒவ்வொரு அமைச்சும் அந்தந்த இலாகாவில் ஊழியர்களுக்குச் சம்பளமாகச் செலவிடும் தொகையையும் அந்தந்த இலாகாமூலம் அமைச்சுக்குக் கிடைக்கும் வருமானத் தொகையையும் மாதாமாதம் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துவதினுலும் அரசாங்க ஊழியருக்குச் சம்பள உயர்வு அளிப்பதனுல் ஆண்டுதோறும் எவ்வளவு தொகைக்கு வரிவிதிக்க வேண்டியிருக்கிறதென்பதைப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துவதினுலும் பயன்கிடைக்கலாம்.

அமைச்சர்கள், ஆட்சிமன்ற உறுப்பினர்கள் தங்களுக்குள்ள சலுகைகளையும் வசதிகளையும் குறைத்துக் கொண்டு அரசாங்க ஊழியரின் சலுகைகளையும் வசதிகளையும் குறைத்துக்கொள்வதாலும் ஓரளவு பயன் கிடைக்காமற்போகாது.

ஃ ஃ ஃ

## சில துணுக்குகள்

**வழக்கு**

கோடீஸ்வரன் வழக்கில் லண்டன் பிரிவிகவுன்சில் அளித்துள்ள தீர்ப்பின் எதிரொலியாக இலங்கையை விரைவில் குடியரசாக்க வேண்டுமென்றும் பிரிவிகவுன்சிலுக்கு அப்பீல் செய்யும் உரிமையை ரத்துச் செய்யவேண்டுமென்றும் இங்கு ஓர் இயக்கமோ, கிளர்ச்சியோதொடங்குமா? அப்படி ஆரம்பிக்கப்பட்டாலும் ஆச்சரியமில்லை.

## இ. தி. மு. க.

யாழ்ப்பாணத்தில் நடந்த இலங்கைத் திராவிட முன்னேற்றக்கழக ஆண்டு மகாநாட்டில் அதன்தலைவர் திரு. இளஞ்செழியன் பொலிஸ் துப்பாக்கியைப் பறிக்க வேண்டுமென்றும் கொரில்லா யுத்தம் செய்ய வேண்டுமென்றும் பேசியதாக யார்யாரோ குரல் எழுப்பி இரகசியப் பொலிசாரும் நாட்டின் நாலாபுறமும் பயணம்செய்து நானூறு பேரைச் சந்தித்து விசாரணைசெய்து நாலாயிரம் பக்கத்தில் வாக்குமூலம் பதிவு செய்து இன்னும் ஒரு முடிவும் இல்லையாம். தொடர்ந்து புலன்விசாரணை நடக்கிறதென்று பொலிசார் கூறுகின்றனர். சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்த அல்பேனிய புரட்சி தினக் கூட்டத்தில்இலங்கை(பீகிங்) கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. நா. சண்முகதாசன் பேசியபேச்சு என்ன குறைந்ததா? ஏன் அவர் பற்றி விசாரணை செய்ய அச்சமா?


நாளைமுதல் குதூகல ஆரம்பம்

பொகுமால்ஸ் ஸ்தாபனத்தாரின்

நத்தார் - புதுவருட மலிவு விற்பனை

முக்கியமாக நத்தார் திருநாளை குதூகலமாக கொண்டாட புதிதாக வரவழைக்கப்பட்ட பல ரக சேட்டுகளை கொள்ளை மலிவில் விற்றுமுடிப்பதே எமது நோக்கம்.

| பல ரக சேட்டுகளில் சில: | வ. வி. | ம. வி. |
|---|---|---|
| டிப்ளோமற் டெரலின் (லக்ஸறி) சேட் | 29-50 | 21-00 |
| டிப்ளோமற் டெற்றேன் கொட்டன் சேட் | 22-50 | 16-00 |
| டிப்ளோமற் அரஸ்டிகோட் சேட் | 17-50 | 11-50 |
| டியூரே டெரலின் லக்ஸறி சேட் | 29-50 | 17-00 |
| ஸ்கைவே டெரலின் சேட் | 24-50 | 16-00 |
| மொட்டெக்ஸ் நைலோன் சேட் | 24-50 | 13-00 |
| ஸோடியக் நைலோன் புஸ்சேட் | 21-00 | 11-50 |
| மான்கற்றன் நைலோன் சேட் | 27-50 | 17-00 |
| மொட்டெக்ஸ் லக்ஸறி டெரலின் சேட் | 29-50 | 19-00 |

இன்னும் ஆயிரக்கணக்கான சேட்டுகள் மீளப் பெற முடியாத விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக சகல விற்பனைப் பகுதியிலும்விலைகள் மிகமிகக்குறைக்கப்பட்டுள்ளது.

டிப்ளோமற் ரெற்றேன்-கொட்டன் சேட் பச்சை நிறம் மட்டும் வழமையான விலை 22-50 மலிவு விலை 11-00 எம்மிடம்பெற்றுக்கொள்ளலாம்.

பொன்னுன இந்த வாய்ப்பை நழுவவிடாதீர்கள். எந்நாளும் உங்கள் ஆதரவை நாடும்

பொகுமால்ஸ் சேட்மாளிகை

49, மெயின்வீதி :: யாழ்ப்பாணம்.

எமது சேட் காட்சி அறையை பார்வையிட மறந்துவிடாதீர்கள்.


வளமிக்க பறவை பென்குவின்

## 3000 முட்டைகள் இட்டபென்குவின் இன்னும் இட்டுக் கொண்டேயிருக்கிறது

உலகப் பிரசித்திபெற்ற விஞ்ஞானிகள். ஆராய்ச்சியாளர்கள், நாவலாசிரியர்கள், கதாசிரியர்கள் எழுதிய புத்தகங்கள், அவர்களின் கற்பனையில் உருவாகி எழுத்துருப்பெற்ற படைப்புகள், சாதாரண மனிதனின் கைக்கெட்டாக்காலம்அது! அதிக விலை மதிப்புடைய இப்புத்தகங்கள், செல்வந்தரின் வாசிகசாலைகளை மட்டும் அலங்கரித்த காலம் அது.



அலன்லேன் என்னும் பையன் அச்சமயம், பிரிட்டனில் பொட்லிஹெட் என்ற கம்பனியில் வேலை பார்த்து வந்தான். இதுவும் ஒரு பிரசுர கம்பனியே. அங்கு பிரசுரமாகும் புத்தகங்களை வாசிக்கும் சந்தர்ப்பம் அவனுக்கு ஒருபொழுதும் கிட்டியதில்லை. கைவேலை செய்யும் பையனுக்கு புத்தகம் வாசிக்க நேரம்எங்கே? நாள் முழுவதும் வேலை செய்துவிட்டு, கிடைக்கும் சிறு ஊதியத்தில் புத்தகம்வாங்கி வாசிக்க இவனுல் முடியவில்லை. காரணம் புத்தகங்களின் மிகக்கூடிய விலையே.

இப்பிரச்சனைக்கு முடிவு தேடியே தீரவேண்டும் என்று தீவிரமாகச் சிந்தித்த லேனின் மனத்தில் ஒரு அசாதாரண எண்ணம் உருவாயிற்று அவ்வெண்ணத்தைச் செயலாக்க வேண்டும்என்ற திடசித்தத்துடன், சிறுகச் சிறுகப் பணம் சேமித்தான் லேன். நூறு பவுண்டுகள் சேர்ந்ததும், தான் வேலை செய்த இடத்தை விட்டு. ஒரு தேவாலய மாட்டுக்கொட்டையில் பிரசுர வேலைகளை மேற்கொண்டான்.

1935-ம் ஆண்டு ஜுலை மாதம், 30ம்தேதி வெள்ளிக்கிழமை இவரது கொட்டடையில் பிரசுரிக்கப்பட்ட முதற் புத்தகம் வெளியாகியது அப்புத்தகம், அன்றைய புத்தக உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. பெரும் புரட்சியையே ஏற்படுத்தியது. புரட்சியை உண்டாக்கியதுடன், அலன் லேனுக்கு பெரும் புகழையும், பணத்தையும் கொடுத்தது இப் புத்தகம்.

விலை கூடிய புத்தகங்களை சாதாரண மனிதனும்வாசிக்கக்கூடியதாக, மிக விலை குறைந்த மலிவுப் பதிப்புகளாக அலன்லேன் பிரசுரித்திருந்தார். வெகு விரைவில் சிறு கொட்டடையில் ஆரம்பித்த இவர் பிரசுர நிலையம் பலபங்குதாரர்களைக் கொண்ட கம்பெனியாக வளர்ந்து, உலகெங்கும் கிளைகளைக்கொண்ட, பிரசுர விருஷமாக இன்று ஓங்கி நிற்கிறது.

பல பவுண்டுகள் விலையுள்ள புத்தகங்களை ஆறு

(16-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாடிப் பரவுதற்கு இனிய பாவை

— தில்லைராஜன் —

அன்பே உருவாய மாணிக்கவாசக சுவாமிகள் அண்ணாமலையாரையும், உண்ணாமுலையுமையாளையும் வழிபட்டு திருவண்ணாமலையில் தங்கியிருக்கிறார். அப்பொழுது மார்கழித்திங்களும் சமீபித்தது. மார்கழி மாதத்தில் வருவது திருவாதிரைத் திருநாள். மகிழ்வூட்டும் இம்மங்கள நன்னாளுக்குப்பத்துத் தினங்களுக்கு முன்பாக, கன்னிப்பெண்கள் பலர் வான்மழை பெய்து நல் வளம் பெருகி நாடுசெழித்தலாகிய பொதுப்பயன் கருதியும், இல்வாழ்வுக்குச்சிறந்த கொழுநரைப் பெறுதலாகிய நற்பயன் குறித்தும், அதிகாலையில் துயில் நீங்கி, தம்மையொத்த மணமாகாத கன்னிப்பெண்கள்துயிலும் மனைதோறும்சென்று அவர்களைத் துயில் எழுப்பி அனைவரும்ஒருங்குகூடி, ஆதியும் அந்தமுமில்லா அரும் பெருஞ்சோதியைப் பாடிப் பரவிக்கொண்டு தாமரைத் தடாகத்திலே குடைந்து குடைந்து நீராடி, அங்கு உமையின் திருவுருவத்தைத் தூய மணலாற் சமைத்துப் பூசனைசெய்வதைக் கண்டார். கண்டவர் அப்பெண்களாகத் தம்மைப் பாவித்து அவர்கள் கூற்றாகப் பாடிய பாடல்களே இந்தத் திருவெம்பாவையாகும்.

மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகத்தின் நடுநாயகமாக விளங்குவது திருவெம்பாவை. சித்தத்துள் தித்திக்கும் திருவாசகத்தின் திவ்விய பகுதியாக விளங்குகின்ற திருவெம்பாவை இருபது பாடல்களைக்கொண்டுள்ளது. இதனைத் திருவாசகத்தின் ஒரு சிறு துளியென்றே கூறலாம். பண்ணோடு இசைபாடும் அடியார் இப்பாவையைப் பாடும்போது பாடுவோர் உள்ளமும் கேட்போர் உள்ளமும் பாகாய் உருகிவிடும். ''பாவை பாடிய வாயால் கோவை பாடுக'' என்று பரமனே அருளிச்செய்தனரென்றால் இத்திருவெம்பாவையின் பெருமையை என்னென்று இயம்புவது.

கண்ணன் மீது ஆண்டாள் பாடிய திருப்பாவையும் இதே தன்மையது. இறைவனையே தலைவனாகப் பாவித்துப் பாடப்பட்டுள்ள இப்பாடலைப் படிக்கும்தோறும் ஆண்டாள் கண்ணன் மீது கொண்டுள்ள ஆராக்காதலையும், அவனையே நினைந்து நினைந்து உருகுவதையும் காணலாம். கண்ணனுக்கே தன்னை அர்ப்பணித்து அவனின்றி உயிர்வாழ்வதில்லை என்றதிடங்கொண்டு நிற்கும் கோதையை- ''மானிடவர்க்கென்றுபேசப் படில் வாழ்கிலேன் கண்டாய்'' என்ற பதிகத்தொடரிலிருந்து அறியலாம். இறைவனுகிய தலைவனை நோக்கும்போது ஆன்மாக்கள் யாவும் பெண்களே. இந்தவகையில் திருவெம்பாவையும், திருப்பாவையும் ஆண் பெண் இருபாலாரும்ஓதுதற்கேற்ற சிறப்பு வாய்ந்ததாகஅமைந்துள்ளது.

நோய்பிணியில்லா திருக்கஸ்நானஞ்செய்வது தேக சுகத்துக்கு மிக நல்லது, மாசில்லாமனதோடு, பக்திப் பரவசத்தோடு, அருளோடு குற்றங்கள் தீர்க்கும் குணநிதியைத்துதிப்பது நல்வாழ்வுக்கு ஏற்றது. மார்கழி மாதம் வழிபாட்டுக்குச் சிறந்த மாதம். அதிலும் வைகறைப்பொழுது நான்கு மணி தொடக்கம் ஆறுமணி வரை மிகச்சிறந்த காலமாகும். அது மதி நிறைந்த நன்னாள்; தேவர்களுக்கு விடியற்காலம்; உழைப்பில் ஊக்கமேற்படும் காலம்; செய்கையில் வெற்றி ஏற்படும் காலம்; ஆத்மீகத் துறையிலும், பொருளாதாரத்துறையிலும், உலகியற்றுறையிலும் விடியுங்காலமாகிய மார்கழியில் திருவெம்பாவைப் பூசைநடத்த மிகவும் பொருத்தமானதே. சைவமக்கள் அதிகாலையில் எழுந்து நீராடி, சுவாமி தரிசனஞ் செய்து, பிறமக்களைப் பாட்டொலியாலும், சங்கொலியாலும் தெருத்தோறுஞ்சென்று துயில் எழுப்புவதுஉத்தமமானதே. கோயில்களிலும் இப்பத்து நாட்களும் பூசை ஆராதனைகளுடன் திருப்பாவை திருவெம்பாவை ஓதுதலும் நடைபெறும் நம் ஈழத்திருநாட்டிலும் இம்மரபுபேணப்படுவது மகிழ்ச்சிக்குரியதே.

இப்பாடல்களை இன்று ஓதுவாருக்குப் பதிலாகப் பெண்மணிகளே ஆலயசந்நிதானத்தில் ஓதுவதும் அவற்றை வானொலி மூலம் ஒலிபரப்புவதும் திருவெம்பாவைக் காலத்தில் நம் நாட்டில் நடைபெறும் வழக்கமாகும்.

## அம்புலியில் இந்தியக்கொடி

இந்தியாவின் மூவர்ணக்கொடி இப்பொழுது அம்புலிக்குச் சென்றுள்ளது.

அப்பலோ-12 விண்வெளிக் கலத்திலிருந்து பிரிந்து நிலாவில் இறங்கிய நிலா வாகனத்தில் இந்தியா உட்பட 136 நாடுகளின் கொடிகள் சென்றன. கான்ராடு, பீன் இருவரும் இவ்வாகனத்தில்தான் அம்புலித் தரையில் இறங்கினர்; இவர்கள் அங்கிருந்து இந்தக் கொடிகளை மீண்டும் பூமிக்குக் கொண்டுவந்தனர்.

சென்ற ஜூலை மாதம் நடந்த முதலாவது அம்புலிப் பயணத்தில் அப்பல்லோ-11 விண்வெளி விமானிகள் ஆம்ஸ்ட்ரோங், ஆல்ட்ரின் இருவரும் இந்தியாவின் வாழ்த்துச்செய்தியொன்றைக் கொண்டுசென்றனர். அது அம்புலித் தரையில் இருக்கிறது.

தலைமை அமைச்சர் இந்திராகாந்தி அனுப்பிய அவ்வாழ்த்துச் செய்தி 'அப்பலோ-11 பயணத்தினால் மக்கள் குலம் அனைத்துக்குமே அமைதியான முயற்சிகள் நிலவும் யுகம் ஒன்று தோன்ற வேண்டும்'' என்ற நம்பிக்கை தெரிவித்தது.

# புற்றுநோயுடன்விளையாட வேண்டாம்

# அது முற்றினால் ஆபத்தானது

புற்று நோய் என்பது மனிதனுக்கும் மற்றும் உயிருள்ள பிராணிகளுக்கும் இன்று நேற்று ஏற்பட்ட நோயல்ல. மனிதன் உற்பத்தியான காலம்தொட்டு அதுவும் இருந்து வருகிறது. மேனாட்டு வைத்தியமுறையின் தந்தை என்றழைக்கப்படும் ஹிப்போகியுட்டிஸ்என்ற கிரேக்கர் கிறிஸ்து பிறப்பதற்கு நாநூறு வருடங்களுக்கு முன்பு அதைக்கண்டுபிடித்து அதற்கு 'கான்ஸர்' என்று பெயரிட்டார். நன்றாக முற்றினாலன்றி அதைக் கண்டுபிடிப்பது கஷ்டமாதலால் பலர் நோய்இன்னதென்பது தெரியாமலேயேஇறந்துவிடுகிறார்கள். சமீப காலமாகத்தான் பொதுமக்கள் நேரத்தோடேயேஅதற்கு சிகிச்சை செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். ஆஸ்பத்திரி கிளினிக்குகளுக்கு வருகிறவர்களின் தொகை வருடாவருடம் அதிகரித்து வருகிறது.

### நோய் உண்டாகும் விதம்

உயிரணுக்கள் பல ஒன்று சேர்ந்து இழையங்களாகின்றன. இவை ஒன்று சேர்ந்து தேகத்தின் உறுப்புகளை அமைக்கின்றன. அணுக்கள் அடிக்கடி செத்துப்போகும். ஒன்று செத்தவுடனே புதிய உயிருள்ள அணு ஒன்று அந்த இடத்தில் முளைத்துவிடும். சில சமயங்களில் இந்த நியதியைமீறி உடம்பின் தேவைக்கு அதிகமான அணுக்கள் முளைத்து பரவுவதுண்டு. அநாவசியமான இந்த வளர்ச்சிதான் புற்று விரணம் எனப்படும். கழலை, கட்டி போன்ற சில வளர்ச்சிகள் தீமையற்றவை. சிலர் அவை அதிர்ஷ்டத்தின் அறிகுறி என்றும் சொல்வார்கள். புற்றுவளர்ச்சி அப்படியல்ல. அது மிகவேகமாக வளர்ந்து பக்கத்திலுள்ள இழையங்களையும் உறுப்புகளையும் தாக்கி, இரத்தப் பெருக்கு உண்டுபண்ணி, தேகத்திலுள்ள குழாய் வழிகளையும் அடைத்து விடும். இந்த அணுக்கள் இரத்தத்துடன் கலந்துவிட்டால் தேகத்தின் பிறபாகங்களிலும் புற்று விரணத்தை உண்டாக்கும்.

புற்றுநோய் தேகத்தின் எல்லா உறுப்புகளையும் தாக்கக்கூடியது. ஆனால் விசேஷமாக ஆண்களின் இரைக்குழாயையும்பெண்களின்கற்பப்பை, ஸ்தனங்கள் ஆகிய வற்றையும் தாக்கும். இலங்கையில்வெற்றிலையுடன் சுண்ணாம்பும் புகையிலையும் மிதமிச்சமாகச் சேர்த்து சப்புகிறவர்களுக்கு வாயிலும் உண்டாகிறது. தேகத்திலுள்ள நொய்ந்த பகுதிகள் அடிக்கடி உராய்ந்து சொறியப்படுவதால் புற்று நோய் உண்டாகிறதென்று சிலர் அபிப்பிராயப்பட்ட போதிலும் அதற்குரிய காரணங்கள் எவையென்று இன்னும் திடமாகக் கூற முடியாமலிருக்கிறது.

### நோயின் அறிகுறிகள்

பின்வரும் அறிகுறிகளில் ஏதாவதொன்று காணப்பட்டால் டாக்டரிடமோ, ஆஸ்பத்திரியிலோ காட்டி சோதனை பார்த்து விடுவது உசிதம். எவ்வளவு நேரத்தோடுசிகிச்சைநடக்கிறதோ அவ்வளவுசீக்கிரத்தில் நோய் குணமடையும். கவலையீனமாக விட்டுவிட்டால் ஆபத்தானது. (1) இரண்டு வாரங்களுக்குள் மாறாதபுண் அல்லது பரு(அநேகமாக வாய்க்கருகில் (2) நோவுஇல்லாத திரட்சி அல்லது தடிப்பு (அநேகமாக மார்பில்) (3) இரத்தப்பெருக்கு, (4) கறுப்பு முதலிய குறிகளின் நிற மாற்றம் (5) அடிக்கடிஉண்டாகும் மலச்சிக்கல் (6) தொண்டை அரிப்பு அல்லது ஓயாத இருமல் (7) உணவு நீர்உட்கொள்வதில்கஷ்டம்.

புற்றுநோய்க்கு காரணம் எதுவாயிருந்தாலும் அது

### தொற்றுநோயல்ல .

தொற்று நோயல்ல என்பது மட்டும் நிச்சயமாகத் தெரியும் ஏனென்றால் அது கிருமிகளால்ஏற்படுவதல்ல. ஆகையால் அது தொற்றிவிடும் என்று பயப்பட வேண்டியதில்லை. அது பரம்பரையான நோய் என்றும் கூற முடியாது. இதுபற்றி நிபுணர்களிடையே அபிப்பிராய பேதம் நிலவுகிறது. மற்றும் சில நோய்களைப் போலன்றி புற்றுநோயின் ஆரம்பத்தில் காய்ச்சலோ நோவோ இருக்காது. இக்காரணத்தினால் அதைக் கண்டுபிடிப்பது கடினமாகிறது

[ சுப்புடு ]

### சிகிச்சைகள்

புற்றுநோயை குளிகைகளாலும் உள்மருந்துகளினாலும் குணப்படுத்த முடியாது. சந்தேகம் உள்ளவர்கள் குடிநீராலும் நாட்டு வைத்தியத்தினாலும் அதை மாற்றமுடியும் என்று நினைத்து அவற்றில் காலத்தைப் போக்கிறவர்கள் ஒவ்வொரு நாளும் தங்களுக்கு ஆபத்தைத் தேடிக்கொண்டே போவார்கள். இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்ட முறைகள் இரண்டு இருக்கின்றன. முதலாவது, சத்திர வைத்தியம் செய்து வளர்ந்த திரட்சியை துப்புரவாக அறுத்து நீக்கிவிடுவது. ஆனால் இது எப்பொழுதும் சாத்தியப்படாது. ஏனென்றால் உடம்பிலுள்ள சில பகுதிகளில் சத்திர வைத்தியம் செய்வது முடியாமற் போய்விடுகிறது. மற்றது 'றேடியோ தெரப்பி' மூலம் வைத்தியம் செய்வது. இதற்கு நோயாளி ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து சிலநாட்களுக்கு தொடர்ச்சியாக சிகிச்சை பெற வேண்டும். இதனால் நோயாளிக்கு சிறு அரிப்பைத்தவிர, வேறு நோவுகள் எதுவும் உண்டாக மாட்டா. தற்சமயம் இலங்கையில் இந்த முறை வைத்தியம் எல்லா ஆஸ்பத்திரிகளிலும் இல்லை. மகாரகமையிலுள்ள புற்றுநோய் 'கிளினிக்' கில் வைத்தியம் நடைபெறுகிறது.

தற்காலத்து நவீன நடையுடை, உணவு முதலியவற்றால் புற்றுநோய்அதிகரிக்கிறதென்று கூறுவதிலும் பிழையில்லை. ஆயினும் அதன் மூலகாரணம்தான் இன்னமும் சரியாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. புற்றுநோய்க்கும் ஒருவருடைய வயது, தொழில், உணவு, சீதோஷ்ணநிலைமை முதலியவற்றுக்கு ஏதாவது சம்பந்தம் இருக்கிறதாவென்று ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. பொதுவாக எவ்வயதினரையும் அது தாக்குமாயினும் ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களே அதற்குப்பெரும்பாலும் பலியாகிறார்கள். உலகத்தில் பத்துமுதல் பதினைந்துவீதமான் மரணங்கள் புற்றுநோயால் சம்பவிக்கின்றன.

### வெற்றிலையும் புற்றுநோயும்

இலங்கையைப் பொறுத்தவரையில், வாயில் புற்றுநோய் ஏற்படுவது இங்கு அதிகமாயிருக்கிறது. இதற்குக்காரணம் வெற்றிலையும், சுண்ணாம்பும், புகையிலையும் மேலதிகமாகச் சப்புவதே என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வாயின் உட்பக்கத்திலுள்ள மெல்லிய சவ்வு உராய்ந்து தேய்க்கப்படுவதால் புற்றுவிரணம் உண்டாகின்றது. வெற்றிலை போடுவதிலும்பார்க்க அத்துடன் சுண்ணாம்பையும் புகையிலையையும் சேர்த்து சப்பி கொடுப்புக்குள் அதக்கி வைத்துக்கொள்வது அபாயகரமானது. வாயில் புற்றுவிரணம் உண்டாவதற்கு அறிகுறி சாதாரணமாக மிருதுவாயிருக்கும். மெல்லிய உட்சவ்வு தடித்து விறைத்துப்போதல். பின்னர் அவ்விடத்தில் சிறிய பருவும் போடலாம். இக்குறியைக் கண்டவுடனேயே 'றேடியோ தெருப்பி' செய்யவேண்டும். வெற்றிலை போடும் பழக்கத்தை அறவே தவிர்க்க முடியாதவர்கள் அளவோடு பாவித்து உடனுக்குடனே வாயைச்சுத்தஞ் செய்து கொள்வது நன்று. எக்காரணம்கொண்டும் வெற்றிலைச் சக்கையை வாயில் அடக்கி வைத்திருக்கப்படாது.

## வீடு-பெற்றோர்

நேர்த்தியான வீட்டுக்கு இணையான பள்ளிக்கூடமே இல்லை. நேர்மையான பெற்றோர்களுக்குஇணையான ஆசிரியர்களும் இல்லை.

—மகாத்மாகாந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் பெருமான் பற்றி இதுவரை வெளிவந்த நூல்கள்

நாவலர் பெருமான் பற்றி இதுவரை வெளிவந்த நூல்கள் மாணவர் சமுதாயத்திற்கு மிக்க பயன்படுமென்னும் காரணத்தினால் அவைபற்றிய விபரத்தை இம்முறை காண்போம்.

1. ஆறுமுகநாவலர் சரித்திரம்: ஆக்கியோன்-வே. கனகரத்தின உபாத்தியாயர் உபாத்தியாயர் அவர்கள் பெருமானுடைய சீடர்களிலொருவர் பெருமானால் ஸ்தாபிக்கப்பெற்ற சைவப்பிரகாச வித்தியாசாலை உபாத்தியாயராகக் கடமையாற்றியவர். பெருமானை நன்கறிந்தவர்.

இந்த நூல் வெளிவந்தது 1882-ம் ஆண்டு. பெருமான் சிவபதமடைந்து ஐந்து

## ஐந்தாங்குரவர் ஆறுமுகநாவலர்

ஆண்டுகளின்பின் வெளியாகியது. தட்டித்தவறி இரண்டே பிரதிகள் மாத்திரம் மெத்தப் பழுதடைந்த நிலையில் கிடைத்தன. இதன் மூலம் ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை நூற்றாண்டு விழாச் சபையினர் இந்நூலை 68-ம் ஆண்டு மறுபிரசுரஞ் செய்து வெளியிட்டனர். அவர்கள் இப்பணியிலீடுபட்டிரா விட்டால் இந்நூல் அடியோடு இருந்த இடம் தெரியாது மறைந்து போயிருக்கும். தமிழர் எல்லோருமே முக்கியமாக மாணவ சமுதாயம் படித்தறியவேண்டிய நூல் இது.

2. ஆறுமுகநாவலர் சரித்திரம்: ஆக்கியோன்- த. கைலாசபிள்ளை. இவர் பெருமானின் மருமகனுவர். பெருமானிடம் பாடம் கேட்டவர். நீண்டகாலம் சைவப்பிரகாச வித்தியாசாலையின் அதிபராகக் கடமையாற்றியவர். பெருமானின் காலத்தில் அவருடைய எழுத்து வேலைகள் செய்தவர்.

இதில் நாம் ஒரு விஷயத்தை உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும். மேற்கூறிய இருவருமே பெருமான் அவர்களிடம் பாடம் கேட்டவர்கள். கனகரத்தின உபாத்தியாயர் பெருமானின் வித்தியாசாலையில் ஆசிரியப் பணியாற்றினர்; கைலாசபிள்ளை அவர்கள் அப்பள்ளிக்கூடத்தில் நீண்டகாலம் அதிபராயிருந்தார். பெருமானது திவ்விய சீவியத்தை இவர்கள் நன்கறிந்தவர்களாதலால் இவர்கள் எழுதிய பெருமானின் வாழ்க்கை வரலாற்று நூல்களிரண்டும் மிக முக்கியத்துவம்வாய்ந்தவையாம்.

கைலாசபிள்ளை அவர்கள் எழுதிய நூல் இப்பொழுது பெற்றுக்கொள்வது சிறிது கஷ்டமேயாம். இந்நூலை ஸ்ரீலஸ்ரீ நாவலர்சபை பதிப்பித்து வெளியிடலாம்.

3. நாவலர் பெருமான்: ஆக்கியவர்-கவியோகி ஸ்ரீசுத்தானந்த பாரதியார். பதிப்பகம்- 'புதுயுக நிலையம்', புதுச்சேரி.

சுத்தானந்த யோகியாரை தெரியாதவர் இலர். அவர் பெரும் புலவர். உரைநடையில் கைதேர்ந்தவர். பெருமான்மீது மிக்க அன்பும் வைத்துள்ளவர். அவர் தொண்டினை வாழ்த்துவோம்.

4. நாவலர் பெருமான்: ஆக்கியோன்- வித்துவான் கா. மாயாண்டி பாரதி. தமிழ் விரிவுரையாளர்-தூய யோவான் கல்லூரி, பாளை

## அறநெறிக் காவலர் முதலியார் செ. முத்துத்தம்பி

யங்கோட்டை. பிரசுரம்- பழனியப்பா பிரதர்ஸ், சேப்பாக்கம், தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.

இது மிகச் சிறந்த நூல். தூய தமிழ் நடை. பாடபுத்தகமாக உயர்வகுப்பு மாணவர்களுக்கு வைக்கத் தகுந்த நூல்.

5. நாவலர் சமயப் பணி: ஆக்கியோன்- சி. சிவரெத்தினம், நாவலர் வித்தியாசாலை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். இது யாழ்ப்பாணம் சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பெற்றது.

நூலாசிரியர். நாவலர் பெருமானால் ஸ்தாபிக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலையில் மாணவராகக் கற்று பின்னர் அங்கேயே ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றார். பெருமான்மீது அளவு கடந்த பக்திவைத்திருப்பவர்.

6. நாவலர் பணிகள்: ஆக்கியோன் ச. தனஞ்சயராசசிங்கம். இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்து சிரேட்ட தமிழ்விரிவுரையாளராவர். பேராதனையிலுள்ள இலங்கைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தினரால் இந்நூல் வெளியிடப்பட்டது.

சரித்திரக் கண்கொண்டு எழுதப்பெற்ற இந்நூல் ஒவ்வொரு தமிழ்ச்சைவ மாணவரின் கையிலிருக்க வேண்டிய தொன்றாகும். இதற்கு முன்னெழுந்த நூல்களில் காணப்படாத அரிய பெரிய விஷயங்கள் இந்நூலில் காணப்படுகின்றன. நூலாசிரியரின் முயற்சி பாராட்டுதற்குரியது.


7. நல்லைநகர் தந்த நாவலர்: ஆக்கியோன்: 'சொக்கன்'. வில சம்- வித்துவான் க. சொக்கலிங்கம், நாயன்மார் கட்டு, யாழ்ப்பாணம் இந்த நூல் 1969-ம் ஆண்டு ஜூன் மாதம் வெளிவந்துள்ளது. இது, நாவலர்பெருமானைப் பற்றி வெளிவந்த நூல்களில் ஆகப்பிந்திய நூலாகும். ஆனால் படிக்கவேண்டிய நூலும் இதுவாகும். சொக்கன் சிறந்த எழுத்தாளர். நல்லாசிரியர். மாணவர்களுக்கேற்றமுறையில் நூலை ஆக்கியுள்ளார். ஆற்றொழுக்கு நடை. சொற்செட்டு, பொருளாளமுடையது. ஒரு மணித்தியாலத்தில் வாசித்து முடித்துவிடலாம்.

8. ஆறுமுகநாவலர்: (ஆங்கிலம் எழுதியவர்: எஸ். சிவபாத சுந்தரம். இவர் முன்னர் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரி அதிபராயிருந்தவர். 'இந்து ஓர்கன்' காரியாலயத்தில் இந்நூல் கிடைக்கும்.

கைக்கடக்கமான இந்நூல் நல்ல தெளிவான நடையில் எழுதப்பட்டுள்ள இந்த ரக நூல்களில் இதுவே முதனூலாகும். பெருமானின் வாழ்க்கைச்சிறப்பை ஆங்கிலத்தில் அறியவிரும்புபவர்களுக்கு இது சிறந்த நூல்.

9 ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்: (ஆங்கிலம்) எழுதியவர்: வி. முத்துக்குமாரசுவாமி பி.ஏ., ஸ்ரீ குஞ்ஞனந்தமாவத்தை, கொழும்பு-13.

நாவலர் பெருமானின் வாழ்க்கைச்சிறப்பை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டதன் மூலம் இதன் ஆசிரியர் ஒரு பெரும்பணியினைச் செய்து முடித்துள்ளாரெனலாம். ஆங்கிலம் தெரிந்த சகல இன மொழி பேசும்மக்களுக்கு இந்நூல் பெருமானின் சிறப்புக்களைத்தெள்ளிதில் விளக்கவல்லதாகும்.




நூல்-சிவஞான போதம் (எளிய உரை) வெளியீடு- மெய்கண்டார் கழகம். விலை- 25 சதம். கிடைக்குமிடம்-மெய்கண்டார்கழகம் 411, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.

"ஓரும் வேதாந்தமென்றுச்சியிற் பழுத்த சாரங்கொண்ட சைவசித்தாந்தத் தேனமுது" என்று குமரகுருபர சுவாமிகளால் பாராட்டப்படும் சிறப்புமிக்க சைவசித்தாந்தத்திற்கு மணிமுடியாகத் திகழ்வது சிவஞானபோதம். இந்நூலில் பன்னிரண்டு சூத்திரங்கள் அடங்கியுள்ளன. இப்பன்னிரண்டு சூத்திரங்களும் முறையே பதி உண்மை, பாச உண்மை, பசு உண்மைகளை நிரூபித்து, பசுவின் பொது இலக்கணம், பாச இலக்கணம், பதி இலக்கணம்கூறி, பசுவின்சிறப்பிலக்கணம் கூறி, உயிர் ஞானம் உணரும்வகைகூறி, ஆன்ம சுத்திஐந்தெழுத்தால்பெறப்படுதலையுணர்த்தி, அதனால் பாசநீக்கம் ஏற்படும்வகையையும் பயனையும்உணர்த்தி சிவப்பேறு அடைவையும், சிவப்பேறு பெற்று சீவன் முத்தர்கள்இருக்கும்தன்மையையும் விளக்குகின்றன.

சிவஞானபோதம் மெய்கண்டதேவர் அவர்களால் இயற்றப்பட்டது. இப்பன்னிரு சூத்திரங்களுக்கும் சிவஞான முனிவர் சிறந்த உரை எழுதியுள்ளார். நிறைந்த அறிவுடையவர்களே அவருடைய உரையின் சிறந்த கருத்துக்களையும் சூத்திரங்களின் பொருட் செறிவையும் அறியமுடியும். இந்நூலை ஓர் ஆசானின் கீழிருந்து கற்றாலன்றி இதன் உண்மைப்பொருளை உணர முடியாது. அப்படிப்பட்ட தெய்வாம்சம் பொருந்திய நூலின் பன்னிரு சூத்திரங்களையும், சைவமக்கள் யாவரும் படித்துணரும் பொருட்டு நல்நோக்கம் கொண்டு சொற்ப விலையில் பதிப்பித்து வெளியிட்ட மெய்கண்டார் கழகத்தைப் பாராட்டவேண்டும்.

சிவஞானபோதத்தைப் படிக்க விரும்புபவர்களுக்கு ஆரம்ப உரை நூலாக இந்நூல் அமையும். இந்நூல் சென்னை சைவசித்தாந்த மகாசமாஜச் செயலாளர் திரு. மா. ப. தியாகராஜ முதலியார் அவர்களால் எழுதப்பட்டு, திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான், சித்தாந்த கலைச்செல்வர் திரு.க. வச்சிரவேல்முதலியார்(இவர் யாழ்ப்பாணம் வந்திருந்து ஆறு மாதகாலமாக சிவஞானபோத நூலைக் கற்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது) அவர்களால் திருத்தம் செய்யப்பட்டது.

இந்நூலின் விலை மிகச் சொற்பம். 25 சதத்தைக் கொடுத்து இன்றே இந்நூலைப்பெற்றுக்கொள்ளுங்கள்.

—விமலா.

★

**சிலம்பு சிரித்தது** (கவிதை நாடகம்)

ஆசிரியர்: கவிஞர் இ, நாகராஜன்,

விலை ரூபா 1-50, கிடைக்குமிடம்: 2, முதலாம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

இலங்கை வானொலியில் பல தடவைகளாக ஒலிபரப்புச் செய்யப்பட்ட, கவிஞர் இ. நாகராஜனின் 'சிலம்பு சிரித்தது' என்னும் கவிதை நாடகத்தின் நூல்வடிவமே இப்புத்தகமாகும். சிலப்பதிகாரக் கதையின் ஒரு பகுதியை கவிஞர் இ. நாகராஜன் கவிதை நாடகமாகத் தந்துள்ளார் ஆயர்பாடியில் கோவலன் கண்ணகியை விட்டுச் செல்வதும் பொற்கொல்லனின் சூழ்ச்சியால் கோவலன் கொலைபடுவதும், இதையறிந்த கண்ணகி பாண்டியன் அவையை அடைந்து நீதி கேட்பதும் ஆகிய இளங்கோவடிகளின் மதுரைக் காண்டக்கதையை ஆசிரியர் எடுத்துப் புதிய இனிய எளிய பாடல்களில் கவிதை நாடகமாக அமைத்துள்ளார்.

வெண்பாவிற்கொரு புகழேந்திபோல இன்று விருத்தத்திற்கொரு நாகராஜன் என்று கவிதை தெரிந்த பலராலும் பாராட்டப்பெறும் நாகராஜன் இக்கவிதை நாடகத்தையும் பெரும்பாலும் விருத்தப்பாக்கள் கொண்டதாகவே அமைத்துள்ளார், அதனால் ஏனைய கவிதை நாடகங்களை வாசிக்கும்போது வசனங்களோ எனச் சில இடங்களில் ஏற்படும் ஐயப்பாட்டிற்கு இந்த நாடகத்திலே இடமேயில்லை. கவிதை நாடகத்தையே வாசிக்கிறோம்என்ற உணர்வு கடைசிவரையும் துண்டிக்கப்படாதிருப்பது இந்நூலின் ஒரு சிறப்பாகும். வாசிப்பதற்கு மட்டுமன்றி நடிப்பதற்கு மேற்ற முறையில் எழுதப்பட்டிருப்பது இந்த நூலின் இன்னொரு சிறப்பாகும்.

தனியக் கதையைச்சொல்லிக் கொண்டுபோனால் போதாது என்பதை உணர்ந்த கவிஞர் இடைக்கிடையே அரிய கருத்துக்களையும் விதைத்திருக்கின்றார்.

"காரண காரியத் தொடர்
புகளின்றிக்
கவலைகள் நம்மை அடை
யுமோ—அந்தக்
பூரணன் அருளைப் புரிந்
திடுவோரே
புவனியில் உய்யும்
புண்ணிய ராவர்

என்றஇசைப்பாடலில் இறைவனின் அருளின்றி இவ்வுலகில் உய்ய முடியாதென்ற உண்மையை வலியுறுத்துகிறார்.

அநியாயமாகக் கொலைப்பட்டான் கோவலன் என்ற செய்தியறிந்ததும் கண்ணகி கண்ணீரும் கம்பலையுமாகக் கொலைக்களத்தை அடைகிறாள். அங்கேஅவள் அழுது புலம்புவதை மிகவும் அவலச்சுவையுடன் யாத்திருக்கிறார்.

"நீதி அழிந்ததையா—
என்றன்
நெஞ்சம் குலைந்ததையா."
"துன்பம் படர்ந்ததையா—
இங்கு
சூழ்ச்சி பலித்ததையா..."
"வண்மைதரும் இறையே—
இதை
மாற்ற வழியிலையோ?..."

என்பன சில அடிகள்.

பாண்டியன் அவைக்களத்தில் கண்ணகி வழக்குரைக்கும் காட்சிகளை மிக விறுவிறுப்புடன் கவிஞர் கொண்டு செல்கிறார்.

"தப்புகளைச் சரியென்று
செய்யும் நீயோர்
தமிழ் மகனு?..."

என்று கண்ணகி கேட்க,

'தப்பிழைத்தோர்
உண்டாமோ
சொல்செய்தோரைச்
சங்காரம் செய்துநெறி
தழைக்க வைப்பேன்

என்று பாண்டியன் பதிலிறுக்கும்போதும்சரி, கண்ணகி பாண்டியன்மீது குற்றம் சாட்டும்போது,

"ஆத்திரத்தில் அறிவிழந்து
பேசுகின்றாய்
ஆன்றபெருஞ் சபையிதென
அறியாய் போலும்
நேர்த்தியிலா உன்பேச்சை
நீபெண் என்ற
நினைவாலே மன்னித்தோம்
... ... ..."

என்று பாண்டியன் சொல்லும்போதும்சரி கவிஞர் சொற்களை அளந்து உபயோகித்திருக்கிறார். பாண்டியனே குற்றவாளியென்பது வெளிப்பட்டதும் கண்ணகி பாண்டிய மன்னனைப் பார்த்து,

'வெறுங்கோலைப்
பிடிப்பதற்கும்
தகுதியில்லா
வேந்தனுன்றன்
கைக்குமொரு
செங்கோலாமோ
அறங்காக்கும் திறனில்லா
உனக்கேன் ஆட்சி"

என்று ஆத்திரத்தில் வயிறெரிந்து கூறுகின்ற இடம் மிகவும் அருமையாகவுள்ளது.

கவிஞர் இ. நாகராசன் பழைய கதையையே எந்தவித மாற்றமுஞ் செய்யாது கையாண்டுள்ளபோதும் அவரது இனிய புதிய பாடல்கள் படிக்கப்படிக்கச் சுவை பயக்கின்றன. தமிழில் கவிதை நாடகங்களே வளராத இந்தநாளில் சிலம்பு சிரித்தது தமிழனுக்கு ஒரு சீதனமாகும் புதுமையை விரும்புபவர்களும், பழமையை விரும்புபவர்களும் ஏற்றுப் படிக்கவுகந்த நல்ல நூல் 'சிலம்பு சிரித்தது'

— கவிஞர் சுந்தரம்பிள்ளை


முப்பது ஆண்டுகளுக்கு மேல்
தங்க, வைரநகைகள்
வியாபாரத்தில்
முன்னணியில் நிற்கும்
சிறந்தநாணயமுள்ள ஸ்தாபனம்
ராணி ஆபரண மாளிகை
224, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
நவீன - நாகரிக அமைப்புள்ள
தங்க வைர நகைகளைப் பெறுவதற்கு
இன்றே விஜயஞ் செய்யுங்கள்
மனேஜர்: A. KARAPUTUGALA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்டை

"பாற்ரு... பாற்ரு... கிடக்கடா... கிடக்கடா... பாற்ரு... பாற்ரு..."

கைவிரலைச் சுண்டி, வாயைக்குவித்து 'உஸ்'' எனச் சீழ்கையொலி எழுப்பி கையிலிருக்கும் கூர்க்கொட்டனுல் பற்றைகளையும் காவோலைகளையும் தட்டி, நாய்க்கு உற்சாகம் கொடுக்கிருர் தம்பர்.

நாயும் நெருங்கிய —அடர்ந்த —பற்றைகளுக்குள் எல்லாம் அனுயாசமாக வளைந்து, நெளிந்து, ஊர்ந்து பதுங்கி மோப்பம் பிடிக்கிறது.

''வெள்ளையா... உதுக்குள் ளான் கிடக்கு... விட்டிடாதை... எழுப்படா... எழுப்படா...''

மீண்டும் மீண்டும் நாய்க்கு உற்சாகமூட்டுகிருர் தம்பர்.

நாய் சுறுசுறுப்பாக இயங்குகிறது.

தம்பர் ஒரு நிலையில் இல்லை. அவர் வேட்டையிலேயே லயித்து......

''கிடக்கடா...கிடக்கடா'' ... விட்டிடாதை... விட்டுடாதை... எழுப்பு... எழுப்பு

தம்பரின் உற்சாக ஒலியினுல் அந்தப் பற்றைப் பிராந்தியம் அமைதியை இழந்து அல்லோலப்படுகிறது.

வெள்ளையன் எதையோ மோப்பம் பிடித்துவிட்டது. தம்பர் உசாராகிருர்

''வெள்ளையா... அதுதான்ரா... இடைஞ்சலாய்க் கிடந்தால் மற்றப்பக்கமாய் வந்து, சுத்தி வளை... மற்றப் பக்கமாய் வா...''

நாயைவிடத் தம்பரின் உற்சாகம் கூடிவிட்டது. அவர் சுற்றிச் சுழலுகிருர்.

வெள்ளையன் பற்றைகளை இடறி எறிவதும், வெளியில் வந்து பற்றையைச் சுற்றிச் சுற்றி ஓடுவதும்... மீண்டும் பற்றைக்குள் புகுந்து இடறி இடறிக் கால்களால் மண்ணைத்தோண்டி எறிவதும்... தோண்டிய இடத்தில் முகத்தை வைத்து முகர்வதுமாகப் போராடுகிறது.

''வெள்ளையா... விலகு நான் பார்க்கிறன்... என்ன புத்துக்கை விழுந்திட்டுதே... கொஞ்சம் விலகு வெள்ளையா!''

விலகவே மனமில்லாது நிற்கும் நாயைப் பலாத்காரமாக விலக்கிவிட்டுத் தமது கையிலுள்ள கத்தியினுல் பற்றைகளை வெட்டி வழி செய்துகொண்டு புற்றை நெருங்குகிருர் தம்பர்.

'இது என்னடாப்பா... இடைஞ்சலாய்க் கிடக்கிது. மம்பெட்டியாலைகூட வெட்டேலா போல கிடக்கு... வெள்ளையா... தம்பி... வாடா... வந்துவிட்டு லிசாடியா நிண்டுபார்... என்ரலை வெட்டேலா... புத்துக்கை கிடக்குதுபோலை... வந்து பாரடி ராசா...''

இயலாத நிலைமையை உருக்கமான வார்த்தைகளால் வெள்ளையனுக்குக்கூறி உசார்ப் படுத்துகிருர் தம்பர்.

வெள்ளையன் உள்ளே நுழைகிறது. மீண்டும் முன்னங்கால்களால் புற்றை விருண்டுவதும் முகத்தை வைத்து முகர்வதுமாக அவலப்படுகிறது.

தம்பர் சற்று ஓய்வாக மரநிழலில் அமர்கிருர்.

இளக்... இளக் இலுங்... கிலுங்...

உடும்பு புற்றுக்குள் இருந்து விடுபட்டு வெள்ளையனையும் ஏமாற்றிவிட்டு ஓடத் தொடங்குகிறது.

தம்பர் தம்மைச் சுதாரித்துக்கொண்டு எழும்புகிருர்.

''பிடியடா... பிடியடா... அள்ளடா...அள்ளடா...

அந்தப் பிராந்தியம் கொஞ்சநேரம் தம்பரின் உற்சாக ஒலியால் நிலை தளர்ந்து அமைதியாகிறது.

வெள்ளையன் திறமையாக உடும்பைப் பிடித்து விட்டது.

தம்பர் மகிழ்ச்சியோடு வெள்ளையனைத் தட்டிக் கொடுக்கிருர்.

''எனக்குத்... தெரியும் ராசாத்தி... எப்பிடியும் பிடிச்சுப் போடுவாயெண்டு.''

வெள்ளையனும் எஜமானனின் பாராட்டினுல் உடலை வளைத்து வாலைக்குழைத்து நெளிகிறது.

தம்பர் உடும்பை எடுத்து அதன் வாலால் உடும்பின் தலையைச்சுற்றி முன்னங்கால் பாதத்துள் வாலைச் சொருகி உடும்பைக் கட்டிப் போடுகிருர்.

அந்தப் பரந்த உடம்பைப் பார்க்கப் பார்க்க அவர் முகத்தில் பெருமையின் சாயல் இளையோடுகிறது.

அந்த உடும்பை தாம் முன்னர் பிடித்த முயலோடு சேர்த்துக் குடலையாகக் கட்டுகிருர் தம்பர்.

''இண்டைக்கு இது போதும் நடவெடா வெள்ளையா''

வெள்ளையன் முன்னே செல்ல வேட்டையை முடித்துக்கொண்டே தம்பர் மண்வெட்டி, கத்தி, குடலை சகிதம் கம்பீரமாகப் பின்னே நடக்கிருர்.

0 0 0

தம்பருக்கு சுமார் எழுபதுதான் வயதிருக்கும். அவருக்கு அந்த வயதென்று யாரும் சொல்லமாட்டார்கள். கணிப்பு என்கின்ற அளவுக்கு உட்படாத மெலிந்த தோற்றம்.

தலையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நரை மயிர்கள் குத்திட்டு நிற்கின்றன. முகம் வெளுத்து நெற்றிச்சதை சுருங்கி... செறிந்த புருவ விளிம்புகளும், கனத்துத் தொங்கிய கன்னத் தசைகளும் மயிர்களால் கவியப்பெற்று அதையும் ஊடுருவிக் கொண்டு அவரது சிவந்த கண்கள் மாலைச் சூரியனைப் போல் பழபழத்துக்கொண்டு தெரிகிறது.

இவையெல்லாவற்றையும் வெற்றிகொண்டு தம்பரின் அகண்ட கூரியநாசி மேலெழுந்து; கம்பீரமாகக் காட்சி தந்துகொண்டிருந்தது.

தம்பரின் மெலிந்த தேகம் உடும்புத்தோலைப் போல் சொரசொரத்து முந்திரிகை வற்றல்போல் சுருங்கி அலையாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கும்.

தம்பர் வயதுக்கு மீறிய செயல் செய்யும் ஒரு பிரகிருதிதான்.

அவரின் உடம்பில் ஒரு நான்கு முழத்துண்டும் ஒரு பொத்தல் மேல் துணியும்தான் கிடக்கிறது. பொத்தல் துணியால் அழகான ஒருதலைப்பாகை கட்டி இருக்கிருர் அவ்விரு துண்டுகளும் சலவைக்குப் போய் எத்தனைநாளோ யாரறிவார்? தம்பருக்குக்கூட அது சலவைக்குப்போட்டு எத்தனை நாளென்பது ஞாபகம் இருக்காது.

அவருக்கு உறவு என்று சொல்லிக்கொள்வதற்கு உயிரோடுயாருமில்லை. அந்த நாய்தான் அவரது அண்ணன்- தம்பி; மகன் மனைவி எல்லாம்.

தம்பரும் நாயும் ஒரே மாதிரி, அந்த நாய்க்கும் வயது கடந்துவிட்டது. மெலிந்து எலும்புகள் உடலைப் புடைத்துக்கொண்டு வெளியில் தெரிய, முன்னங்காலை ஒருபக்கம் சாய்த்து தம்பரைப்போல கம்பீரமாக நடக்கும் ஒரு அலாதி... நாய்தான் தம்பர்... தம்பர் தான் நாய்.

என்று சொன்னுல் போதும் அன்று அல்லது அதற்கு மறுநாள் அந்த ஆசையைத் தம்பர் நிறைவேற்றுவார்.

தம்பரோடு யாரும் வேட்டைக்குப் போவதில்லை. போனுல் ஒரு மிருகத்தையும் தப்பியோட விடக்கூடாது. அப்படி ஏதாவது நடந்தால் தம்பர் சாதாரணமாக இருந்துவிடமாட்டார். அந்தமனிதர்மேல் ஒரே வசைபுராணம் பாடி முடிப்பார்.

இந்த ஒரு காரணத்திற்காகவே அவரோடு யாரும் போவதில்லை. மற்றும்படி அவருக்கு ஊரில் நல்ல மதிப்பு.

அளவோடு வேட்டையாடிக்கொண்டு தம்பர் திரும்புவதும் இதனுல்தான். பலர் வேட்டைக்குப் போனுல் எல்லோருக்குமாக வேட்டையாடவேண்டும். இது அவருக்கு மட்டுந்தானேனென்று... அல்லது இரண்டு அது போதும்.

வயதானகாலத்தில்நாயையும் தம்மையும் வருத்துவதற்கு அவர் விரும்புவதில்லை.

அவருக்குச் சாப்பாடு போட்டுக்கொண்டிருக்கும் அந்த வெள்ளையனுக்கு முதலில் சாப்பாடு வைக்காமல் தான் உண்ணமாட்டார் தம்பர்.

அவரது கூப்பன் எப்போது தொலைந்துபோயிற்ரே அன்றிலிருந்து அவர் சோறு உண்பதில்லை

முயல் இறைச்சியும், உடும்பு இறைச்சியும்தான் அவரது அன்ருட உணவு அவரை உயிருடன் உலாவவிடுவதே அந்த இறைச்சிகள்தான் என்று தம்பர் கூறுவார். எனவே அவரது உயிர் வெள்ளையன். வெள்ளையன் இல்லாதுவிட்டால் உடும்பேது, முயலேது.

0 0 0

''பாற்ரு—பாற்ரு... உதுக்குள்ளான் ... ... உதுக்குள்ளான்''

சூரியன் சாந்தாதோட்டவடலிக்குள் விழுந்துவிட்டான். தம்பர் வேட்டையை இன்னமும் முடிக்கவில்லை.

அவர்கையில் உடும்புக் குடலையோ முயல்குடலையோ இல்லை.

''வெள்ளையா ... இண்டைக்கு ஒண்டெண்டாலென்ன பிடிக்கவேணும் இல்லாட்டி ... என்ரைமானம் ... போயிடும், பாரடி ராசா''

**— நந்தினி சேவியர் —**

தம்பர் அந்தக் கறுத்த நாய்க்கு ஏன்தான் வெள்ளையனென்று பெயர் வைத்தாரோ?. வெள்ளையன் என்று சொல்வதற்கு அந்த நாயில் சாட்டிற்காவது ஒரு சிறு வெள்ளை ... ... ... கிடையவே-கிடையாது. ஆனுல் அதற்குத் தம்பர் இட்ட பெயர் வெள்ளையன். இது ஏனென்பது இன்னமும்கூட ஒருவருக்கும் புரியவில்லை.

தம்பர் வேட்டையில் மிகவும் கெட்டிக்காரர். வேட்டைக்கு அவர் வெளியில் சென்ருல் வெறுங்கையோடு திரும்புவது கிடையாது. வேட்டையில் மட்டுமல்ல வேட்டையைப்பற்றி வர்ணிப்பதிலும் அவர் மகாதீரர்.

கைகளைவீசி வேட்டையில் என்ன நடந்தது; வெள்ளையன் எப்படிப்பிடித்தது, தாம் என்ன செய்தார் என்பதை அவர் பெருமையாக நடித்துக் காண்பிப்பார்.

வேட்டையில் புலியான அவருக்கு ''வெலிச்... சோர் தம்பர்'' என்றுகூட ஒரு பட்டம்.

தம்பருக்கு ஊரில் நல்ல மதிப்பு ... யாராவது...

''தம்பர் முயல் தின்ன ஆசையாய்க் கிடக்குது''

ஒன்றுமே பிடிபடாத ஏமாற்றம் அவரது வார்த்தையில் நிதர்சனமாகிறது

''ராசா உதுக்குள்ளான்ரி கிடக்குதடி கிடக்குதடி ...... பாற்ரு பாற்ரு''

தம்பர் துரிதமாக இயங்குகிருர். இல்லை இயங்குவது போல் நடிக்கிருர். வெள்ளையன் பற்றைகளுக்குள் நுழைந்துவளைந்துமோப்பம் பிடிக்கிறது.

வெள்ளையனில் முந்தைய சுறுசுறுப்பு இல்லை. ஏன் தம்பரும் அப்படித்தான் வயது போய்விட்டது மட்டுமல்ல, மத்தியானத்து சப்பாடுகூட இன்னமும் வயிற்றுக்குள் போகவில்லை.

தம்பர் முன்பென்ருல் இவ்வளவுக்கு வேட்டையை முடித்துவிடுவார். ஆனுல் இன்று அவருக்கு வேட்டையை முடிக்க விருப்பமில்லை

'வெலிச்சோர் தம்பர் வெறுங்கையோடு திரும்புவதா?''—

''பாற்ரு ... பாற்ரு கிடக்கடா எழுப்படா ... வெள்ளையா உதுக்குள்ளான் ... ... உதுக்குள்ளான்''

[12ம் பக்கம் பார்க்க]

'ஈழநாடு' பத்தாண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட இலக்கியப்போட்டியில் பாராட்டுப்பெறும் சிறுகதைகளில் இதுவுமொன்று.

ஈழத்தின் பண்பை நாட்ட 'ஈழநாடு'
தமிழக தனத்தை ஈட்ட 'தம்பி அன் கோ'

## தம்பி அன் கோ.

### ஐந்து ஆண்டு நிதி

(1) ரூ. 100 தொடக்கம் ரூ. 500 வரை ஒருவர் கொடுத்தால்

(2) 5 ஆண்டின் பின் கட்டிய காசுடன் அரைவாசி கொடுக்கப் படும்.

(3) எப்பொழுதும் கட்டிய காசை வட்டியின்றி எடுக்கலாம்

(4) ஒவ்வொரு தொகைக்கும் ஒரு சுட்டு இலக்கம் கொடுக்கப் படும்.

(5) ஒவ்வொரு மாதமும் அதிட்டமுள்ளவருக்கு அவர் கட்டிய சுட்டு இலக்கத்திற்கு உரிய காசில் கால்வாசி இலாபமாகக் கொடுக்கப்படும்.

மறுவிபரங்கட்கு:

## தம்பி அன் கோ

திருநெல்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீருற்று

## ஜே. எம். இராசு

(சென்றவாரத் தொடர்ச்சி)

தெய்வா: டேய் கடலுக்கு கப்பல் பாரமாகுமா? ராமு இந்த மண்ணிலே, இந்த மண்மாதாவிலேசருகும் துளிரும் ஏராளமாக இருக்கடா. அதுக்காக இந்த மண்மாதா கவலைப்படப்போவதேயில்லை. அதுபோல இந்த பெண்மாதாவுக்கும் இது துக்கமில்லையடா ராமு.

ராமு: எணேய் அம்மா நான் இப்படி இருக்கிறதினும் பார்க்க ''செத்துப் போனல்''-

தெய்வா: (கோபமாக) ராமு- (அவன் வாயைப் பொத்திக்கொண்டு அமைதியாக) நீ சொல்லலாமா இப்படி...நான் பெத்த செல்வமே இப்படியெல்லாம் நினைக்காதேடா... நினைக்காதே. ராமு இதுக்கெல்லாம் பாவி நானெடா நான். நான் முற்பிறவியிலே உனக்கு ரொம்பக் கொடுமை செய்துபோட்டேன். அது தான் இப்பிறவியிலே உனக்கு தொண்டு செய்து வாழனும் என்று என் தலையிலே எழுதியிருக்கு (அழுதவண்ணம் இதுக்கு நான்தான் அழவேணும். நீ கொஞ்சமும் அழவோ துக்கப்படவோ கூடாது. சிரியடா ராமு... கொஞ்சம் சிரி...

ராமு: நீ அழுதுகொண்டு என்னைச் சிரிக்கச் சொல்கிறாயே அம்மா-?

தெய்வா: முற்பிறவியிலே நான் சிரித்திருக்கிறேனல்லவா, அதுதான் இப்பிறவியிலே அழுகையை அதற்குக் காணிக்கையாகச் செலுத்திக்கொண்டு இருக்கிறேன். ராமு நீரூற்றுப்போல எந்த நேரமும் கண்ணீரை நான் சொரிந்துகொண்டே இருக்கவேண்டும் அப்பதான் என்னுள்ளம் அமைதியடையும்.

ராமு: [அவள்கண்ணீரைத் துடைத்தபடி] அழாதே அம்மா.

தெய்வா: இந்தக் கையாலே என் கண்ணீரைத் துடைக்கும் நீ, என்னை விட்டுப் போய்விட்டால், பிறகு யாரடா என் கண்ணீரைத் துடைப்பது?

ராமு: அம்மாச்சி.

தெய்வா: என்ர செல்வமே-

[உணர்ச்சிப் பெருக்கில் இருவரும் தங்களை மறந்து, ஒருவரையொருவர் அணைத்துக்கொள்கின்றனர்.]

ராமு உனக்குப் பிடிச்ச குரக்கன் பிட்டு கொண்டு வந்து இருக்கிறேன் பசியாக இருக்குமல்லவா? சாப்பிடு நானும் ஒடு சுமக்கப் போகவேணும்.

ராமு: அம்மாஅந்தப் பை என்ன?

தெய்வா: [ஒரு கையில் இருக்கும் தோற்பையைப் பார்த்துக்கொண்டு] இதுவா- ராமு கடவுள் என்னைச் சோதிச்சுப்பார்க்கிருர். இதுக்க நிறையக் காசு இருக்கு.

ராமு: [ஆச்சர்யமாக] காசா... எவ்வளவு?-

தெய்வா: [மறுகையில் இருக்கும் பிட்டுப் பார்சலைக் காட்டி] இந்தப் பிட்டின் பாரத்தைவிட கொஞ்சம் கூட. ஆமாடா. இந்த ஜென்மத்திலே இதை விரிச்சு எண்ணிப்பார்சகிறதுக்கு, உனக்கும் எனக்கும் சக்தி போதாது மகனே!

ராமு; இவளவு பாரமென்ருல், இலட்சம் என்பார்களே! அதுக்குமேலே இருக்குமா? அம்மா...அம்மா ... இனி நாங்களும் பணக்காரர்களா?.

தெய்வா: ஆமா, இதை வைச்சிருக்கிறவரை நாங்களும் பணக்காரர்கள்தான். சரி...சரி ...கையைப் பிடி எனக்கு நேரமாகுது.

[பேப்பரில் சுற்றப்பட்டிருந்த பிட்டை அவிழ்த்து அதனைச்சேர்த்துப்பிசைந்து, அவனுக்குக் கவளம் கவளமாகக் கொடுக்கிருள்]

ராமு: எணேய் தண்ணி தாவன்?-

தெய்வா: இரு ராசா கொண்டுவாறன்.

[அவசரமாக எழுந்து சத்திரத்துப் பின்வழியால் செல்லுகிருள் சில விஞடி கழித்து சண்முகம் ஆவேசத்துடன் அங்கு வருகிருன்.]

சண்: சனியன் பிடித்த நாய்களே! ''சீ''...இப்படித் திண்ணைமாடு மாதிரி உசிரோடு இருந்துகொண்டு, ஏனடா என் மானத்தை வாங்குகிருய்?-

ராமு: [பயங்கலந்த பணிவோடு] ''மாமா''

சண்: ''தூ''- சொல்லாதே சனியனே, என்ன இழவு இது. எத்தனை நாளுக்குப் பொறுக்கிறது. போறவன் வாறவனெல்லாம் இதே பேச்சு இதே கதை. கொஞ்சக்காலம் எங்கேயோ கிடந்தீங்க, இப்ப இந்த ஊருக்குவந்து என் மானத்தை வாங்குகிறீர்களே. மானத்தைவாங்குகிறீர்களே! எங்கேயடா உன் அம்மா?- சீமாட்டி ஒடு தூக்கப் போயிற்ருவோ?- கர்மம் நீ ஒருத்தன் இல்லாட்டி என்ர வீட்டிலே அவள் என்ன மாதிரி இருப்பாள்?- வயசு போன இந்த நேரத்திலே அவளுக்கு ஏனடாஇவளவு கொடுமை! மூதேசி நாயே, ஒடுகிற ரயிலில் விழுந்து சாகக்கூடாது?

ராமு: என்ர மாமா-

சண்; ஒரு முழக்கயிறு கிடையாது?

ராமு; ஐயோ மாமா-

சண்: குளம், குட்டை, கிணறு தெரியாது?

ராமு: மாமாச்சி நீங்க-

(சத்திரத்திண்ணையில் இருந்து கீழே நழுவி விழுந்து அரைந்துகொண்டு போய் சண்முகத்தின் கால்களை அணைத்துப் பிடித்துக்கொள் கிருன் ராமு.)

சண்: சீ...என்ன கர்மம் செய்தனே உன்ர அப்பன். எங்க குடும்பத்திலே இப்படியொரு அவலட்சணப் பேய் வந்துபிறந்துதே! சனியனே விடுகாலை (தள்ளி விட்டு) சீ... செத்துப்போ.'

(தண்ணீருடன் அங்குவந்த தெய்வானை இதைக் கண்டு அதிர்ந்து, ஆவேசத்துடன் பாய்ந்து அவனது கன்னத்தில் அடிக்கிருள்.)

தெய்வா. என்ன சொன்னுய்? என்ர பிள்ளையைப் பார்த்துசெத்துப்போ என்று சொல்ல நீ யாரடா?

சண்: ''அக்கா.''

தெய்வா: (ஆக்ரோஷமாக) ''தூ - சொல்லாதே'' என்ர மகனைப் பார்த்து செத்துப்போ என்று சொன்ன உன்ர நரம்பில்லாதநாக்கைப்பிடுங்கி, இப்ப இவனுக்கு நான் ஆணம் வைச்சுக்கொடுப்பேன். ஆனு நீ என்ர கூடப்பிறந்தவனுச்சு, போடா போ. எண்டைக்கு நீ பெண்சாதி பேச்சைக்கேட்டு, இந்த இயலாத பிறவியை விளக்குமாத்தாலே அடிச்சியோ, அண்டைக்கு நீ எனக்கு அந்நியனுகிப் டோனுயடா. டேய் சண்முகம் நான் உயிரோடு இருக்கிறவரைக்கும், என்ர பிள்ளையைப் பார்த்து, யாராவது பேசுவதற்கும், அடிப்பதற்கும், அவலட்சணம் என்று சொல்லுவதற்கும் நான் விடப்போவதேயில்லை. அப்படி என் காதுகேட்க யாராவது சொன்னுங்களென்ருல், அவங்க நாக்கைப்பிடுங்கிப் போடுவேன். ஆமா, பெரிய பணக்காரராம். மானம் எங்களால போகுதாம்.

சண்: ஒரு நாளைக்கு நான் குடிக்கிற சிகரெட் செலவே போதும், உங்க இருவருக்கும் ஒரு மாதம் சோறு போடத் தெரியுமா அக்கா?

தெய்வா: ''அக்கா''- அடுத்துச் சொன்னியோ பல்லை உடைச்சுப்போடுவேன். போ இந்தஇடத்தை விட்டு.

சண்: போறேன். ஆனு இங்கே இருந்துகொண்டு என்ர மானத்தைவாங்காதே என்றுதான் சொல்லுகிறேன். உங்க இருவராலும் என் மானம், மரியாதை, கௌரவமெல்லாம் காற்றிலே பறக்குது.

தெய்வா: இப்ப நீ என்ன சொன்னுய்? மானம், மரியாதை, கௌரவமெல்லாம் எங்களால போகுதா? டேய் இங்கே பாரடா. நான் ஒடு சுமந்துதானே உதவாத உன்னை வளர்த்தேன். அப்போ எங்கேயடா உன் மானம், மரியாதை, கௌரவமெல்லாம்- சொல்லேன்ரா? ஏனடா பேசாமல் நிற்கிருய்? இன்றைக்கு சொல்லுகிருய், ஒரு நாள் சிகரெட் செலவு எனக்கு ஒரு மாதம் சோத்துக்குப் போதுமென்று. ஆனு, அன்றைக்கு இந்த அக்கா முன்ருனையைப் பிடிச்சுக் கொண்டு ஒரு நேரச் சோற்றுக்காக, ஒரு மாதம் அழுதியே. அதை இப்ப நீ மறந்திட்டாயா. ஆனு, இந்தத் தெய்வானை அப்படியல்ல-போடா, நீ உசந்தாப் போல பழையதை மறந்திட்டாய். ஆனு, அன்றைக்கும் இன்றைக்கும் என்றைக்கும் இந்தத் தெய்வானை தெய்வானையேதான்.

சண்: இந்தா கொஞ்சம் பணம்கொடுக்குறேன். வேறு ஊரிலைபோய் இவனேடு நிம்மதியாக இரு தேர்தல் வேறு வருகிறது. இவனேடு நீ இங்கேயே இருந்தால் எனக்கு ஒரு வோட்டும் விழாது.

தெய்வா: பகட்டென்ற வோட்டுக்காக பணத்தை வீசி, என்னையும் விலைக்கி வாங்கப்பார்க்கிறியா? சண்முகம் உன்னிடம் காசு வேண்டி நாங்கள் வயிறு வளர்க்கிறதிலும் பார்க்க ஒரு சிரட்டை தண்ணீரிலை விழுந்து செத்துப்போயிடலாம். போடா...போ.

சண்: (இடுப்பிலிருந்து பணத்தை உருவி எடுத்தபடி) ''இரண்டாயிரம் ரூபா'' தாறன் வைராக்கியத்தை விட்டுவிட்டு இதைப் பிடி.

(அவன் கொடுத்த பணத்தை வேகமாகத் தட்டிவிட்டு ஓடிப்போய் சத்திரத்திண்ணையில் இருந்த தோற்பையை எடுத்து விரித்து அவனது முகத்துக்கு நேரே வீசிஎறிகிருள். ரூபாய் நோட்டுக்கள்நாலாபக்கமும் சிதறுகிறது.)

உனக்கும் எனக்கும் கடைசிவரை கிடையவே கிடையாது. எனக்கு நேரமாகுது. நீ இந்த இடத்தைவிட்டு எங்கும் போகாம, திண்ணையை விட்டு கீழே இறங்காம, வடிவாப் படுத்துக்கோ......

(திண்ணையைத் தட்டி போர்வையை விரித்து அவனைப் படுக்கவைக்கிருள். அப்போது நாகரீகமான உடையில் ஜோதி அங்கு வருகிருன்)

ஒரு மணிக்கு முன்னமே சாப்பாட்டோடு நான் வந்திடுவேன்.

ஜோதி: அம்மா.

தெய்வா: (திரும்பி) யாரு ...ஜோதியா?

ராமு: (ஆர்வத்தோடு எழுந்து) என்ர அண்ணே!

தெய்வா: வாடா ராசா. எப்போது வந்தாய்? ஊரிலை பெண்சாதி பிள்ளைகளெல்லாம் சுகமாக இருக்கிருர்களா? (அவன் மௌனமாக நிற்கிருன்) ஏனடா பேசாமல் நிற்கிருய்?

ஜோதி: எவளவுதான் சொல்லியும் கேளாமல் நீ செய்துகொண்டு வருகிற காரியங்களைப் பார்த்தால் உன்னேடுபேச எப்படிமனம் வரும் என்னமோ தூர இடத்திலை இருக்கிறேனே, இருந்தாப்போல வாறனுன் பெத்த தாயை ஒருக்காப் பாத்திட்டுப் டோகலாமென்ருல்...?

தெய்வா: ஒடு சுமந்து வயிற்றைக் கழுவுறதும், தம்பியும் தாயுமாக, சத்திரத் திண்ணையில் படுத்துத் தூங்குகிறதுமாகஇருக்கிருர்களே, இவர்களைப் போய் எப்படிப் பார்க்கிறதென்று யோசனையாக இருக்கோ?

ஜோதி: இருக்காதா பின்னே? காய்க்காத மரத்தைக் கையில் வைச்சுக் கொண்டு காடுமேடெல்லாம் அலைகிறியே, அதைத் தான்சொல்லுகிறேன். வீண்

தெய்வா: காசு... காசு... இப்ப சொல்லடா பாப்போம்? இப்ப நான் நினைத்தால், பொன்னுலும், மணியாலும் அழகான தொட்டில் செய்து அதிலைராமுவை வைத்து தாலாட்டஎன்னுலை முடியும். ஆனு மனச்சாட்சியைக் கொன்று, உன்னைப் போலவாழ நான் விரும்பவில்லை. இதைநீ நல்லா மனசிலை பதிய வைத்துக் கொள்.

சண்: (மலைப்போடு) அக்கா...இவளவு பணம்)

தெய்வா: பல்லைக்காட்டாதே போகிருயா, இல்லையா?

சண்: உன்ர புத்தி உன்னை விட்டு எங்கே போகப்போகிறது. நான் வர்றன். (வேகத்தோடு போகிருன்).

ராமு: அம்மா.

தெய்வா: என்ர ராசா... (தண்ணீரைப் பருக்கியபடி) நீ...குடியடா, மெதுவா. கதைக்க வந்திட்டான் கதைக்க. அவன் என்னை யாரென்று நினைச்சுப்போட்டான்?

ராமு: இந்தக்காசை என்னம்மா செய்யப் போகிருய்?

தெய்வா: இதை தவறவிட்டவங்களுக்கு என்னென்ன சிக்கல்கள் இருக்குமோ? ''பாவம்''... அவங்களை தேடிப்பிடிச்சுக் கொடுக்கவேணும். அப்படி அவங்களிடம் இதைக் கொடுத்தால்தான், நாம வாழுற இந்த வாழ்வு உண்மையான வாழ்வாகும். அதிலையும் இதை வைச்சு வாழவேணுமென்கிற அவசியம் பிடிவாதத்தாலும், வைராக்கியத்தாலும், இவனை உன் சொந்த உழைப்பிலேயே நீ காப்பாற்றுகிருய் என்ருலும் இதனுல் ஏதும் பிரயோசனமே இல்லை. அம்மா பழம் வெம்பிவிட்டது. இனிக் கனியவே மாட்டாது.

தெய்வா: காய்க்கவோ கனியவோ வேணுமென்கிற அவசியம் எனக்கில்லையடா. காய்க்கிற மரமான உன்னைவிட, காய்க்காத இந்த மரத்தாலேதான் எனக்கு நிறையப் பிரயோசனம் இருக்கு. என்றைக்கு நீ ஒரு நல்ல உத்தியோகத்துக்குப் போனீயோ, அன்றையோடு உன்ர பொறுப்பு எனக்குக் குறைஞ்சுபோச்சு. கடவுள் புண்ணியத்தாலே நல்ல சுகவாளியாகவும் இருக்கிருய். அதோடு உனக்கேற்ற ஒரு பெண்சாதியையும் நீயே தேடிக் கொண்டுவிட்டாய். இனிமேல் நான் எதற்கடா உனக்கு?

ஜோதி: அம்மா என்னை இந்த நிலைக்கு நீ கொண்டு வந்த அந்தக்கடமை ஒன்றுதான், இந்த நிலையிலும் உன்னைப் பார்க்க என்னை இங்கு கொண்டுவந்திருக்கு. அந்தக் கடமை-

தெய்வா: நிறுத்தடா கதையை, கடமைக்காகவா என்னைப் பார்க்கவந்தாய். டேய் அந்தக்கடமை என்ற சொல்லை விட்டிட்டு ''அம்மா'' உன்மேலே இருக்கிற அன்பினுலேதான் நான் உன்னைப் பார்க்க வந்தேன் என்று ஒரு சொல் இப்ப நீ சொல்லியிருந்தால்,

[10ம் பக்கம் பார்க்க]

'ஈழநாடு' பத்தாவதாண்டு நிறைவை யொட்டி நடத்தப்பட்ட இலக்கியப் போட்டிக்கு வந்த ஓரங்க நாடகங்களில் இதுவுமொன்று.

''லேடன்'' LEYDEN தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரீ சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்.
74A, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் படங்களில் முத்தக் காட்சி!

"எதிலும் ஒரு ''லெவல்' வேண்டும். இப்போது தமிழ்ப்படங்களில் காட்டப்படும் நெருக்கக் காட்சியே அதிகம். இதற்கு மேலே போனால் மீண்டும் மேலே போகவேண்டும் என்பார்கள். அளவோடு இருந்தால்தான் சுவை அதிகமாக இருக்கும் அளவுக்கு மீறினால் எதிலும் சலிப்பு ஏற்பட்டுவிடும்."

'குடும்பப் பெண்கள் சினிமாவில் நடிக்க வருவதற்கு முன்பாக நன்றாக சிந்தித்து வாருங்கள் என்றுதான் சொல்வேன். இது நிலையில்லாத ஒரு தொழில்; இதில் ஏற்றம் இருக்கும். இறக்கம் இருக்கும் திடீர்ஏற்றமும்சரிவும்இருக்கும். இறக்கம் ஏற்படும்போது அதைத் தாங்கிக்கொள்ளும் சக்தி



இருக்கவேண்டும். ஆண்களுக்கு ஓரளவாவது இன்னல் ஏற்படும்போது, சமாளித்து வேறு தொழில் பார்க்க மனதை மாற்றிக்கொள்ளும் மனவலிமையுண்டு. பெண்களுக்கு ஏமாற்றம் அவர்கள் மனமுடைந்து வாழ்க்கை பாழாகிவிடும். பெண்கள் சினிமா உலகில் மனதைச் செலுத்து முன்பாக ஓரளவு சிந்தித்துச் செயற்பட்டு வாருங்கள் என்றுதான் சொல்வேன்''.

—சினிமாவில் நடிக்க விரும்பும் குடும்பப்பெண்களுக்கு இப்படி யோசனை சொன்னார், தமிழக திரையுலக முன்னணி நடிகர்களில் ஒருவரான ஜெய்சங்கர்!

இதோ அவர் அளித்த சுவையான பேட்டி!

## ஜெய்சங்கர் அளித்த சுவையான பேட்டி

## "கடவுள் வேஷம் போடமாட்டேன்"

### பொழுதுபோக்கு!

கேள்வி: நீங்கள் சினிமாவில் நடிக்க வராதிருந்தால்?

பதில்: எங்காவது ஒரு கம்பெனியில் அதிர்ஷ்டம் இருந்திருந்தால்அதிகாரியாகவோ அல்லது ஒரு சாதாரண சிப்பந்தியாகவோ இருந்திருப்பேன்.

கேள்வி: கல்லூரிநாட்களில் உங்கள் பொழுது போக்கு என்ன?

பதில்; வொலிபோல், பாஸ்கட்போல் ஆடுவேன். மாணவர்மன்ற கூட்டங்கள் நடத்துவேன். தலைவர்களை அழைத்து பேச்சுக்குஏற்பாடு செய்வேன். சட்டக்கல்லூரி வந்தேன். படிப்பதைவிட எனக்கு நாடகம்தான் அப்போதே பிடிக்கும் நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு நாடகம் போடுவேன். மேடைப்பேச்சு, நாடகம் இவற்றில்தான்என்பொழுது போக்கு இருந்தது. நாடகத்தினால்தான் என் சட்டக்கல்லூரிப்படிப்பு பாதியில் நின்றது.

### மாணவரும் அரசியலும்

கே: மாணவர்கள் அரசியலில் பங்குபெறுவது பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: மாணவர்கள்அரசியலை தெரிந்து கொள்வதுநல்லது. ஆனால் ஈடுபடுவது சரியல்ல மாணவர்களை குறை கூறிப் பயனில்லை. அந்தப்பருவத்தில் அவர்களின் மன உணர்ச்சி அப்படித்தான்இருக்கும். மாணவர்கள் வாழ்க்கைப் படிப்புமுறையை திருத்தி அமைக்கவேண்டியது பெற்றோர்-ஆசிரியர்கள்-அரசினர் ஆகியோரின் கூட்டுப்பொறுப்பு ஆகும்.

### குடும்பப்பெண்கள்!

கே: குடும்பப் பெண்கள் சினிமாவில் நடிப்பதுபற்றி?

ப: பொதுவாக சினிமாவில் நடிக்கப் பெண்கள்வருவதற்கு முன்பு நன்றாக யோசித்து வாருங்கள் என்றுதான் சொல்வேன். இதுநிலையில்லாதஒரு தொழில் இதில் ஏற்றம் இருக்கும் இறக்கம் இருக்கும் திடீர் ஏற்றமும் திடீர்சரிவும் இருக்கும். இறக்கம் ஏற்படும்போது அதைத் தாங்கிக்கொள்ளும் சக்தி வேண்டும். ஆண்களுக்கு ஓரளவாவது இன்னல் ஏற்படும்போது சமாளித்து வேறு தொழில் பார்க்க மனதை மாற்றிக்கொள்ளும் வலிமைஉண்டு.

பெண்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டுவிட்டால் அவர்கள்மனமுடைந்து வாழ்க்கை வீணாகிவிடும். பெண்கள் சினிமாஉலகில் மனதைச் செலுத்துமுன்பாக ஓரளவு சிந்தித்துசெயல்பட்டுவாருங்கள்என்றுதான்சொல்வேன்.

### யார் குறறம்?

கே: படத் தயாரிப்பாளர்கள் கொடுக்கும் ரசனை வழியில்தான் ரசிகர்கள் ஒரே மாதிரி படத்தை பார்க்கிறார்கள். தமிழ்ப் படத்தின் தயாரிப்பும் ஒரே மாதிரித்தான் இருக்கிறது. இத்தயாரிப்பின் தரம் பற்றி தங்கள் கருத்து என்ன?

ப: எதைக்கொடுத்தாலும் ரசிகர்கள் பார்ப்பார்கள் என்பதை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். 'ஆலயம்'போன்ற தரமான படங்களை ஏற்றுக்கொள்ளாமல் சாதாரண தமிழ்ப்படங்களை விஷயமில்லாத பொழுது போக்குப்படங்களை ஒரு சில காரணத்துக்காக சிறப்பாக ஓடச்செய்துள்ளார்கள்.

இது படமுதலாளிகள்குற்றமா? ரசிகர்கள் தவறா? என்ற சர்ச்சை இன்னும் முடிந்தபாடில்லை.

### யோசனை என்ன?

கே: சினிமா பற்றி உங்கள் யோசனை என்ன?

ப: இதுதான் சரியான வழியென்று யாரும்துணிந்து சொல்லி வழிகாட்ட முன்வருவதில்லை. மக்களோ அல்லது மற்றவர்களோ எதுவும் சொல்வார்கள் என்றஅச்சத்தாலும், அதன் காரணமாக நாம் மதிப்பு இழப்போம் என்று அஞ்சியும் பல சமயங்களில் உண்மையைச் சொல்ல சிலர் முன்வரவில்லை. சினிமாவைவிட முக்கியத்துவம் தரவேண்டிய விஷயங்கள் உலகில் எவ்வளவோ உள்ளன. அதை விட்டுவிட்டுசினிமாத்தொழிலில் மட்டும் பெரும் புரட்சியை எதிர்பார்ப்பானேன்.

### புராணப்படங்கள்!

கே: நீங்கள் புராணப் படங்களில் நடிப்பதில்லையே ஏன்?

ப: அதில் எனக்கு விருப்பமில்லை. அப்படி வாய்ப்பு வந்தாலும் யோசிப்பேன். ராஜா வேடம் போடத் தயார். ஆனால கடவுள் வேஷம்போடமாட்டேன்.

கே: இந்திப் படங்களில் நடித்ததுண்டா?

ப: இல்லை. நடிக்கவில்லை. எனக்கு வாய்ப்பும் வராது இந்திப் பட முதலாளிகள் தமிழ்நடிகர்களுக்கு அப்படி வாய்ப்புத் தரமாட்டார்கள்.

### கதாநாயகிகள்!

கே: தமிழ்ப்பெண்கள் அதிகம்பேர் கதாநாயகிகள் இல்லையே ஏன்?

ப: நடிகக வராததுதான் காரணம். நடிகைகளில் யாராக இருந்தால்என்ன? எந்தப் பெண்ணாவது நன்றாக நடித்தால்சரி எல்லோரும் இந்தியப் பெண்களே! தமிழ்ப்பெண்கள் சினிமாவில் முன்னுக்கு வரவில்லையே என்பதில் எனக்கு வருத்தமில்லை. அவர்கள்மந்திரியாகவோ இந்தியப் பிரதமராகவோ வரட்டுமே. மேலும் பெரும் தலைமைப் பதவிக்கு புகழோடு முன்வர வேண்டும்.

### முத்தக்காட்சி

கே: 'முத்தக்காட்சி'பற்றி ஒரே பேச்சாக உள்ளதே?

ப: எதிலும் ஒரு 'லெவல்' (அளவு) வேண்டும். இப்போது தமிழ்ப் படங்களில் காட்டப்படுவதே அதிகம். இதற்கும் மேலே போனால் மீண்டும்மேலே போகவேண்டும் என்பார்கள். அளவோடு இருந்தால் தான் சுவை அதிகம் இருக்கும் ... அளவுக்கு மீறினால் எதிலும் சலிப்பு ஏற்பட்டுவிடும்.

### முன்னுக்கு வருவது எப்படி?

கே: முன்னணி நடிகர்கள் இளம் நடிகர்களுக்கு என்ன வகையில் உதவலாம்?

ப: யாருடைய உதவியையும் யாரும் எதிர்பார்த்து முன்னேறமுடியாது திறமை இருந்தால் யாரும் முன்னுக்கு வந்துவிடலாம்.

ஏ. வி. எம். ஒரு ராஜனை அறிமுகப்படுத்தினர். அவர் முன்னேறிவிடவில்லையா?

ஸ்ரீதர் அறிமுகம் செய்த ரவிச்சந்திரன் முன்னேறிவிடவில்லையா?

என்னை ஜோசப்தளியத்அறிமுகம்செய்தார். நானும்எப்படியோ வந்துவிட்டேன். வாணிஸ்ரீ, எஸ். வி. ராமதாஸ், சுருளிராஜன், ஆனந்தன் இவர்களை எல்லாம் தெளியத் அறிமுகம் செய்தார். இவர்கள் திறமை காரணமாக முன்னேறிவருகிறார்கள். சந்தர்ப்பமும் சூழ்நிலையும் தான் உதவ வேண்டும்.

### பாடத் தெரியுமா?

கே: உங்களுக்குப் பாட்டுப் பாடவருமா?

ப: வரும். ஆனால் ரசிகர்கள் கேட்பார்களா என்பது தான் சந்தேகம். நான் வீணாகப் பாட்டுப்பாடி பெயரைக் கெடுத்துக்கொள்வானேன்,

### தமிழ்ப்பட மார்க்கெட்

கே: தமிழ்ப் படங்களுக்கு 'உலக மார்க்கெட் இல்லையே ஏன்?

ப: நம்படங்கள் இலங்கை, சிங்கப்பூர் செல்வதே சிரமமாக உள்ளது. படம் எடுப்பவர்கள் தமிழ் மக்களுக்காகவும், தொழிலுக்கா

(14ம் பக்கம் பார்க்க)

# கிராமப்புறக் கலை வளர்ச்சிக்கு நல்லதொரு எடுத்துக் காட்டு

கடந்த போயா முன்தினம் அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்தில்நடைபெற்ற பெற்றோர் தினவிழாவில் இடம்பெற்ற கலைநிகழ்ச்சிகள், ஈழத்தில் நடிப்புக் கலை வேகமாக வளர்ந்து வருகின்றது என்பதை வெள்ளிடைமலையாக எடுத்துக் காட்டுவதாக அமைந்திருந்தன. கிராமப் புறங்களிலுள்ள பாடசாலை மாணவர்கள் எவ்வளவு தூரம் கலையில் ஆர்வமுள்ளவர்களாக விளங்குகின்றார்கள் என்பது இந்நிகழ்ச்சிகளைப் பார்த்தபோது புலனாகியது. வருடா வருடம், அடிக்கடி பாடசாலைகளில் இப்படியான விழாக்களை நடாத்துவதன்மூலம் மாணவர்களின் இளம் உள்ளங்களில் கலை ஆர்வத்தைவளர்க்கமுடியும் என்பதை அனுபவவாயிலாக கண்டறிந்த வித்தியாலய அதிபர் திரு. வி.விசுவலிங்கத்தின் சலியாத முயற்சிகளைப் பாராட்டவேண்டும். அதிபரின் முயற்சிகள் அனைத்தும் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு ஊக்கமளிக்கும் என்பதில் ஐயமில்லை. விழாவுக்குத் தலைமைவகித்த கல்வி அதிபதி திரு தணிகாசலம், வட்டாரவித்தியாதரிசி திரு. ஏ.எஸ். நல்லையா ஆகியோரின் பாராட்டுதலுக்கு இப்பாடசாலை விளங்குவதற்கு வித்தியால்ய அதிபரின் உழைப்பே காரணம் என்று கூறலாம்.

இந்தநாடகத்தில்பரதனாக நடித்த சி. சபாரத்தினம் மிகவும் திறப்பட உணர்ச்சி வசப்பட்டு நடித்திருக்கிறார். சபாஷ் சபா! அண்ணன் இராமன் காட்டையாள இளையவனாகிய நான் எப்படி நாட்டையாள்வது என்று தாயுடன் சகோதர பாசத்தின் உயர்வை எடுத்துக் கூறும் கட்டத்தில் மனத்தை உருக்குகிறார். வயதில் சிறியவனானாலும் நடிப்பில் நல்ல முதிர்ச்சி!

**எஸ். கே. காசிலிங்கம்**

## கலை அரங்கம்

மாணவர்களால் நடித்துக் காண்பிக்கப்பட்ட 'அறத்தின் சுவடுகள்' என்ற சரித்திர நாடகம் உயர்ந்த சிந்தனையை தூண்டியதோடு நன்கு ரசிக்கும்படியாகவும் இருந்தது.

இலக்குமணனாக நடித்த சபாபதி பத்மநாதன் ஒரு நல்ல குணசித்திர நடிகராக பாத்திரத்தோடு ஒன்றி உணர்ச்சியைப்பிரதிபலித்து நடித்தார்.

இந்த நாடகத்தின் நாடகாசிரியரும் டைரக்டருமான மேற்படி வித்தியாலய சங்கீத ஆசிரியர் திரு. கந்தசாமி தனது அயராத முயற்சியினால் நாடகத்தை திறமையாக மேடையேற்றுவதற்கு காரணமாயிருந்தார் என்றால் மிகையாகாது

மற்றக் கலைநிகழ்ச்சிகளை மேடையில் அளிக்க ஒழுங்கு செய்த கலலூரி சங்கீத ஆசி

[14ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவர் கண்ட சமுதாயம்

— இராஜம்புஷ்பவனம் —

அகத்தியனும் மாமுனியின் அருளில் தோய்ந்து
அருங்குன்றும் பொதிகையிலே தவழ்ந்து வந்து;
அகரமெனும் உயிரெழுத்தால் அகிலம் வென்று
அன்னமென அடிபெயர்த்து முன்ன டந்து
மகரமுகழ் கொடியுடையோன் செல்வி யாகி
மாட சியுறு தமிழ்மன்னர் மடிமேல் ஆடி
இகத்தினிலே நிதம்வளரும், இளமை கொண்ட
இணையற்ற செந்தமிழே தாயே! வாழ்க!

சங்கொலித்து அலைபுரளும் மாதோட் டத்தே
தமிழ்முனிவன் தந்ததமிழ் வாழ்த்தல் நாடி;
சிங்கமென முழக்கமுறும் நாவ லர்கள்
செம்மையுறு பாவலர்கள் சேரும் அவையில்
மங்கையுநான் கவிபாட வந்தேன்! உன்றன்
மலர்ப்பாதம் சிரங்குவித்து வணங்கு கின்றேன்
பொங்கிவரும் மாவலியின் புனலைப் போன்று
புதுக்கவிகள் எழுந்திடவே அருள்க தாயே!

பண்ணூரும் தேவாரப் பாவின் வெள்ளம்
பாலாவித் தென்றலிலே இனிமை சேர்க்கும்
மண்ணோடு அன்றழிந்த நாட்டின் தொன்மை
மறுமலர்ச்சி கொண்டதாலே மாண்பு பெற்று
பொன்னுடாய் மாந்தைநகர் வளர்ச்சி மீண்டும்
புகழ்கேதீச் சரனருளால் பொலிவை யேற்றும்
மண்ணுபுகழ் மாந்தைசன சமூக நிலையம்
மலர்ச்சிக்காய் எடுத்ததுவள் ளுவர் விழாவே.

நறுங்கவிதை டலபடைத்து நமக்குத் தந்த
நல்லறிஞ! நாவன்மை சாலப் பெற்றோய்!
அரும்புலவ! ''தணியாத தாகம்'' கொண்ட
அவைத்தலைவ கரவைக்கிழார் வணக்கம் ஐயா!
மருங்கமர்ந்த மாண்புமிகு கவிஞ ரதிப
மாப்புலவன் வள்ளுவனார் காண்ச மூகம்
பொருளாதா ரச்சிக்கல் அனைத்தும் தீர்ந்த
புதுமைமிகு சமுதாயம் ஆகும் அன்றோ

('தணியாத தாகம்' கரவைக்கிழார் எழுதிய நாடக நூல்)

நங்கையவள் சிரமதிலே சிந்தா மணியும்
நன்மருங்கில் ஆர்க்கின்ற மணிமே கலையும்
செங்கரத்தே விளையாடு வளையா பதியும்
செவிகளிலே படரொளிசேர் குண்டல கேசியும்
செங்கமலத் திருவடியிற் சிலம்பும் பூண்டு
சீராரும் அரியணையில் அமர்ந்த போழ்து
செங்கரத்தே ஆட்சிசெய ஏந்துஞ் செங்கோல்
செந்தமிழர் வள்ளுவனார் குறளாம் அன்றோ?

''உழுதுண்டு வாழ்வார்கள் வழி யமைக்க
உயிருள்ள சமுதாயந் தன்னால் தோன்றும்
பழுதில்லை பிணிவறுமை துன்பம் இல்லை
பண்பாடு வளர்ந்திடவே அறமும் ஓங்கும்
உழுவதினால் உயர்வெய்தி வாழ்வோம்'' என்று
ஒப்புவமை யில்லாதே குறளிற் காட்டி
பழுதில்லாச் சமுதாயம் படைத்தல் தெய்வப்
பாவலனும் வள்ளுவனின் பான்மை அன்றோ!

வைகறையில் குணதிசையில் வான நங்கை
வண்ணஞ்சேர் கோலமிட அங்கு வந்து
பையெனவே எழுகின்ற பரிதித் தேவன்
பாரினிலே புதுப்பொலிவை ஏற்றுதல் போல்
வையத்தே வாழ்வாங்கு வாழ் வதற்கு
வள்ளுவனார் ஏற்றிவைத்தார் குறளாம் தீபம்
ஐயமிலை அவர்கூறும் அரசு கண்டால்
ஆக்கமுறும் சமுகந்தான் அகிலம் எல்லாம்.

மெய்ஞ்ஞான அறிவதனை அள்ளித் தந்து
மேலான கொள்கையெனும் வலிமை யூட்டி;
பொய்யான உலகல்ல புனித வாழ்வு
புரிந்திடவே அமைந்ததிஃ(து) என்று காட்டி
நவ்வென்ற வெழுத்தொப்ப சார்ந்து நின்றால்
நானிலத்தே சமுதாயம் ஓங்கு மென்றே!
மெய்ஞ்ஞானப் பாவலனும் வள்ளு வன்தன்
மேன்மையுற்ற குறளினிலே சொல்லி வைத்தான்.

பண்புடனே வாழுநெறி யாதா மென்றால்
பணிவுடனே யாரிடத்தும் நடந்து கொள்ளல்
அன்புடைமை நீபெற்றால் போதா' திங்கு
அதனூடே உயர்குடியின் பண்பும் வேண்டும்
இன்றழியும் இவ்வுடம்பின் உறுப்பு மட்டும்
என்றும்தான் அழியாது புகழு டம்பு
நன்றேசெய் சமுதாய நலத்திற் காக
நாட்டவரோ டொப்புரவு கொள்வாய் என்றான்.

மாந்தருக்கு மனப்பண்பு இல்லை யென்றால்
மாக்களாக மாறியவர் மறைதல் திண்ணம்
வேந்தரில்லா மக்களாட்சி ஓங்கும் வேளை
வீண்சண்டை பூசல்களால் நலிவு தோன்றும்
மாந்தர்தம் நலன்நாடி சமூகம் ஆனால்
மாநிலத்தில் மலர்ச்சிபெறப் பண்பு வேண்டும்
பைந்தமிழன் வள்ளுவனார் கண்ட சமூகம்
பண்பெனும் அடிக்கல்லில் எழுந்த தன்றோ.

ஆதிநாளில் இல்லாத சமூகச் சண்டை
ஐயகோ இப்போது வந்த தென்னோ?
பாதியிலே; படைக்குவன்றன் பேரால் வந்த
பண்பற்ற இழிநிலையைக் கடிதல் வேண்டி
சாதியிலை பிறப்பொக்கும் எல்லா ருக்கும்
சிறப்பொவ்வா செய்தொழிலால் என்று சொன்னான்
ஓதியுணர்ந் தவருடனே செய்ய தண்மை
உற்றோரும் அந்தணரே என்று சொன்னான்.

செகத்தினிலே சமூகநெறி செம்மை காணச்
செல்வந்தர் செருக்குடைமை அகற்றல் வேண்டும்
அகங்குளிர வறியவர்க்கு வாரி யீந்து
அணையாதே குடிப்பெருமை காக்க வேண்டும்
தகவுடனே முயல்வோர்தம் மனைகள் தோறும்
தான்விரும்பிச் செய்யாள்வந்(து) உறைவாள் நாடு
இகல்கருதா உத்தமனால் உயர்வு எய்தும்
ஈடில்லாச் சமூகமொன்று தழைத்தே ஓங்கும்.

தொல்லுலகில் பல்பொருளும் நலமும் சேர்ந்து
துன்பமிலா இன்பவாழ்வு வாழ வேண்டி
உள்ளத்தில் வள்ளுவனார் கண்ட சமூகம்
உண்மையிலே உலகினிலே தழைத்த தென்றால்
நல்லறமும் நடுநிலையும் மேவி வாழ்வில்
நாமுயர்ந்து மேதினியே சொர்க்க மாக
பல்பொருளும் பல்வளமும் சிறக்க வாழ்ந்து
பாடல்சால் சிறப்பினையிங் கடைவோம் உண்மை.

கவியரங்கில் பங்குகொள எனைய ழைத்த
கருணையுறு சனசமூக நிலையத் தார்க்கும்
செவிமடுத்த செய்யதமிழ்ச் செல்வர்க் கும்யான்
செப்புகிறேன் உளங்கனிந்த நன்றி நன்றி.

[''திருக்கேதீஸ்வர சனசமூக நிலையத்தார் எடுத்த ஈராயிரம் ஆண்டு நிறைவு ''திருவள்ளுவர்'' விழா கவியரங்கில் பாடப்பெற்ற கவிதை'']

# திருவாசகத்தேன்

# மாணிக்கவாசக சுவாமிகள்

# சிதம்பரத்திற் கண்ட நிருத்தக் காட்

## 'கண்டபத்து' விளக்கம்

தருபவர் - க. வை. ஆ. சர்மா

### அந்தமிலா ஆனந்தம்

மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன ஐந்து பொறிகள். தொடுதல், சுவைத்தல், பார்த்தல், மணத்தல், கேட்டல் என்பன இந்த ஐந்து பொறிகளாலும் நுகரும் உணர்வுகள். இவ்வைந்து புலன்களும் தனித்தனியாக என்னைப்பற்றி இழுக்கின்றன. அவை தரும் இன்பமோ, நிலையற்ற அற்ப உலகவாழ்வாகும். அந்த உண்மையை உணராமல். இவ்வுலக வாழ்வே மேலானது என்று நம்பி, மயங்கி இறந்து, பின் ஆகாயத்தில் ஆவி ரூபத்தில் அலைந்து, கொடிய நரகில் விழுந்து துன்பப்படுகிறவன் தமியேன். அப்படிப்பட்ட என்னைத் தடுத்து நிறுத்தி, என் மனத்தைத் தெளிவுபடுத்தி என் சிற்றறிவாகிய ஆன்மபோதத்தை ஒழித்து, சிவபோதத்தை வருவித்து என்னை ஆட்கொண்டருளிய எல்லையில்லாத ஆனந்தத் திருக்கூத்தை, அழகிய சிதம்பரம் என்னுந் தில்லையம்பலத்திற் கண்டுகொண்டேன். (1)

### பிறப்பறுத்த இணையிலி

யான் இப்படிப் பிறந்திருப்பது, யான் முன்னே செய்துகொண்ட வினைப்பயனேயாகும். அதனால் எனக்கு வருந்துன்பத்தை நீக்கி, அருள்தர இருக்கும் இறைவனை நினைத்து வணங்கத் தெரியாமல் மனந்தளர்ந்து துன்புற்றுக் கிடக்கின்றேன். அப்படிப்பட்ட என்னை வலியவந்து ஆட்கொண்டு இனிமேல் எனக்குப் பிறவித் துன்பமே இல்லாமல் நீக்கியருளியவர், தமக்கு வேறாக உயர்வு ஒப்பு இல்லாத சிவபிரான் ஆவர். அப்பெருமானை எல்லா ஆன்மகோடிகளும் தொழுகின்றன. அவ்வாறு அருள் பெருக்கும் ஆனந்தக் கூத்தப்பிரானைத் தில்லையம்பலத்திற் கண்டு கொண்டேன். (2)

### தித்திக்கும் சிவபதம்

எனது உருவமே இது தான் என்று எவருக்கும் புலப்படாமல் நான் கருவாய்க்கிடந்த காலத்திலேயே என்னுள்ளே புகுந்து நிலைத்து நின்றான் இறைவன். அவ்வாறு புகுந்த பெருமான் என்னைக் கருவிலேயே திருந்தச் செய்தார்; அல்லது என் கருத்தைத் தன்னிடத்தேயே இருத்திக் கொண்டார் மேலும் அவர் எனது ஊனுடம்பினுள்ளும் புகுந்து அவரது இயல்பான தடைப்படாத பெருங் கருணையினால் தமியேனை ஆண்டு கொண்டார். திருப்பூந்துருத்தியில் எழுந்தருளியுள்ள பிரானுடைய இன்பமயமான சிவபதவியை—சிவபிரானோடு கலந்த நிலையை. நாயினுங் கடைப்பட்ட தமியேன் மெய்யன்பு காரணமாக அழகிய தில்லையம்பலத்தில் கண்டுகொண்டேன். (3)

### பசு பாசம் அறுத்தவன்

அருள் நூல்களைக் கல்லாமையால் உண்டான மிகக் குறைந்த அறிவோடு கூடிய தமியேன், நாயினுங் கடைப்பட்டவன். அப்படிப்பட்ட சிறியேன் அறிவுத்திறமுடையவனாக வந்து அருளழகு பெற்றுச் சிறக்கும்படி திருப்பெருந்துறையிலே குருந்தமர நீழலில் பரமாசாரியராக எழுந்தருளி வந்திருந்து, யாவருங்காணும்படியாகச் சிவபிரானார் எனது பசுபாசத்தை அறுத்து ஆட்கொண்டார். அப்பிரானரது அருள் திறத்தை, எவருந் தரிசித்து வணங்குந் தில்லையம்பலத்தேகண்டுகொண்டேன். (4)

### கோதிலா அமுதானன்

சமுத்திரத்திலுள்ள நீர்ச் சுழிகளைப்போல, உலகியல் வாழ்விலே சில சுழிகள் மனிதரைத் தடுமாற்றமடையச் செய்கின்றன. அவர் உயர்ந்தஜாதி, இவர் தாழ்ந்த ஜாதி; அவர் உயர்குலத்தவர், இவர் இழிகுலத்தவர்; அவர் உயர்பிறப்பாளர், இவர் இழிபிறப்பாளர் என்பனவே உலகியல் வாழ்விற் சுழிகளாம். இந்தச் சுழிகளுக்குள் அகப்பட்டுத் தடுமாற்றம் அடைவோர் அறியாமை மிக்கவராவர். சமுத்திரம் இருக்கும் வரையும் நீர்ச்சுழிகளை நீக்கிவிட முடியாது. ஆனால் நீர்ச்சுழிகளில் அகப்படாமல் புத்திசாலியான மீகாமன் விலகித் தன் கப்பலைச் செலுத்துவான். அதுபோல, உலகம் உள்ளவரையும் சாதி, குலம், பிறப்பு என்னும் சுழிகள் இருக்கவே இருக்கும். அவற்றை அழிக்க எவராலும் முடியாது ஆனால், சாதி, குலம், பிறப்பினால் உயர்வு கற்பிப்பவர் இறுமாப்புக்கொள்வதும், அவற்றால் இழிவு கற்பிப்பவர் மனம் மாழ்குவதுமே தடுமாற்றங்களாம். அவ்வாறு தடுமாறும் நாயினுங் கடைப்பட்ட தமியேனுக்கு நேர்ந்த துன்பங்களை நீக்கி ஆட்கொண்டருளி, அறியாமைக் குணம், தமர்பிறர் என்ற பேதம், யான் எனது என்ற அகங்கார மமகாரங்கள் என்பவற்றை அழித்துக் குற்றமற்ற அமுதான கூத்தப்பிரானைச் சீர்பெற விளங்கும்தில்லையம்பலத்திற்கண்டு கொண்டேன். (5)

### உலகுடைய ஒருமுதல்

பிறத்தல், இறத்தல் என்னுஞ் சூழல் ஆன்மாவை விடாது பற்றியுள்ள ஒரு பெரும் பிணிப்பு. தமியேனை அந்தப் பெரிய பிணிப்பிலிருந்து விடுவித்தும், உடலுக்கு வரும்நோய், மூப்பினால் வரும் தளர்ச்சி, சுற்றத்தார் மேற்பற்று என்னும் இவற்றினால் நேருந் தீமைகளும், முற்றாகத் தமியேனைவிட்டு நீங்கும்படி செய்தும் ஆட்கொண்டருளிய. உலகுக்கெல்லாம் ஒரே முதல்வனாகிய பிரானை, நெருங்கிய சோலைசூழ்ந்த தில்லைநகரில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் தில்லைமூவாயிரவரும் தேவர்களும்வந்துவணங்கும் அருங்காட்சியைக் கண்டு கொண்டேன். (6)

### திருப்பாதம் கட்டுவித்த வித்தகன்

அன்புடைமை, நற்குணம் என்பவற்றோடு சிறிதேனும் தொடர்பில்லாததமியேனது ஆன்ம இயல்புகளை அறுத்தருளினான் இறைவன். அவ்வளவோடமையாது, என்னைக் கண்ட உலகினர் யாவரும் இவன் பித்தன் எனச் சொல்லும்படி பைத்தியக்காரனாக ஆக்கிவிட்டான் ஆனாலும் என் சித்தம் எனப்படும் திண்ணிய கயிற்றினால் தமது திருவடிகள் சிறிதும் விலகாதபடி கட்டுவித்துக் கொண்ட சாமர்த்தி அப்பெருமான். அவர விளையாடல்களைத் தில் பலத்திற் கண்டு ெ டேன்.

### அளவிலா ஆனந்த அளித்தவன்

எல்லையில்லாத எ கள் ஒழிவின்றி என் த்தே கிளர்ந்து எ றன. அவற்றால் அ படுகின்றேன். செ இது. தவிர்வது இது அறியாமலும், இ வருவது யாதோ என யாமலும் பயனற்றவ கிடக்கின்ற தமியே அளவிலா ஆனந்தம் த்து, ஆட்கொண்ட ஞன் இறைவன். வ இல்லாத ...ானவ தொழுகின்ற தில்லைய த்தே எம்பிரானுரைக் கொண்டேன்.

### வான்கருணை தந்த

இறைவனை அடை முறையும், ஆடைவ வரும் பயனும் அ தமியேன். நாயினும் க பட்டவன். தமியேன த்தின்கண் மாயாமலத் போக்கும் ஞானஒளிம வளரும்படியாக, இல்லாத வினைப்பய னையடையாமற் செ ஆணவம், கன்மம், ம என்னும் மும்மலங்க போக்கி மேலான ணையை இறைவன் த ளினான். அப்பெரும நால்வேதங்களும் ன்ற ...லையம்ப கண்டு கொண்டேன்.

### கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளி மரகதம்

நிலம், நீர், தீ, காற்று, என்னும் ஐம்பூதங்க யும், சுவை, ஒளி, ஓசை, நாற்றம் ஐ அறிவுகளாகியும், எ பொருள்களுமாகியும், ற்றின் வேறுபாடுகளா எல்லாமாய் பேதம் லாத பெருமையு வனை, ஆன்மகோடிக வரும் துன்பங்களை லாம் கெடுத்து ஆட்ெ டருளும்ஒளியார்ந்த ப மணியாம் அன்னைவடி வனை வேதங்கள் அ தும் தொழு வண தில்லையம்பலத்தே கொண்டேன்.

(

## நுமாடாவின் சாதனை

நுமாடா என்ற இ வயதுள்ள ஜப்பானிய ஒரு விமானத்தில் 52 4 நிமிட நேரத்தில் உ தைச் சுற்றிவிட்டு கியோ திரும்பியிருக் இந்த உலகப்பிரயாண ஸான்பிரான்சிஸ்கோ, யோர்க், லண்டன், ப ரோம், டெஹ்ர கெய்ரோ, டில்லி, கொக், ஹொங்கொங் முக்கிய தலைநகரங்கள் லாம் அவள் இறங்கி தற்குமுன் உலகை றிய ஒரு ஜப்பானிய இ னுக்கு 59 மணி 40 நி பிடித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ட்சி

(7)

னந்தம்

(8)

தந்தவன்

(9)

(10)

வின்

# கார்காலக் கண்காட்சி

சீதப்புனலனை வானக்
குளத்திடை வெண்
ணிலாவே-ஒரு
தேசு மிகுந்த வெண்
டாமரை போன்றனை
வெண்ணிலாவே.

திருக்கார்த்திகையன்று பூரணசந்திரன் ஆகாய வீதியிலே எத்தனை அழகாகப் பவனி வந்தான் பார்த்தீர்களா? கவி பாடியதுபோல வானக் குளத்தில் வெண்தாமரை மலர்ந்திருந்தது. இவ்வாண்டு கார்காலத்துக் கார்த்திகைச் சந்திரன் மிக அழகாகத் தோன்றினன். அன்றைக்கென்று கார்மேகம் முற்றுகக் கலைந்துவிண்வெளி நிர்மலமான நீலக்கடலாகத் துலங்கியது எங்கும் அமுத கிரணங்களை வாரிப் பொழிந்து கார்த்திகைத் தீபங்களுடனே போட்டியிட்டு இருளை விரட்டிக் கொண்டிருந்தது நிறைமதி.

அன்றைக்கு அதில் தோன்றிய மாசுமறு பூ உலகை நோக்கி சந்திரன் மென்முறுவல் செய்வதாக என் கண்களுக்குத் தென்பட்டது. மற்றவர்களுக்கு எப்படியிருந்ததோ? விஞ்ஞானிகளின் தூதர்கள் பாறைக்கல் ஒன்றைப் பெயர்த்தெடுத்துக் கொண்டு வந்துவிட்டதால் சந்திரத்தரையில் ஒருவேளை பள்ளம் வீழ்ந்திருக்குமோ என்றும் சிலர் நினைத்திருப்பார்கள். அவ்வாறு மனதில் எண்ணியவர்களுக்கு சந்திரன் ஒரே சோக பிம்பமாக்த் தோன்றியிருந்தாலும் கூட அதனையிட்டு நாம் வியப்படைய வேண்டியதில்லை.

நிலாமலர்ந்த இரவில் வளைந்துவளைந்து சென்றஒரு கிராமத்தின்சாலை வழியாகப் போய்க்கொண்டிருந்த போது ஓரிடத்தில் சாலையின் இரு மருங்கிலும் வீட்டு வாசல்களில் ஏற்றிவைத்திருந்ததீபவரிசை கண்கொள்ளாக் காட்சியாகவிருந்தது. இதே சமயம் தெருவோரமாக ஒரு கோவிலிலும் சொக்கப்பனை வானளாவக் கொழுந்துவிட்டு வளர்ந்து 'என் அடி முடியைக்கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்' என்று அதனைச்சுற்றிக்கூடியவர்களுக்கு சவால்விட்டது. அது ஒரு மாரியம்மன் கோவிலாம். தீபாலங்காரத்தினல் என்னைக் கவர்ந்த அந்தக் குடியிருப்பு அளவெட்டி வடக்குக்கிராமத்தில் ஒரு பகுதி என்று சொன்னர்கள். காந்தி நூற்றுண்டுவிழா நினைவாக 'மகாத்மா வீதி' என்று ஒரு சாலைக்குப் பெயரிட்டிருக்கிறார்கள். நிலாவெளியில் அதுவும் என் கண்ணில்பட்டது.

சந்திரமண்டலம் சென்று பூமியை நோக்கி விரைந்து கொண்டிருந்த வீரர்களுக்கு இவ்வாண்டு கார்த்திகைச் சந்திரனை இத்தனை அழகாக அங்குபார்க்கக்கிடைத்திருக்காதே என்று எண்ணிய போது அது விஷயம் மனதுக்கு வருத்தமாய் இருந்தது. இரண்டரை லட்சம் மைல் தொலைவாகப்போய் அதனை அணுகியபோது சந்திரமண்டலம் வெகுகாலத்துக்குமுன் எப்பொழுதோ சூளைவைத்து சுட்டெரிந்து போன ஒரு பெருங் கல் கோளமாகத்தானே காட்சியளித்ததாம்.

தடாகத்தில் அழகாக மலர்ந்திருந்த தாமரைப் பூவை கவிஞன் ஒருவன் எட்ட நின்று பார்த்துரசித்தான். அதனைக் கைப்பற்றி ஆராய்ச்சி செய்ய ஆசைப்பட்ட சயன்ஸ்பேராசிரியர் அம்மலரைக் கொடியிலிருந்து இதழ்இதழாகப் பிய்த்து காம்புவேறு தாது வேறு பித்துவேருக மலரையே உருக்குலைத்து வீசினன். குளத்தில் தண்ணீர்

## மணிப்புறவம்

எடுக்க குடத்துடன் வந்த நாட்டு வைத்தியரின் குமாரி மலரில் ஒன்றைத் தன் கூந்தலில் சூடிக்கொண்டு வீடு திரும்பியபோது வைத்தியர் தாமரைப் பூவைக்கண்டமாத்திரத்தே ஒரு பெரிய சாக்குப்பையை கையில் எடுத்துக்கொண்டு குளத்தங்கரையை நோக்கி ஓடினர்- அத்தனை மலர்களையும் பறித்து பானையில் போட்டு அவித்து எண்ணை காய்ச்சுவதற்காக. குளத்திலே தாமரை மலர்ந்திருந்ததை ஓர் எருமைமாடு பார்த்தது, அப்பொழுது அதற்கு நாவில் நீர் ஊறியது. தடதட வென்று சேற்றினுள் இறங்கி அத்தனை மலர்களையும் வாயில் போட்டுக் கொண்டு தண்ணீருக்குள் கிடந்து உருண்டுபுரண்டது.

மனதுக்கு ரம்மியமான பொருளை இதுமாதிரி பல வகையாக அனுபவிக்கிறார்கள் பல்வேறு நோக்குகளுடனே அதனை அணுகுகிறார்கள்.

திருக்கார்த்திகை தினத்தன்று கீரிமலையிலிருந்து தெற்குநோக்கி காட்டுவழியாகச் சென்ற நகுலேஸ்வர சாலையில் ஓடிய ஓர் மோட்டார் காரின் முகட்டில் பறந்து சென்று உட்கார்ந்து கொண்டேன். கண்ணுக்கு எட்டிய தூரம் ஒரே பனைக் காடாக தோன்றியது அப் பிரதேசம்.

அடேயப்பா எத்தனை ஆயிரம் பனைகள்! அந்தப் பனைகளில் ஒன்றில் நான் கள்ளத்தனமாக இலவசபயணம் செய்த மோட்டார் வாகனம் எங்கே போய் மோதிடுமோ என்று ஒரோர் சமவியம் எண்ணித் திகில் உற்றேன். அப்பொழுதுசூரியன் மேற்குப் பனைகளினூடே இறங்கி அடிவானத்தில் மெதுமெதுவாக மறைந்து கொண்டிருந்தது. குடதிசையில் பற்றிப்படர்ந்த செக்கர் வானமும், தீப்பிழம்பாக சுழன்ற செம்பரிதியின் தோற்றமும் பனைகளினூடே அப்பொழுது எங்கேயோ தீப்பற்றிக்கொண்டு விட்டதோ என்று எண்ணித் திகைப்படையும்படியாக இருந்தது. இப்படி அந்திமயக்கமும் விண்வெளி தீபலங்காரமும் தினமும் பார்க்க கிடைக்குமென்றல் அது எத்தனை பெரும் பாக்கியமாய் இருக்கும். பனைவட்டிலே கச்சிதமாக ஒரு கூடு கட்டிக்கொண்டு ஆயுட்காலம் முழுவதும் அங்கேயே உட்கார்ந்து விடலாமே! அத்தனை அழகாக இருந்தது அந்த மாலைக்காட்சி. பச்சைப் பசேலென்றிருந்த பனைஓலைகளும் அவற்றின் மஞ்சள்நிறக்காம்பும் கங்குகளும் காயும் நுங்கும் காவோலைகளும்கூட மாலைப் பரிதி கக்கிய வர்ணக்குழம்பில் தோய்ந்து பொன் மெருகுஏறி விண்ணுலகத்துக் கற்பகதருவாகப் பொலிந்தன. ஒருவருக்கொருவர் வர்ணநீர் தெளித்து கொண்டாடும் கோகுலயவனரின் ஹோலிப்பண்டிகையோ அல்லது சரவணப் பொய்கையில் அக்கினிப் பொறிகள் ஒன்று சேர்ந்த கார்த்திகேயன் ஜனன மஹோற்சவமோ என்றெல்லாம் இவ்வாறுக [illegible]

## தரும்

தென்பட்ட இயற்கைமோகனத்திலும் மோட்டார் ரதத்தின் சவாரி சுகத்திலும் சொக்கிப்போயிருந்தேன்.

இப்பொழுது மோட்டார், வேகம் குறைந்து மெதுவாகச் செல்ல ஆரம்பித்திருந்தது. உள்ளே இருந்து பேச்சொலிஎன் காதில்வீழ்ந்தது.

அளவெட்டிக்கு புகழ் தேடித்தந்த இலக்கிய நண்பர்கள் கோஷ்டியை வளர்த்த காட்டுவெளி இதுதானப்பா: முருகானந்தன், கதிரேசன், அ. ந. கந்தசாமி, உருத்திரமூர்த்தி, குகராசா, தர்மலிங்கம் இத்தனைபேரும் பத்திரிகையும் சஞ்சிகையுமாக மாலைக்காலத்தில் பனை நிழலிலே கூடியிருந்து படித்து விவாதித்து கலந்துரையாடி பாட்டுப் பாடி கூச்சல் போட்டுத்தான் ஊரிலே வாசிகசாலை கட்டும் எழுச்சி பெற்றதுடன் பின்பு எழுத்தார்வ முற்று இலக்கிய உலகிலும் பத்திரிகையுலகிலும் புகுந்தார்கள். கடைசி இருபேரைத்தவிர மற்றவர்களை இன்றைக்கு எழுத்துலகம் அறியும். இன்சினியர் வேலு

சாமி சிறு வயதிலே ஆடு மேய்க்கும் சிறுவர்களுடனே சேர்ந்துகொண்டு இங்கெல்லாம் காட்டுக் கூச்சல் போட்டு கும்மாளம் அடிப்பார். பிறகு பிறகு என்ன உருக்கமாக திருவாசகம் பாடத்தொடங்கி விட்டார். சங்கீதத்திலேதான் என்ன பிரேமை அவருக்கு! மார்கழி திருவெம்பாவை மறந்தாலும் வேல்சாமியை இலங்கை வானெலி நேயர்கள் மறக்க மாட்டார்கள். சில ஆண்டுகளுக்கு முன்னதாக கொழும்பிலிருந்து விடுமுறையில் வந்திருந்த வேல்சாமியை இதே பனைக்காட்டு வெளியில்தான் கடைசியாகப் பார்த்தேன். கையிலே ஒரு டிரான்சிஸ்ரருடன் கீரிமலைப் பாதையில் நண்பர்களுடன் கூட நடந்து போய்க் கொண்டிருந்தார். அங்கே பாரும்அதோ அதுதான் சுடுகாடு.........

காரினுள்ளே மெதுவாக எட்டிப்பார்த்தேன். ஓகோ புதுமணத் தம்பதிகள் மோட்டார் சுடுகாட்டுப் பாதையில் இறங்கிப்போய்க் கொண்டிருந்தது. பாதை ஓரமாக இருபக்கமும் வளர்ந்திருந்த பனை வடலிகள் காரில் மருவி சலசலத்தன. கார்ச்சாரதி மிக்க கவன சிரத்தையாக காரைச் செலுத்திக் கொண்டிருந்தார். மாப்பிள்ளையாகப் பட்டவன் மூச்சு விடாமல் இவ்வாறு பேசியபோது அந்தப் புதுப் பூங்கோதை மான் போல மருள மருள விழிக்கலானள். 'தொட்டுப் பாருங்கள் ஜோடிப் பூவைப்போல கன்னங்கள் தட்டிப் பாருங்கள் தாளம் போடும் ஆசைக் கிண்ணங்கள்' என்று காருக்குள்ளே ஒரு மூலையில் வைத்திருந்த 'டிரான்சிஸ்டர்' இனிமையாகப்பாடிக்கொண்டிருந்தது. குவளை மலர் போன்ற விழிகள் ரோஜா கண்ணங்கள் எள்ளுப் பூப் போன்ற நாசி' மாதுளை முகிழொத்த அதரங்கள் அதிலே செவ்வந்தி மலர்ந்தது போன்ற சிரிப்பு, முல்லையைப் பழிக்கும் பல் வரிசை [illegible]

## பசுந்துளிர்

வர்ணிப்பது போல அவள் மேனி முழுக்கவும் ஒரு பூந்தோட்டமேதான். பூந்தோட்டத்தில் நடுவே ஒரு பூத்தொட்டிபோல அவள் கூந்தலிலே மலர்ச்சுமை நறுமணம் பரப்பியது. ஆனல் இப்படி தேவ மனேஹரியான புஷ்பதேவியை சுடுகாட்டுப் பக்கமாக பாவிப் பயல் ஏன் அழைத்துச் செல்கிறனே? இவ்வூரில்தானே ஒருவனை சினிமாத்தியேட்டருக்கு அழைத்துச் சென்று படக்காட்சி காண்பித்து விட்டு அதன்பின் சுடுகாட்டுக்கு அழைத்துச்சென்று மறு உலகத்தையே காண்பித்ததாகஒரு கொலைவழக்கு சில காலத்துக்கு முன் கோட்டுக்கு வந்தது. ஒரு

வேளை... அப்படியும் இருக்குமோ? சே, என்ன அழகான பெண், தட்டிப் பார்த்தால் நாதம் பேசும் பொற்கிண்ணங்கள் போல அவளது கன்னக் கதுப்புகள்...... மயானருத்ரா நீ தான் அவளைக் காப்பாற்றவேண்டும்

என் மனதுக்கு ளாக இப்படியெல்லாம் எண்ணி கல

சுகமடைந்திருந்தபோது கார் சுடுகாடடைவலம்வந்து அஞ்சல் செலுத்துவதுபோல ஒரு வட்டமடித்துக் கொண்டு அப்பால் ஒழுங்கைப் பாதையில் திரும்பி மறுபடியும் தெருவில்ஏறியது-புதுமணத் தம்பதிகள் கல்யாணம் ஆவதற்கு முன் காதல்சிட்டுகளாகவும் இருந்திருப்பார்கள் போல் தெரிகிறது. அதனல் தான் இறந்துபோன தங்கள் மூதாதையரை நினைத்து சுடுகாட்டில் அஞ்சலி செலுத்திச் சென்றர்கள் போலும். இந்தக் கார்த்திகைத் திருநாளுக்குத்தான் என்ன மகிமை! தெருவிலே தீபவரிசையைப் பார்த்தபோது எனக்கும் என் கூடு ஞாபகம் வரவே தெருவோரம் எரிந்து கொண்டிருந்த பச்சைக்கிளுவந்தடித் தீப்பந்தங்களிலொன்றைப்'பக்' கென்று அணைத்து இறக்கைக்குள் மறைத்து வைத்துக்கொண்டு விர்ரென விண்ணில் தாவினேன். தீப்பந்தத்துக்கு காவலிருந்த வாண்டுப்பயல் அப்போது எழுப்பிய கூக்குரல் விண்ணில் வெகுதூரம் நான் சென்று மறையும்வரை என் காதில் கேட்டுக்கொண்டிருந்தது.

0 0 0

### அ. ந. க.

அநேகமாய் முப்பது ஆண்டுகளுக்கு முன்னதாக அளவெட்டி வடக்கில் இலக்கிய உணர்வுபெற்ற நட்சத்திர மாணவர் கோஷ்டி ஒன்று ஒரே பள்ளிக்கூடம், ஒரே கிராமம் ஒரே சுற்றம் சூழலாக அரும்பி முகிழ்க்கத் தொடங்கியிருந்தது. ஐந்தோ ஆறுபேரைக் கொண்ட இக்குழுவில் அ. ந. கந்தசாமி அப்பொழுதே ஒளிகாலும் நட்சத்திரமாக ஒளிர்ந்தார் அவரதுவிவேக ஆற்றல் வகுப்பு அறையிலும் சுடர்விட்டது பள்ளிக்கூட பொதுமேடையிலும் சுடர்விட்டது. ஊரிலே மாணவத்தோழர்களின் மத்தியிலும் அது ஒளிர்ந்தது. எழுத்துத்துறையை தொட்டுக் கொண்டபோது அ. ந.

கந்தசாமி அங்கும் நன்கு பிரகாசித்தார். மாணவராயிருந்த போதே பல்வேறு புதிய கருத்துக்களைப்புரிந்து கிரகிக்கும் மதிநுட்பமும், தர்க்கித்து விவாதித்து தன் கட்சியைத் தாபிக்கும் நுண்ணறிவும் சுயசிந்தனையும் ஆராய்ச்சியும் அவரிடம் சுடர்ந்ததைப் பலரும் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. இந்த அளவெட்டி வடக்கு மாணவர் குழுவினர் பின்னளில் யாழ்ப்பாணத்து நட்சத்திர எழுத்தாளராகவும் கவிஞர்களாகவும் புகழ் பெற்றர்கள். திரு அ. ந. கந்தசாமி ஆனையிறவு தாண்டி தென்னிலங்கை சேர்ந்ததன்பின் அவரது தாய்நாட்டு வாழ்க்கையும் வளர்ச்சியும் அவருக்கு நினைவும் கனவுமாகிப்போய் ஆளே வேறுமனிதராகிவிட, அவரது ஊரும் சுற்றமும் நண்பர்களும் அவர் எப்பொழுதாவது பத்திரிகைகளில் எழுதியதை வாசித்து அவ்வளவில் திருப்தியடைய வேண்டியவர்களானர்கள்.

அ. ந. க. பல பத்திரிகைகளில் வேலைபார்த்தார். பல கட்சிகளில் சேர்ந்துஉழைத்தார். கடைசியாகஅரசாங்க சேவையிலும் சேர்ந்து பணியாற்றினர். சிறுகதை நாவல், நாடகம் எல்லாமே

எழுதினர். ஆங்கிலத்தில் எழுதும் ஆற்றல்கூட நாளடைவில் கைவரப்பெற்றர். இப்படியாக தன் போக்கில் போய்க்கொண்டிருந்த நெடுவழியில் பொத்தென பொன்றி வீழ்ந்ததுபோல மிக இளம் வயதில் அவரது திடீர்மறைவுச் செய்தியைக் கேட்ட நாளில் நான் அதிர்ச்சியுற்றேன். அவரது வாழ்க்கையும் அதன்பொருளும் அன்னரின் இலக்கிய முயற்சிகளும் சாதனைகளும் அவற்றின் தரமும் மற்றும் எழுத்தாளர்களினது நீண்ட இலக்கிய யாத்திரைக்கதை போல இனிமேல்தான் முடிவான உருப்பெறவேண்டும்; தொகுத்தமைக்கப்பட வேண்டும். ஒரு நல்ல எழுத்தாளர் சிறந்த இலக்கியநண்பர் அவருடன் நன்குபழகியவர்களுக்கு அவர் மறைவு பெருந்துக்கம்.

## லீப் இயர் எப்படித் தோன்றியது

ஜூலியஸ்ஸீஸர் காலத்தில் ஒருவருடத்தில் 365 நாட்கள் என்ற கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டது. இதனல் 1500 வருடங்களில் ஐரோப்பாவில் குளிர்காலம் ஆரம்பமாவதற்கு 10 நாட்களுக்கு முன்பே கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாடப் பெற்றது. இந்தப் பிழையை 13-வது போப் ஆண்டவர் கிரிகரி நிவர்த்தி செய்தார். கத்தோலிக்க மதத்தலைவர் என்ற முறையில் அவர் செய்த மாறுதலை எதிர்ப்பின்றிக் கிறிஸ்தவ உலகம் ஒப்புக்கொண்டது. அக்டோபர் 5-ம் திகதி கொண்டாடப்பெற்ற பெரிய வெள்ளிக் கிழமை' (Good Friday) யை அக்டோபர் 15ம்திகதிஎன்று கிரிகரி நியமித்தார். அதன் பிறகு, ஐரோப்பிய 'காலண்டர்' மாறிற்று. லீப் இயர் (Leep year) நாட்கள் சேர்க்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரூற்று

[6ம் பக்கத் தொடர்ச்சி]

பத்துமாதம் சுமந்து பெற்ற இந்த வயிறு இப்ப குளிர்ந்திருக்குமடா, ஜோதி நிறைந்திருக்கும். உன்னைப் பெத்து வளர்த்து படிப்பிச்சு மலை போல இவ்வளவு பெரிய ஆம்பிள்ளை ஆக்கிவிட்டேனே! அதுக்கு உன்னிடமிருந்து நான் எதிர்பார்ப்பது என்ன தெரியுமா? ''அம்மா'' வென்ற அன்பான ஒரு சொல்லைத்தான். அதுவும் பட்ட கடனைத்தீர்க்கிற கடனாளியைப்போல கடமைக்காகச் சொல்லாத, அன்பான, பாசமான, சொல்லைத்தானெடா. ஜோதி ...

ஜோதி: கடைசிவரை இப்படித்தானு இருக்கப் போகிறுய்?

தெய்வா: உன்னைப் பொறுத்தவரை என்கடமை முடிஞ்சு போச்சடா, ராமுவைப் 'பொறுத்தவரை என் கடமை இன்னும் முடியவில்லையே! அது முடியும் வரை நான் இப்படித்தானிருப்பேன்.

ஜோதி: அவனுக்காக உன்னை நீ ஏனம்மா வதைத்துக்கொள்ள வேண்டும்?.

தெய்வா: நேற்று வந்த உங்க பகட்டானவாழ்க்கைக்காக, அந்த இயலாத பிள்ளையை நான் வதைத்துக் கொள்ள வேணுமா?.

ஜோதி: வதைக்கவேணுமென்று நான்சொல்லவில்லை அவனை எங்காவது மடத்திலை சேர்த்துப் போட்டு, என்னேடு நிம்மதியாகநீஇரேன்? என்றுதான் சொல்கிறேன்.

தெய்வா: தம்பியையும் கூட்டிக் கொண்டு என்ர பெரியவீட்டில் நீ வந்து இரு அம்மா, உங்க இருவரையும் கடைசிவரை நான் காப்பாற்றுகின்றேன் என்று சொல்ல உனக்கு வக்கில்லை-? மனசிலை தைரியமில்லை-?. டேய் ஜோதி நான் ஒன்று உன்னிடம்கேட்கிறேன்?'' நீ பெத்த பிள்ளையில் ஒன்றுக்கு இப்படி ஏற்பட்டால்?

ஜோதி: (அதிர்ந்து) அம்மா!?.

தெய்வா: சொல்லவே உன் நெஞ்சு இப்படித் துடிக்குதே ஒரு அண்ணன் தன் தம்பியைப் பார்த்து கூசாம, அவன் தாயிடமே இப்படிச் சொல்லும்போது, அந்தத் தாயின் உள்ளம்எப்படியெல்லாம் துடிக்குமென்று உனக்குத் தெரியவில்லையா? ''தானுடா விட்டாலும் தன் சதை'' ஆடும் என்பார்கள். உனக்கோ.................. போடா......... படிச்ச உன்ர அறிவு இவ்வளவுதான்.

ஜோதி: உன் முடிவை மாத்தமாட்டியா?.

தெய்வா: அடுக்கடுக்காக குட்டிகளையும் பெற்று, குலையையும் போட்டு, பிறகு தன்னையையே அழித்துக் கொள்ளுதே அந்தத் தாய் வாழை, அது ஏனென்று உனக்குப் புரிஞ்சால் இனிமேல் இதைப்பற்றிப் பேசாதே! நேரத்துக்கு கஞ்சியோ, கூழோ குடித்துக் கொண்டு, குழந்தை குட்டிகளோடு நீ நல்லாகஇருந்தால் அதுவே எனக்குப் போதும். போய்வா, போ.

ஜோதி: இதில், முப்பது ரூபா இருக்கு இதைவைச்சுக்கோ நானும் குழந்தை குட்டிக்காரன்.

தெய்வா: (வேண்டியபடி) நான் உன்னைப் பெத்ததுக்கு நீ கொடுக்கும் கூலியா இது?

ஜோதி: (வருத்தமாக) அம்மா!?.

தெய்வா: (சாந்தமாக்) சொல்லு ராசா?

(சிறிது நேரம் யோசித்துவிட்டு, மீண்டும் பணத்தை எடுத்து எடுத்து எண்ணி அவளிடம் கொடுக்கிறுன்.

ஜோதி: இந்தா... இருபது ரூபாய், இதையும் வைத்துக் கொள். (அவள் வேண்டிக் கொள்கிறுள்) போதுமா?.

தெய்வா (குரல்கம்ம) ஜோதி எண்ணியெண்ணி எனக்குப் பணம் கொடுக்கிறுயே! நான் உனக்கு அளந்து அளந்து பால் ஊட்டவில்லையடா மகனே, (திருப்பிக்கொடுத்து) இதை நீயே வைச்சுக்கோ-

ஜோதி: (பணத்தைவேண்டியபடி) அம்மா-.

தெய்வா: என்னைப் பார்க்க வேணும்என்று நீ நினைச்சியே அது ஒன்றே எனக்குப் போதும். போய்வா.

ஜோதி: உன்னிஷ்டம். நான் போறேன். (போகிறுன்)

ராமு: என்ர அண்ணே நீ போறியா?.

(திரும்பிப் பாராமலே போய்விடுகிறுன். தெய்வானை ராமுவின் அருகில் வந்து அணைத்துக் கொள்கிறுள்)

தெய்வா: அவன் போய் விட்டான் ராமு அவன் போய்விட்டான்.

(குமுறி அழுதவள் திடீரென உதட்டைக் கடித்து மெரிதாகச் சிரிக்கிறுள்.)

ராமு; அம்மா நீ அழுகிறுயா? சிரிக்கிறுயா?.

தெய்வா: இரண்டுமில்லை. ராமுஇரண்டுமில்லை. அத்திப் பழம் இருக்கே அது பார்க்க வடிவாகத்தான் இருக்கும். ஆனு அதுக்குள்ளே இருப்பதோ வெறும் பூச்சியும் புழுவும்தான். இதுபோல, வெளிக்கு எவ்வளவுதான் நாகரீகமாகவும், பகட்டாகவும், வாழுகிறேமென்று காட்டுகிறுங்களே அவங்களுக்குள்ளே இருப்பது பொறுமையும் பொச்சரிப்பும்தான் என்று நினைக்கும்போது எனக்கு சிரிப்பும் வரவில்லை- அழுகையும் வரவில்லை.

(கையில் பேப்பருடன்இருவர் சம்பாஷித்த வண்ணம் கோவில் முகப்பிலுள்ளபடிக்கட்டிற்கு வந்து அமர்கிறுர்கள்.

சொக்க: அப்பாடா...... (இருந்துகொண்டு)பேப்பர்க்கார மணியத்தோடு பெரிசாக விசனப்பட்டாயே! என்ன விசயம்?.

முத்து: சொக்கா, நீதி, நேர்மை, நியாயம், என்று உலகத்தில் எந்தவொரு மனுஷன் தன் வாழ்க்கையை நடத்திக்கொள்ள ஆசைப்படுகிறுனே, அவன்ர வாழ்க்கையில் முடிவு என்ன தெரியுமா?

(தொடரும்)

# கானகத்தில் தேவதை

தொடர்கதை எப்பொழுது, தொடர்கதை எப்பொழுது? என்று தொடர்ந்து எழுதிக்கொண்டிருந்த உங்களுக்கு இதோ ஒரு தொடர்கதை 'ஈழநாடு' மாணவர் மலரில் பல தொடர் நவீனங்களை எழுதிப் பழக்கப்பட்ட க. கனகலிங்கம் (இதயழகன்) இந்தத் தொடர்கதையை இன்று தருகிறுர்.

அதுஓர் கொடிய விலங்குகள் வாழும் பயங்கரக் காடு, இளமரங்கள் நறுமலர்களைச் சொரிய, தீஞ்சுவைக்கனிகள் எங்கும் சிதறுண்டு கிடந்தன. மலர்களின் ஞாலங்களில் மதிமயங்கிய வண்டினங்கள் மலர்களைச்சுற்றி 'இச் இச்' சென்று சத்தமிட்டுக்கொண்டிருந்தன தூரத்தே வாவென்றழைப்பனபோல் கத்தியது காட்டுக்கோழி. வந்தால் அபாயம் என்றறிவிப்பன போன்று பயங்கரமாகக் கத்தியது கோட்டான் என்னும் பறவை. அதன் ஒலிக்குச் சவால்விடுவதுபோல் ஆனையொன்று பிளிறியது, ஆனையின் பிளிறலைக் கேட்டதுதான்தாமதம் மற்றைய கொடிய விலங்குகளெல்லாம் பயங்கரமாகச் சத்தமிட்டுக் கொண்டு அங்கொன்று இங்கொன்ருய் சிதறியோடின. இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது அதோ வந்துகொண்டிருக்கிறுன் ஓர் சிறுவன் வயது பத்து அல்லது பன்னிரண்டுதானிருக்கும். சுருண்டகேசம், எதற்கும் அஞ்சாத மிடுக்கான தோற்றம். கையில் வெள்ளிப் பூண் பொருத்தப்பட்ட சிறியதோர் பிரம்பு. அப்பிரம்பு இன்றைய நேற்றைய பிரம்பல்ல. பன்னெடுங் காலமாகப் பரம்பரை பரம்பரையாகப் பாவித்துவந்த பிரம்புதான் அது. கையில் பிரம்பைச் சுற்றிய

க. கனகலிங்கம்

வண்ணம் சுற்றிவளைத்திமுக்கும் காட்டுக்கொடிகளையும், பற்றியிழுக்கும் முட்கொடிகளையும், காட்டுக் கொம்பர்களையும் விலக்கியவண்ணம் வருகிறுனே அவன்தான் கண்ணன். அப்படி அவன்வருவதற்கு என்னதான் காரணமோ? பொறுத்திருந்து பார்ப்போமே!

அப்பொழுது கண்ணனுக்கு வயது ஐந்துதானிருக்கும். வழமைபோல் ஒருநாள் மாலை பாலர் பலருடன் விளையாடிக்கொண்டிருந்தான். களைப்பு மேலிடவே பாலரெல்லோரும்ஓர் மரத்தடியில் வந்தமர்ந்தனர். கதையோடு கதையாக எனது அப்பா நல்லவர், அம்மா பொல்லாதவ என்றுன் பாலு வென்னும் சிறுவன். இல்லையடா அம்மாதான் நல்லவ அப்பா ... ... என்றிழுத்தான் கண்ணன். ஏனடா அம்மாவைச் சொல்லிவிட்டு அப்பாவென்றிழுக்கிறுய் உனக்கு அப்பா இல்லையா? என்றுன் வயசுவந்த பாலரில் ஒருவன்.

எனக்கு அப்பா ... கண்ணனின் சிந்தனைக்குதிரை பறந்தது. ஆம், ஆம். எனது வீட்டில் அம்மாவைத் தவிர வேறொருவருமில்லையே. அப்படியானுல் எனக்கு அப்பா இல்லையா? என்று பலமாகச் சிந்தித்தான். அவன் சிந்தனைக்குதிரை முடிவின்றிஓடிக் கொண்டிருந்தது. என்னடா யோசிக்கிறுய், பார்த்தீர்களா இவனுக்கு அப்பா இல்லையாக்கும் என்றுன் பாலு. எல்லோரும் பலமாகக் கைகொட்டிச் சிரித்து ஏளனம் செய்தனர் கண்ணனுக்குஎன்னசெய்வதென்றே தெரியவில்லை. அவனது சிந்தனைக்குதிரை தரித்து நின்றது: எதற்கும் அம்மாவைக் கேட்டுவிடுவோமே என்ற உணர்வோடுவிளையாட்டிற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு மற்றும்சிறுவர்கள் கூப்பிடக் கூப்பிடக் கேளாதவன்போல் ஓடினுன் வீடுநோக்கி,

(தொடரும்)

## என்னதான் யோசனையோ?

கடந்த வாரம் பிறந்த தினம் கொண்டாடியசெல்வி சாந்தினி சுப்பையா சைக்கிளில் சவாரிசெய்யும் போது என்ன யோசித்தார்? தரமான மூன்று யோசனைகள் இங்கு பிரசுரமாகின்றன.

ஃ ஐந்து வயதில் இதே சைக்கிளில் சந்திரமண்டலம் போவேனு? (இன்பராணி நடேசன்-யாழ்ப்பாணம்.)

ஃ அடேயப்பா! எவ்வளவு வேகமாக ஓடுகிறது. (கிரிஜா தேவி சின்னத்துரை திருநெல்வேலி).

ஃ பாடசாலைக்கும் இச் சைக்கிளில் செல்லலாமோ? (தேவா ஞானரட்ணம் மட்டுவில்.)

ஆனல் ''சும்மா போங்கோ! எனக்கென்ன யோசனை'' என்கிறுள் சாந்தினி.

# மாணவர் மலர்

## இலங்கைக்கு வரும் பலவகைப் பறவைகள்

கார்த்திகை, மார்கழி மாதங்களிலும், அதற்குமுன்னைய மாதங்களிலும் மன்னுர் போன்ற இடங்களில் அநேக பறவைகள் எங்கிருந்தோ வருவதைக்காணக்கூடியதாகவிருக்கிறது. அவை மாரி முடிந்ததும் பறந்தோடி மறைந்து விடுகின்றன. இவை எங்கிருந்து வருகின்றன? எங்கே போகின்றன? ஏன் வருகின்றன? என்பது பற்றிய விளக்கம் இக்கட்டுரையில் தரப்படுகிறது.

மிகவும் தாழ்ந்த வெப்பநிலையுள்ள இடங்களில் உதாரணமாக சைபீரியா துருவங்கள் போன்ற இடங்களில் வெப்பநிலை சிலகாலத்தில் மிகவும் தாழ்ந்து போகின்றது. இதனுல் அவ்விடங்களில் தாவரஇனமோ அன்றி உயிரினமோ வாழ்வதரிது. இக்காலத்தில் எல்லாம் பனியால் மறைந்துவிடும் நிலை இங்கு ஏற்படுகின்றது முக்கியமாக ஒரு வெப்பநிலைப் பிராணிகள் தமது உடல்வெப்பம் சுற்றுடலுக்கு இழக்கப்படாதிருக்க இப்படிப்பட்டஇடங்களில் விசேஷ யுக்திகளைக் கையாளுகின்றன.

வைச் சேமித்து வைப்பதனுல் அங்கே வாழக்கூடியதாயிருக்கின்றது. சில பிராணிகள இக்காலத்தைப் போக்குவதற்காக அதாவது உணவு அருமையான இக்காலங்களில்இறந்துபடாமல் தப்புவதற்காக குகைகளிலும்மரப்பொந்துகளிலும் உறங்கி பல நாட்களைக்கழிக்கின்றன இந்த நீண்ட தூக்கம். குளிர் காலத்தூக்கம் எனப்படும். இதற்குத் தேவையான சக்தி அதிகமாக உணவு கிடைக்கும் பொழுது சேமித்துவைக்கப்பட்ட கொழுப்பை ஒட்சிகரிப்பதனுல் வெளிப்படுத்தப்படுகின்றன. மேலும் தமது உடலிலிருந்து சுற்றுடலுக்கு இழக்கப்படும் வெப்பத்தைத் இறைப்பதற்காக இப்பிராணிகள் உறங்கும் பொழுது தமது உடலைச் சுருட்டி பந்துபோல் அமைக்கின்றன. இதனுல் உடலின் மேற்பரப்பு குறைக்கப்படுகின்றது. இதற்கு உதாரணம் மேற்கூறிய இடங்களில் வாழும் வௌவால் உறங்குங்காலம் முடிந்ததும் பிராணி சேமித்த கொழுப்பை உபயோகித்தபடியால் மெலிந்து காணப்படுகின்றது. மறுபடியும் அதிக உணவைத்தேடிவலுவுடைய பிராணியாக மாறுகின்றது. மீண்டும் கொழுப்பைச் சேமித்து அடுத்த குளிர் காலத்துக்கு ஆயத்தப்படுத்திக்கொள்கின்றது.

— கி அல்பேட் பங்கிராஸ்—

### திரும்பிவிடுகின்றன

சுற்றுடலின் வெப்பநிலை உடல்வெப்பநிலையிலும் தாழ்ந்திருக்கும்போது உடலின் வெப்பநிலையை சீராக வைத்திருப்பதற்கு அதிக உணவுதேவைப்படுகிறது. பனிகாலத்தில் தாவரங்கள் வளர்ச்சியை நிறுத்துவதனுலும் புற்றரை உறைபனியால் மூடப்படுவதனுலும் உணவு குறைவாகக்கிடைக்கின்றது. இதனுல் இக்காலத்தில் உணவுப்பஞ்சம் ஏற்படுகின்றது. அப்போது அங்கிருக்கும் பறவையினங்கள் உணவைநாடி வேற்றிடங்களுக்குச் செல்லவேண்டியுள்ளது. அவைகளின் ஒருபகுதியே எங்கள் மன்னுருக்கும் வருகை தருகின்றன. பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் இருந்து இப்பறவைகள் (உதாரணம்:- சைபீரியன் டக்ஸ்) பறந்து வருவதே விநோதமும் ஆச்சரியமும் மிக்க செயலாகும்.

### பலமைல்தூரம்பறந்து..

பல்லாயிரம் மைல் தூரத்தை இப்பறவைகள் எவ்வாறு பறந்து முடிக்கின்றன என்பதுதான் இங்குள்ளஆச்சரியம் இதுபற்றிவிஞ்ஞானிகளும்ஆச்சரியமடைந்துள்ளனர்.

அப்பறவைகள் பறக்க ஆரம்பித்தால்அவைகுறித்த இடத்தை அடையுமட்டும் எந்த இடத்திலும் தங்குவதில்லையாம். அத்துடன்அவைகள் பறக்கும் பொழுது ''ஜெட்'' விமான அமைப்பு மாதிரி அதாவது தலைகீழான ''V'' அமைப்பில் பறக்கின்றன. சிறிது நேரத்தில் முதற்பறவை பின்னுக்குவர வெருெரு பறவை முன்னுக்குச்சென்றுபின்வரும்பறவைகளுக்கு காற்றின் தாக்கத்தைக் குறைத்துக் கொடுக்கிறபடியால் தொடர்ந்து பறக்கின்றன,

### ஏனைய பிராணிகள் என்ன செய்கின்றன

இப்பிராந்தியங்களில் வாழுகின்ற எலிகள் உண

## ஜோர்ஜ் வாஷிங்டன்

—அ. கனகசூரியர்—

ஐக்கிய அமெரிக்கா புதிய குடியரசானதும் திரு. ஜோர்ஜ்வாஷிங்டன் முதலாவது ஜனுதிபதியானுர் அவரது மறைவு தினம் நேற்று முன்தினம் (14-12-69) அனுஷ்டிக்கப் பட்டது.

ஜோர்ஜ் வாஷிங்டன், ஐக்கிய அமெரிக்காவில் 1789ம் ஆண்டு புதிய குடியரசு அமைக்கப்பட்டதும், அதன் முதலாவது ஜனுதிபதியாகி 1797ம் ஆண்டுவரை பதவி வகித்தார். 1732-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22-ம் திகதி அகஸ்ரின் வாஷிங்டனுக்கும் தாயார் மேரி போலுக்கும் புத்திரராகப் பிறந்தார்.

அமெரிக்க குடியேற்றவாசிகளுக்கு நிலத்தை அளந்து கொடுக்கும் பணியில், இளைஞராக இருக்கும் பொழுது வாஷிங்டன் ஈடுபட்டிருந்தார். விவசாயியாக வாழவிரும்பிய வாஷிங்டன், பெரும்பாலும் பொது வாழ்க்கையிலேயே காலத்தைக் கடத்தினுர். 1759-ம் ஆண்டு இவருக்குத் திருமணமாகியது.

அமெரிக்க சுதந்திரப் போரில், இவர்முக்கியமாகப் பங்கு கொண்டு அமெரிக்க குடியரசு உதயமாவதற்குப் பேருதவியாக இருந்திருக்கிறுர். இவர், தமது 67வது வயதில் அதாவது 1799-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ந் திகதி காலமானுர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தயாரிப்பு:
குணம்

# தமிழிலக்கியத்தில் குழந்தையுலகம்

## செல்வி அசாரிபா ஜமீல்



**இலங்கை சாகித்திய மண்டலத்தினால் நடாத்தப்பட்ட தமிழ்க்குழந்தை இலக்கியம் பற்றிய கருத்தரங்கில் இடம்பெற்ற கருத்துரை ஒன்றின் ஒருபகுதி இங்கு தரப்படுகின்றது.**

20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே உளவளர்ச்சியில் குழந்தைப்பிராயம் வகிக்கும் முக்கியமான பங்கு உணரப்பட்டது. நடத்தை வாதிகளான (Behaviourists) வோட்ஸன், பல்லோவ் போன்றோரும் புரொய்ட், அட்லர், ஜுங் போன்ற உளப்பாகுபாட்டு வியலாளரும் (Psycho-analysist) மனிதனின் வருங்கால எல்லையைச் செப்பனிடுவதில் குழந்தைப் பருவம் வகிக்கும் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டினர். இதைத்தொடர்ந்து உளவியலாளன், மருத்துவன், கவிஞன்போன்ற பலரினதும் கவனத்தைக் குழந்தை உலகம் ஈர்த்தது. இதன் பிரதிபலிப்பையே நாம் தமிழிலக்கியத்திலும் காணக்கூடியவர்களாக இருக்கிறோம். எனவே குழந்தை இலக்கியம் தமிழ் இலக்கியத்தின் ஒரு நவீன அங்கம் என்றே நாம் கூறவேண்டும்.

குழந்தை இலக்கியம் படைப்பது என்பது எளிதானதொரு காரியமல்ல. வயது வந்தோர்க்கு இருக்கும் குறித்த சில மனப்பிரதிமைகளைப் பூர்த்திசெய்து அவர்களைத் திருப்திப்படுத்துவதுபோலக் குழந்தைகளைத் திருப்திப்படுத்த முடியாது. கள்ளங்கபடமற்ற உணர்ச்சிகளையும், கற்பனைகளையும் நெறிப்படுத்தி வளர்ந்தோர் உலகிலிருந்து முற்றிலும் வேறுபட்ட குழந்தை உலகில் பிரவேசித்து அவ்வுலகிற்குச் செல்லுபடியாகக் கூடிய இலக்கியத்தைப் படிக்கும் கவிஞன் வளமானதொரு வருங்கால சமுதாயத்தை உருவாக்கும் கர்த்தா என்று போற்றப்பட வேண்டியவன்.

### குழந்தையைக் கவருவது

குழந்தைஇலக்கியம் என்ற பரந்த உலகில் கதை, கட்டுரை, பாட்டு என்பன மிகச் செல்வாக்குப் பெற்றனவாகத் திகழ்கின்றன. இவற்றுள் பாட்டு தன்னகத்தே கொண்டிருக்கும் சில தனிப் பண்புகள் காரணமாகக் குழந்தைகளின் இதயத்திலே ஆழமான பதிவுகளையேற்படுத்துகின்றன. இயற்கையாகவே குழந்தைகட்குக் கதைகேட்பதில் அதிகஆசை, குழந்தைகள் விளங்கிக் கொள்ளும்ஆற்றலும்குறைந்தவர்கள். இந்த ஆசையையும், குறையையும் பூர்த்தி செய்வதற்குக் கதையே சிறந்த மார்க்கம் என்பர். உண்மைதான். ஆனால் எந்தக் குழந்தையும் எத்தகைய சிறப்பான கதையையும் கூட ஒரு முறைக்கு என்று கருதப்பட்டபோதும் இவற்றையும் குழந்தைகள் ஒருமுறைக்கு மேலாகப் படிக்க விரும்புவதில்லை. அத்தோடு படித்ததை அப்படியே நினைவில் வைத்துக் கொள்ளவோ அவற்றைப் பிறருக்கு அவர்களால்எடுத்துக்கூறவோ முடியாது. அலுப்போ, சலிப்போ ஏற்படாது ஒருமுறைக்குப் பலமுறை படித்து இன்புறக் கூடிய ஒரு சாதனம் கவிதையே. அது எவரையும் வசப்படுத்தக் கூடியது. நினைவுகூரலுக்கும், ஆழ்ந்த உணர்ச்சியை வெளியிடுவதற்கும் துணைபுரியும் சிறந்த வடிவம் கவிதை. அதுபாடுபவருக்கும், கேட்பவருக்கும் தெவிட்டாத இன்பத்தையளிக்கின்றது. நல்ல நல்ல கருத்துக்களைக் குழந்தைகளைக் கவரக்கூடியவகையில் எடுத்துக் கூறக் கவிதையே பெரிதும் வேண்டப்படுகிறது.

மேலாக விரும்பிப் படிப்பதில்லை. அவற்றில் ஒருவித அலுப்புத் தோன்றிவிடுகிறது. புதுப்புதுப் பொருட்களை ஆராயும் இயல்பூக்கமும் குழந்தைப் பருவத்தில் தெளிவாகக் காணப்படுகின்றது. இத்தகையதோர் ஆர்வத்தைப் பூர்த்தி செய்வதற்குச் சிறந்தவழி கட்டுரைகள்

குழந்தைக்காகப் பாடும் கவிஞன் தனது பாடல்களைக் குழந்தை உலகம் ஏற்றுக் கொள்ளவேண்டுமாயின் பல நிபந்தனைகளுக்குட்பட வேண்டியவனாகின்றான். 'உள்ளத்துள்ளது கவிதை; இன்

### கவர்ச்சியும் கருத்தும் தேவை

பம் உருவெடுப்பது கவிதை; தெள்ளத் தெளிந்த தமிழில் உண்மை தெளிந்துரைப்பது கவிதை:' என்று கவிதைக்

[13ம் பக்கம் பார்க்க]

# ஆங்கவர்க்கே பாங்காவோம்!

## விமலா

மார்கழி மாதத்தில் வரும் திருவெம்பாவை மகளிர்க்குரிய பிரார்த்தனை நாட்களாகும். பூவையர்தம் மனந்திறந்து இறைவனை வாழ்த்தியும் வணங்கியும் துதிக்கும் பொன் நாட்களே திருவெம்பாவைத் தினங்களாகும். மணிவாசகர் பாடியுள்ள இருபது பாடல்கள் கொண்ட திருவெம்பாவைத் தோத்திரங்கள் மனோன்மணி, சர்வபூததமனி, பலப்பிரமதனி, பலவிகரணி, கலவிகரணி, காளி, ரௌத்திரி, சேட்டை, வாமை என்னும் ஒன்பது சக்திகளுள் முன்னின்றவர் பின்னின்றவரைத் துயிலெழுப்புவதாகவும். எல்லோரும் கூடி இறைவனை வழுத்தும் பொருட்டுத் தம்முட் பாடுவதாகவும் அமையப் பெற்றுள்ளது.

திருவண்ணாமலையில் மார்கழி மாதத்திலே, நல்ல மழைக் குளிரிலே விடியற் காலை குளத்தில் முழுகச் செல்லும் பெண்டிர், தம்மவரை அழைப்பதாகவும் தம்முட் பேசிக்கொள்வதாகவும் இப்பதிகம் இயற்றப் பட்டுள்ளது. பக்திச் சுவை நிரம்பப் பெற்ற இப்பாடல்களில் ஆங்காங்கு இலக்கியச்சுவை சொட்டுவதையும் நாம் காணலாம். திருக்கோவையாரில் அறிவு நூற் பொருளையும் உலகியல் வழக்கையும் எடுத்தியம்பிய மாணிக்கவாசகசுவாமிகள் இப்பதிகத்திலும் எடுத்தாண்டுள்ள உத்தியைக் கண்டு நாம் பாராட்டக் கூடியதாயிருக்கிறது.

### ஆன்ம ஈடேற்றம்

இரண்டாம் பாடலில் ''பாசம் பரஞ்சோதிக்கென்பாய் இராப்பகல் நாம் பேசும்போதெப்போது இப்போதார் அமளிக்கே நேசமும் வைத்தனையோ'' எனப்

## இறையன்பரே கணவராக வேண்டும்: பாவை நோன்பின் குறிக்கோள்

பாடுகிறார். இதில் ஒரு பெண் மற்றொருத்தியிடம் இறைவனை நினைவுகூரச் செய்து துயில் எழுப்புவதாக அமைந்துள்ளது. இது நாம் மேலோட்டமாகக் காணும் கருத்து ஆகும். ஆன்மாக்கள் இப்பிரபஞ்ச வாழ்க்கையை நிலையானது என்றெண்ணி மயங்கி அதில் அமிழ்ந்து போவதையும் உன்னுடைய அன்பெல்லாம் பரஞ்சோதியாகிய இறைவனுக்கே எனக் கூறினையே என விழிப்பு நிலையை உணர்த்துவதாகவும் நாம் பொருள்கொள்ளலாமல்லவா! மணிவாசகரது உட்கருத்தும் இதுவாயிருக்கும் என்பது அவரது பக்குவ நிலை உணர்ந்தவர்கள் தெளிவு பெறுவர்.


மனித வாழ்க்கை மிகச் சொற்பம். அந்த நாட்களுக்குள்ளே எமது ஆன்ம ஈடேற்றத்துக்கு வேண்டியனவற்றைச் செய்யும்படி ''கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே'' என இடித்துரைக்கிறார். பெண்களாகிய நாமும் அவர் வழி நின்று விண்ணுக்கொரு மருந்தாகவும், வேதவிழுப் பொருளாகவும், கண்ணுக்கினியானாகவும் விளங்கும் அப்பரம்பொருளைப் பாடித் துதிக்கவேண்டும்.

### இறைவன் பெருமை

இறைவன் பெருமையை வியந்து பாடுகிறார் மாணிக்கவாசகசுவாமிகள். எத்தனையோ உவமைகளை யெல்லாம் எடுத்துக்காட்டுகிறார். நாம் ஆண்டவனைப் புரிந்து கொள்ளும் பொருட்டு ''ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி'', 'மாலறியா நான்முகனுங் காணா மலை'', ''வானே நிலனே பிறவே அறிவரியான்'', ''ஆழியான்'', ''பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளி சேர்

(14-ம் பக்கம் பார்க்க)



புதுமையான அமைப்பில் ஆக்கப்பட்ட தங்க, வைர நகைகளுக்குப் புகழ்பெற்றது, உத்தரவாதமுள்ள நகைகளைத் தருவது, உங்கள் மனதுக்குப் பிரியமான நகைகளை வழங்குவது

தெய்வா நகை மாளிகை

தொலைபேசி எண்: 512.

இன்றைக்கே விஜயஞ்செய்யுங்கள்!
உங்கள் இதயங்கவர்ந்த நகைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்!

தெய்வா நகை மாளிகை

173, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுகதை

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

ஈஸ்வரத்தில் முனகுகிறார் தம்பர். கடமைக்காகப் போராடுகிறது வெள்ளையன்.

''தம்பி மற்றப் பத்தையைப் பாரடி ... கிடக்குது ... எழுப்படி இராசா ... ஒண்டெண்டாலென்ன ... எழுப்படி இராசா''

வெள்ளையன் ஆவேசமாக மோம்பம் பிடிக்கிறது.

''தம்பி பொழுதுபட்டால் படட்டுக்கும் நீபாரடி ராசா ... பாற்ரு...பாற்ரு...''.

தம்பருக்கு வீட்டிற்குப் போகும் எண்ணமே இல்லை. வெள்ளையனுக்குப் போக மனமிருந்தாலும், தம்பரில்லாமல் அது போகமுடியுமா ...? தம்பர் போகத்தான் விடுவாரா?

பற்றைகளை இடறுகிறது வெள்ளையன், முட்கள் அதன் உடலைக் கீறி, இரத்தம் கசிந்து அதன் எலும்புடலில் உறைகிறது.

வேதனையைக் காட்டிக் கொள்ளாமல், எஜமானனுக்காக, மோப்பம் பிடிக்கிறது வெள்ளையன்.

''தம்பி பாற்ரு ...... கிடக்கடா ... கிடக்கடா பாற்ரு பாற்ரு வெள்ளையா ... எழுப்படா''

வெள்ளையன் பகீரதப் பிரயத்தனம் செய்கிறது.

''மற்றப் பத்தையுக்கை போடா ... ... அதையும் பாரடா ... உதுக்குள்ளை ... கிடக்கடா...''

வெள்ளையனின் நாசியில் ஏதோ தட்டுப்பட்டுவிட்டது தம்பர் உசாராகிறார்.

''விட்டுடாதை... ... கிடக்குது எழுப்பு...எழுப்பு...'

வெள்ளையனின் சாமர்த்தியத்தால் ஒரு சிறிய உடும்பு எழும்பிவிட்டது.

''பிடியடி...பிடியடா அள்ளடி...அள்ளடா... அள்ளடா வெள்ளையா''

வெள்ளையனுலும் ஓட முடியவில்லைத் தம்பராலும் ஓட முடியவில்லை. உடும்பு ஒரு அடர்ந்த புதருக்குள் நுழைந்துவிட்டது.

தம்பருக்கு ஆத்திரம். ''உதைப் பிடிக்காமல்...விடுறேல்லை. ராசாத்தி...உள்ளுக்கை போய்...எழுப்படி. நான்...இஞ்சாலை நிக்கிறன்''

தம்பர் வெள்ளையனை ஊக்குவிக்கிறார்.

வெள்ளையன் பற்றையைச் சுற்றிச் சுற்றி வருகிறது உள்ளே நுழையாமல் வெளியிலேயே நின்றுகொண்டு சுற்றிச் சுற்றி மோப்பம் பிடிக்கிறது.

''வெள்ளையா... பயப்படாதை......உள்ளுக்கை போய்...எழுப்படா தம்பி.''

பொறுமையை இழந்த தம்பர் தவியாய்த் தவிக்கிறார்.

''போடி... உள்ளுக்கை போய்... அதை எழுப்பு... உதையாவது...புடிச்சுக்... கொண்டு ... வீட்டை போவம்''

வெள்ளையன் உள்ளே நுழைகிறது. வெள்ளையன், எதனுடனே போராடுகிறது அதனால் அந்தப் பற்றையே கிடுகிடுக்கிறது.

''வெள்ளையா... விட்டிடாதை படுக்கையிலைவைச்சு அமத்து ... படுக்கையிலை வைச்சு அமத்து''

தம்பர் வெளியிலை நின்று ஆவேசமாகக் கத்துகிறார்.

சிறிது நேர அமைதிக்குப் பிறகு வெள்ளையன் வெளியே வருகிறது. அதன் வாயில்...

தம்பர் அதை வாங்க மகிழ்ச்சியோடு கையை நீட்டுகிறார்.

''பாம்பு...ஐயோ வெள்ளையா...இது என்ன...?''

தம்பரின் வாய் பயத்தால் அலறுகிறது.

வெள்ளையன் வலிகண்ட நாயைப்போல் நிலத்தில் சரிகிறது. அதன் உடல் நீலம் பாய்ந்து...

தம்பர் கதறினார். அவரது தாயும் தகப்பனும் இறந்த போதும். மனைவி மக்கள் வீடுவிழுந்து மடிந்தபோதும்; எப்படி அழுதாரோ அதே போல...இது அவரது கடசி நஷ்டம். அவரது உணவுக்கு வழி செய்யும் அந்த உயிரின் நாடித் துடிப்பு மெதுவாக அடங்கிக்கொண்டிருக்கிறது.

தம்பர் தலையிலடித்து ஓவென்று அலறிக்கொண்டிருந்தார்.

இனி அவருக்கு வேட்டையே இல்லை. சில்லிட்டுப் போய்க்கிடக்கும் அந்த வெள்ளையன் என்னும் நாயின் பக்கத்திலிருந்து கதறிக்கொண்டிருந்தார் தம்பர்.

அந்தவனப் பிரதேசம், தம்பரின் பிலாக்கண ஒலத்தால் அமைதியை இழந்து கொண்டிருந்தது.

(யாவும் கற்பனை)

---

## தேவாரத் திருவமுது

# ஐயாறமர்ந்த பெருமானது அருளின் திறத்தை ஆளுடைய பிள்ளையார் காட்டும் அழகு

பண்: மேகராகக் குறிஞ்சி
திருச்சிற்றம்பலம்

புலனைந்தும் பொறிகலங்கி
நெறிவயங்கி
அறிவழிந்திட்(டு)
ஐம்மே லுந்தி
அலமந்த போதாக
அஞ்சேலென்(று)
அருள் செய்வான்
அமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள்
நடமாட
முழவதிர மழையென்
றஞ்சிச்
சிலமந்தி யலமந்து
மரமேறி
முகில்பார்க்குந்
திருவை யாறே.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்துவகையான உணர்வுகளைத் தருவன ஐம்புலன்கள். இந்த ஐவகை அறிவுகளை நமக்குத்தரும் வாயில்களோ நா, கண், உடல், செவி, மூக்கு என்னும் ஐம்பொறிகள். உயிரானது உடலை விட்டுப் பிரியும் நிலை நேருந்தருணத்தில் ஐம்பொறிகளும் தம் சுயநிலைகளை இழந்து கலக்கமடைகின்றன; அறிவு மயங்குகிறது; உள்ளம் தடுமாறுகிறது; ஐ-சேடம், சளி மிடற்றை அடைக்கிறது; மூச்சு முட்டுகிறது; மனம் சுழலுகிறது. ஆனால், பலகாலும் செய்து வந்த பயிற்சியினால், எவர் 'ஆண்டவனே'' என இறைவனை நினைக்கிறாரோ, உடனே அவர்முன் அபய கரம் நீட்டி ''அஞ்சாதே''. என அருள் புரியும் எம்பிரான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில் யாது? எனில்-

இதே கருத்தை, இங்கு பட்டினத்தார் கூறும் அருள் வாக்குடன் ஒப்பு நோக்குவாம்:

''ஐயுந் தொடர்ந்து
விழியுஞ் செருகி
அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி
விடுகின்ற போ(து)
ஒன்று வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றியூரு
டையீர் திருநீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி
ஐந்தெழுத் தோதவுங்
கற்பியுமே''

சேடம் இழுக்கிறது; கண் விழிகள் மேலிமையுள் செருகிவிடுகின்றன; ஐம்புல அறிவுகள் ஒவ்வொன்ருக இவ்வுடலைவிட்டு நீங்குகின்றன. மெய்யென்று பெயர் புனைந்த இந்த உடல் பொய்யாகின்றவேளை நெருங்குகிறது. அந்த நிலையிலே இறைவா! உன்னை நினைக்கவோ - உன்னிடம் வரம் பெறவோ முடியும் என நினைப்பது, ஒருபோது தவறிவிட நேரலாம். அதனால், அப்போதைக்கு இப்போதே கேட்டுவைக்கிறேன்-ஒரு வரந்தருவாயா?'' எனத் திருவொற்றியூர்ப் பெருமானை ''ஒன்று வேண்டுவன் யான்'' எனக் கேட்டவர்

விளக்கம் செய்பவர்:
**ஆத்மநாதன்**

மூன்றுசெயல்களை அந்த ஒரு வரத்தினுள் நுழைத்துவிடுகிறார். அவையாவன:- என் கையால் எனது நெற்றியில் யானே திருநீறு பூசி, என் கைகள் என் சிரமேல் குவிய எனது நா திருவைந்தெழுத்தை ஓதவேண்டும் எனக் கேட்கிறார்.

ஆனால், இங்கே ஆளுடையபிள்ளையாரோ எனில், இறைவனிடம் வரம் கேட்கவில்லை. ஆன்மாவுக்கு நேரும் அதே நிலையைக் குறிப்பிடுகிறார். அப்போது, இறைவனிடம் தமக்குள்ள உறுதிப்பாடு ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டும என்பதைக் குறிப்பால் உணர்த்த; ''அலமந்தபோதாக அஞ்சேல் என்று அருள் செய்வான்'' எனத் துணிபு கூறியமை எவரும் வியந்து போற்றத் தக்கது.

இனி எம்பிரான் அமரும் திருக்கோயில் யாது எனில்:

ஆலயத்திருவீதியிலே அழகார்ந்த மகளிர் சிவநாம பாராயணஞ் செய்து கொண்டு வலம்வருகிறார்கள், சிவநாமதோத்திர ஓசைக்கு ஏற்ப முழவம் முதலாம் இசைக் கருவிகள் முழங்குகின்றன. பெண்கள் வலம்வரும் காட்சியும் முழவ ஓசையும் ஒன்று சேரும்போது அங்குள்ள பெண் குரங்குகளின் உள்ளத்திலே ஒரு கலக்கம் உண்டாகிறது. குரங்குகள் சிந்

(13-ம் பக்கம் பார்க்க)

புகையிலையும் காய்கறியும்
பயிரிடும் கமக்காரரே!

பொஸ்றின்

அழுக்கணவனையும் மற்றெல்லாக் கிருமிப்பீடைகளையும் ஒழிக்கவல்லது.

உடனே செயலாற்றும் சக்தி வாய்ந்த இந்த ரசாயனப்பொருளை அறுவடைக்கு முதல்நாள் வரை தெளிக்கலாம்.






ஷெல் ரசாயனப் பொருட்கள்
பாவித்து அதிக உணவு பயிரிடுக

ஷெல் ரசாயனப் பொருடகள
SHELL

ரசாயனபபொருளை நினையுங்கள், ஷெல்லை நினையுங்கள 'அல்றெக்ஸ்', 'டீல்றெக்ஸ்' 20, 'டீல்றெக்ஸ் எக்ஸ்டரா', 'ஆர்கொடீன்', 'என்றெக்ஸ்' 20, 'பிட்றின்', 'மலதியன்', 'சுமத்தியன்', ஷெல் களைப்புற்கொல்லி 'எம் 50', 'ஸ்டாம்' எப - 34, 'இறமின்', ஷெல் பீ. எச். சி 10% தூள் இவை ஷெல் ஸ்தாபனத்தாரின் விரிவான விவசாய ரசாயனப் பொருட்களில் சில மாத்திரமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழிலக்கியத்தில்

[11ம் பக்கத் தொடர்ச்சி]

குக் கவிமணி வழங்கியவிளக்கத்தை மனதிற் கொண்டு குழந்தை உலகை அணுக வேண்டியது அவனது கடமை. குழந்தைப் பாடடுக்களில் ஓசைநயம், சொற்றிறன், சிறந்த கருத்துக்கள் என்பன அத்தியாவசிய தேவைகளாகும் கவிதையிலுள்ள ஓசைநயம், சொற்றிறன் என்பன குழந்தைகட்குக் கவிதைமேல் கவர்ச்சியையும், ஈடுபாட்டையும் தோற்றுவிக்கின்றன கவிதையிலுள்ள சிறந்த கருத்துக்கள் அவர்களின் வாழ்க்கை முறையில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ செல்வாக்குப் பெறுகின்றன. எனவே குழந்தைப்பாட்டில் கவர்ச்சி, கருத்து ஆகிய இரண்டும் இன்றியமையாத தேவைகளாகும்.

“ஒலி நயம் அமைந்த சொற்களின் கட்டுக்கோப்பே கவிதை” என்கிறார், ஜோன்ஸன். குழந்தைப் பாட்டிலே ஓசைநயம் மிக முக்கியம். ஓசையிலே இன்பம் காண்பது குழந்தை.

“அன்னத்தின் தூவி
அனிச்ச மலரெடுத்துச்
சின்ன உடலாகச்
சித்திரித்த மெல்லியலே!
மூடத் தனத்தின்
முடைநாற்றம் வீசுகின்ற
காடு மணக்கவரும்
கற்பூரப் பெட்டகமே!
வேண்டாத சாதி
இருட்டு வெளுப்பதற்குத்
தூண்டா விளக்காய்த்
துலங்கும் பெருமாட்டி!
வெண்முகத்தில் நீலம்
விளையாடிக்கொண்டிருக்[கும்
கண்கள் உறங்கு!
கனியே உறங்கிடுவாய்!”

என்று தாலாட்டுப் பாடித் தொட்டிலை ஆட்டுகிறுள் தாய் குழந்தையைப் பக்கத்தில் கிடத்திக்கொண்டு அதன் முதுகை மெதுவாகத் தட்டுகிறுள் வேருெரு தாய். சிறிது நேரத்தில் இரண்டு குழந்தைகளும் உறக்கத்தில் ஆழ்ந்துவிடுகின்றன. பாட்டின் பொருளை அக்குழந்தைகள் உணர்ந்ததாக இல்லை. குழந்தை அதன் பொருளை உணரவேண்டும் என்று தாய் பாடவும்இல்லை. பாட்டின் ஒலிநயத்தை அது உணர்ந்தவுடன், அன்னையின் கை தன் முதுகை மெல்லத் தட்டுவதை உணர்ந்தவுடன் குழந்தை கண்வளர்கிறது, பாட்டின் ஒலிநயத்திற்குப் புலன்களை உள்முகமாகத் திருப்பிவிடும் ஆற்றல் உண்டு என்பதற்கு இது ஒரு சான்று.

(தொடரும்)

## ஐயாறமர்ந்த ..

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

திக்கின்றன,: ஓஹோ! மயில்கள் தோகை விரித்து ஆடுகின்றனவே! இப்படியான ஆட்டம் மழைமூட்டத்திலன்ருே நடைபெறுவது, மழைவருவதற்கான அறிகுறிகள் எவையேனும் இருக்கின்றனவோ? ஆம், “இடியோசை கேட்கிறது முழவ ஓசையை இடியோசையென மதிக்கின்றன மந்திகள். அவை தமது ஐயத்தைப் போக்க உடனேமரங்களிலே தாவிப்பாய்ந்து மர உச்சியை அடைந்து முகில்கள் கூடுகின்றனவோ, எனப் பார்க்கின்றன. மழை வந்தால் மந்திகள் மரங்களில் தானே ஒட்டியிருக்கவேண்டும்.

இத்துணை இயற்கைவளங்கொழிக்கும் சிறப்புவாய்ந்த தலமே எம்பிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருந்து ஆன்மாக்களுக்கு அருள் புரியுந் திருவையாறு ஆகும்.

# விண்ணகப் பேச்சு பற்றி சுவாமி விவேகானந்தர் விளக்கம்

## “ஆண்டவனின் விநோத விளையாட்டு”

உலக மாதாவான அம்பிகை, பராசக்தியின் அருளைப்பெற்ற ஸ்ரீமகாவிஷ்ணுவின் அவதார புருஷரான மகான் ஸ்ரீலஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸ சுவாமி அவர்களின் அருமை முதல் சீடர் மகான் தீரர் ஞான சொரூபம் ஸ்ரீலஸ்ரீ விவேகானந்தசுவாமி அவர்கள் 17-11-1969 அன்று கைலாயத்திலிருந்து விண்ணுலகத் தொடர்பு பெட்டியின் மூலமாக (இறந்தவர்கள் பேசும் பலகை) விண்ணுலகத் தொடர்புபற்றி தான் முன் கொண்டிருந்த தவருன கருத்தை உலக மக்களின் மேன்மைக்காகவே, அதன் அற்புத உண்மையை உணர்த்த பேராவல்கொண்டு தான் கொண்ட கருத்து தவறுஎன்பதை தக்க முறையில் தெளிவபடுத்தி தமிழில் அருளியிருக்கும் விளக்க உரை.

விவேகானந்தா பேசுகிறேன். நான்தான் இப்போது பேசுகிறேன் என்று இதை வாசிக்கும் அநேகருக்கு இப்போது ஓரளவு தெரிந்திருக்கும்.

எந்த ஒரு பெரிய உண்மையை நான் பூவுலகில் வாழும்போது சரிவர அறியாமல் தவருன கருத்துக் கொண்டிருந்தேனே அதைப் பற்றி இப்போது அதாவது சரிவர உணர்ந்து தெளிந்த பின் மாறுபாடான கருத்தைத் தெரிவிக்கிறேன்.

இதை முதலில் மக்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன்.

தான் சொன்ன ஒரு கருத்தை தானே மறுப்பவர்களை அவ்வுலகம் நிறையக் கண்டிருக்கிறது. ஒருகாலத்தில் ஒருசில உண்மைகள் தெரியாமல், அறியப்பட முடியாமல், தவருன சந்தர்ப்பசூழ்நிலைகளினுல், ஒருவன் ஒரு விஷயத்தைப் பற்றி தவருன முடிவு கொள்வதுண்டு அதனுல் உடனே அது உண்மையாகிவிடாது. தான்சொன்னதையே, பல காலம் கடந்தபின் அவனே அறிவு வளர்ச்சியாலும்அனுபவ முதிர்ச்சியாலும், முதலில் தான்சொன்ன அதே கருத்திற்கு நேர்விரோத மான கருத்தைத் தெரிவிப்பதை நாம் எல்லோரும் அறிவோம்.

உயர்திரு ராஜகோபாலாச்சாரியார் அவர்கள், அன்று ஹிந்தி பாரதநாட்டின் ஒர மொழியாக இருக்கவேண்டும் என்று ஆணித்தரமாகச் சொன்னதை மக்கள் நன்கு அறிவார்கள். அதையே அவர் இன்று வன்மையாகக் கண்டித்து, மிகவும் தன் ஆணித்தரமான அன்றைய காரணங்களையே தவறு என்று மறுத்துரைத்து சிறந்த விளக்கமும் கொடுத்துள்ளார். இதையும் நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள். அவர் அன்றும் தலைசிறந்த தேசபக்தர். இன்றும் அவரைவிட சிறந்த தேசபக்தர் ஒருவருமில்லை. அன்றும் நன்கு சிந்தித்துத்தான் அவர் பதில் சொன்னுர். இன்றும் அவர் சிந்தித்துத் தான் பதில்சொல்லுகிறுர். ஆனல் பதிலில் நேர்மாற்றம்.

நீங்கள் கேட்கக்கூடும்,இரண்டுமே சரியா என்று.

அன்று ஒரு சூழ்நிலை- இன்று ஒடு சூழ்நிலை. அன்று அறிவு முதிர்ச்சியால் கூறினுர்; இன்று அறிவு முதிர்சியாலும் அனுபவ முதிர்ச்சியாலும் சரியான காரண காரியங்களுடன், தான் சொன்னதையே மறுத்துரைத்திருக்கிறுர். அறிவுக்குச் சரியாகப்படுவதெல்லாம் அனுபவத்திற்குப் பொருந்துவதில்லை. ஒருவன் இளமையில், ‘கடவுள் என்று ஒரு சக்தி இல்லை’ என்பான். அனுபவித்த பிறகுதான் அவனுக்குஅந்தச் சக்தியை உணரும்வாய்ப்புகிட்டுகிறது அறிவினல் மட்டும் எதற்கும் தெளிவான விளக்கம் கிடைத்துவிடாது அறிவுக்குப்புலப்படாத சில நுணுக்கமான விஷயங்கள் அனுபவத்தில் விளங்குவது உண்டு. அன்று ஸ்ரீ ராஜாஜி அவர்களுக்கு, ஒருவித சூழ்நிலையில், ஒருவித அனுபவம் கிட்டியிருந்தது. அத்தகைய சூழ்நிலையில் அன்று அவருக்கிருந்த அனுபவஅறிவில், அவர் நன்குசிந்தித்துத் தான் அப்படிக் கூறினுர். இன்று அவர் இருவித சூழ்நிலைகளையும் அனுபவித்திருக்கிறுர் அன்று அவருக்கு அறிவினுல் சிந்தித்து அறிய முடியாத, அதி நுட்பமான விஷயங்கள் இன்று அனுபவத்தின் மூலம் அவருக்குத் தோன்றுவது இயற்கையே. அவர்என்றும்மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்கவே மாட்டார். மனதில் சரியென்றுபடுவதை எவ்வளவு எதிர்ப்பிருந்தாலும் தைரியமாக எடுத்துரைப்பவர். அன்று அப்படிச் சொல்லிவிட்டோமே, இன்று இப்படிச் சொல்லலாமா? என்றயோசனை அவரை அணுகப் பயப்படும் அதனுல் நன்மைபயக்கக்கூடிய, நடைமுறைக்கு ஒத்துவரக்கூடிய யோசனையை அவர் தெளிவாக தன் முன் கருத்திற்கு நேர்மாருக விளக்கி இருக்கிருர் இருகருத்தைச்சொல்லுவதும் அதே ஸ்ரீ ராஜாஜி அவர்கள்தான் இப்படி தன் கருத்தைத்தானே எதிர்ப்பதற்கு மிகுந்த தைரியமும் ஞானமும் வேண்டும்.

இதை வாசிக்கும் சகோதர சகோதரிகளாகிய உங்களுக்கு இன்னென்றைக்கூற விரும்புகிறேன்.

சமீபத்தில் காலமான அறிஞர் உயர்திரு ஸி. என். அண்ணுத்துரை அவர்கள், அங்கிருக்கும் காலத்திலேயே திராவிடநாட்டுக்காகப்பாடுபட்டு, அதற்காகவே உழைத்துத் தன் வாழ்நாளில் ஏறக்குறைய முக்கால் பகுதியைச் செலவிட்டு வந்தார் என்பதை நன்ருக அறிந்திருப்பீர்கள். அப்படிப்பட்ட அவரே, அக்கொள்கைதவறு என்று அறிந்தவுடன் தைரியமாக அதைக் கைவிட்டு விட்டார். தான் எதைப் பெறுவதற்காக எளிதில தகர்க்க முடியாத வாதங்களையும், காரணகாரியங்களையும் சிருஷ்டித்தாரோ, அதையே வீரமாக எதிர்த்து வெற்றியும் கொண்டார் இதை, அவர் அவ்வுலகில் இருக்கும் போதுசெய்ததால், “அவரா இப்போது இப்படிப் பேசுகிருர்” என்றுஆச்சரியப்பட்டு சொல்லிக்கொண்டாலும், அவர்தான் அப்படிச்சொன்னுர் என்பதில் உங்களுக்கு எள்ளளவும் ஐயமில்லை அல்லவா? ஆனல் அத விஷயத்தை. அதாவது தன் மாருன கருத்தை அவர் உலகில் தெரிவிக்குமுன் காலமாகி, “இறந்தவர்கள பேசும்பலகை” மூலம் மறைந்து தெரிவித்தாரானுல்நீங்கள் நம்புவீர்களா, அல்லது அவரின் அருமைத்தம்பிமார் தான் ஏற்றுக்கொள்வார்களா?

இதைப் போன்றதுதான் என்கருத்து வேற்றுமையும். ஒரு மாறுபாடு. அவர்நேரில் சொன்னுர் நான் மறைந்து சொல்லுகிறேன் இவ்வளவு விளக்கமும் ஏன் கொடுத்திருக்கிறேன் என்ருல், நான் மறைந்துபேசும்உண்மையை உணர்த்தவேதான். நான் தான் எனது முன்னைய தவருன கருத்துக்கு மாருக சரியான கருத்தைக்கூறுகிறேன் என்றுதெளிவுபடுத்தத்தான் நான் விண்ணகத்தாருடன் தொடர்புகொள்ளமுடியாது என்று கருத்துக் கொண்டிருந்தேன் அப்படிக்கருத்துக் கொண்டது தவறு என்பதைத் தெளிவுபடுத்தி அது எவ்வளவு பெரிய உண்மை என்பதை உங்களுக்கு விளக்கத்தான் அதன்மூலம் நீங்கள் மாபெரும் நன்மை அடையவேண்டும் என்ற ஒரே பேராவலினுல் தான் இவ்வளவும் கூறுகின்றேன்.

நான் அங்கு வாழ்ந்த காலத்தில் இதைப்பற்றிய உண்மையை ஆண்டவன் எனக்குச்சரிவர உணர்த்த தக்கதொரு மனிதரைக் காண்பிக்கவில்லை இதைச் சரிவர எனக்குஎடுத்துச்சொல்வாருமில்லை. அப்படி இருந்தவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியதில்லை. அதோடு நான் அன்று அமெரிக்காவில் ஒரிடத்தில் பார்க்கப்போனபொழுது, அங்கிருந்த மீடியம் செல்வி. வித்தக விநாயகவடிவுக்கு இருப்பதைப்போன்ற கலை சிறந்த புண்ணிய மீடியம் இலலை. அன்று அமர்ந்திருந்த மீடியத்தின் சக்திக்கும். செல்வி வித்தக விநாயக வடிவின் மீடியத்தின் சக்திக்கும் உவமானம் சொல்ல முடியாத அளவுக்கு வேறுபாடு இருப்பதை இப்போது மிக நன்ருக உணருகிறேன்.

அதோடு அன்று நான் “It requires no ghost to tell that” என்று நான் பார்த்துக்கொண்டிருந்த பொழுது பேசிய ஆவி என்னை ஒரு பெரிய மகான் என்றும், நான் ஒரு இந்தியன் என்பதையும் கூறிய பொழுது கூறினேன். முதலில் அந்த கருத்தே தவறு என்பதைச் சொல்ல விரும்புகிறேன். என் பேச்சின்படிபார்த்தால் இறந்தவர்கள் எல்லோரும் பிசாசுகள் என்ருகிறது.

ghostஎன்ருல்பிசாசுதானே அப்படியென்ருல் இறந்த எல்லோருமே பிசாசுகளாவோம். இது எப்படிச் சரியாகும்? இதிலிருந்தே நான்

(15-ம் பக்கம் பார்க்க)

# அம்புலிக் கற்களில் புதிய கனிப்பொருள்கள்

அப்பல்லோ—11விமானிகள் கடந்த ஜூலைமாதம்அம்புலியிலிருந்து கொணர்ந்த அம்புலிக் கற்களில் இரண்டு அரிய கனிப்பொருள்கள் இருப்பதைத் தாங்கள் கண்டுபிடித்துள்ளதாக ஜப்பானிய விஞ்ஞானிகள் அறிவிக்கின்றனர். அப்பட்டைட், டிராய்லைட் என்னும் இவ்விரு கற்களையும் ஜப்பானில் இரண்டு விஞ்ஞானக் குழுக்கள் ஆராய்கின்றன.

நாஸா என்ற அமெரிக்க விண்வெளி நிலையத்தின் ஆதரவில் இந்த ஆராய்ச்சி, நடக்கிறது. அனைத்துலக ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் ஒன்பது நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகளுக்கு அம்புலிக் கற்களை நாஸா வழங்கியது.

ஜப்பானியக் குழுக்களின் தலைவர்கள் டாக்டர் இகுவோ குஷிரோ, டாக்டர் தகேஷ நகத்தா ஆவர். இருவரும் டோக்கியோ பல்கலைக்கழகத்தினர். டாக்டர் குஷிரோ நில உட்கூற்றியல் வல்லுநர்; டாக்டர் நகத்தா பூபௌதிக விஞ்ஞானி.

அம்புலிக் கற்கள், பூமியில் இருக்கும் எரிமலைப்பாறை போன்றது; ஆனல் [illegible] விசை வேற்றுமையின் காரணமாக அம்புலிக் கற்களின் ரசாயன அமைப்பு மாறுபட்டிருக்கிறது; ஓரளவு காந்த விசையும் இந்தக் கற்களில் இருக்கின்றன என்று ஜப்பானிய விஞ்ஞானிகள் கூறுகிருர்கள்.

அம்புலிக் கற்களில் இது வரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நாஸா அறிவித்த ஒரு டஜன் கனிப் பொருள்களில் அப்பட்டைட், டிராய்லைட் ஆகிய இரண்டு கனிப் பொருள்களும் இல்லை என்று டாக்டர் குஷிரோ குறிப்பிடுகிருர்

சுத்தமான டிராய்லைட் ஒரு ஃபெர்ரஸ், ஸல்ஃபைட் ஆகும். இது விண்கற்களில்தான் காணப்படுகிறது. பூமியில் இயற்கையாகக் கிடைப்பதில்லை என்கிருர்.

காந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் குழுவின் தலைவர் டாக்டர் நகத்தா அம்புலிப் பொருட்களில் காந்த விசை கண்டுபிடிக்கப் பெற்றது தமக்கு வியப்பூட்டியுள்ளதென்கிருர்.

அம்புலிப்பாறை எரிமலைக் குழம்பிலிருந்து 450கோடி ஆண்டுகளுக்கு முன் ஏற்ப[illegible] கோடி முதல் 16 கோடி ஆண்டுகளுக்கிடையேஇந்தப் பாறைகள் அமைதிக்கடலில் தோன்றியிருக்கலாம் என்றும் தங்களுடைய அம்புலிப் பொருள் ஆராய்ச்சி காட்டுவதாக டாக்டர் நகத்தா, டாக்டர் குஷிரோ ஆகிய இருவரும் கூறுகின்றனர். அமைதிக் கடல்தான் அப்பல்லோ-11 வீரர்கள் இறங்கிய சமநிலம்.

டோக்கியோ பல்கலைக்கழகத்து விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற உரைக் கோவையொன்றில் இந்த இரண்டு விஞ்ஞானிகளும் தமது இடைக்கால அறிக்கையை விடுத்தனர்.

தங்களுடையஇறுதி அறிக்கையை அவர்கள் அமெரிக்காவிலே ஹூஸ்டன் நகரில் இருக்கும் விண்வெளி நிலையத்திலே, ஜனவரி 6ம்தேதி நடக்கும் கூட்டத்தில் தாக்கல் செய்வார்கள்.

அக்டோபர் மாதத்துவக்கத்தில் டாக்டர் குஷிரோ, டாக்டர் நகத்தா ஆகிய இருவரும்டோக்கியோவுக்கு அம்புலிப் பொருட்களை கொண்டு வந்தனர். தமது ஆராய்ச்சி 80 சதவீதம் முடிந்துவிட்டதென்றனர் இந்த விஞ்ஞானிகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இராமப்புற...

[7ம் பக்கத் தொடர்ச்சி]

ரியரும் பாராட்டுக்குரியவர்.

இராமனாக வந்த சி தணிகாசலம் இராமராக வே காணப்பட்டார் கூனிக்கு வந்த பொ. ஜகதீசன் உண்மையான கூனிதான் வந்துவிட்டாளோ என்று கூறும் படி நடித்தார். தசரதனாக வந்த கந்தையா சண்முகராசா நாடகத்தில் மிகவும் ஆர்வமுள்ள சிறந்த நடிகராகக் காணப்பட்டார். அவருக்குக் கொடுத்த சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தினார். குகனாக வந்த நாகலிங்கம் சந்திரசேகரன் ரசிகர்களின் மனதில் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டார். உயர்ந்த நடிகராகக்கூடிய நல்ல எதிர்காலம் அவரிடம் இருக்கிறது.

'எமிலி ஜோலா' என்ற நாடகத்தில் நடித்த பெரும்பாலோரும் சிறப்பாக நடித்திருந்தனர். நாடகம்பற்றிய பின்னணி அறிவிக்கப்பட்டாலும் கூடத் தெளிவாக எடுத்துக்கூறப்படவில்லை. 'ஸ்பீக்கரில்' முன்பின் பழக்கமில்லாத ஒருவர் அதைச் செய்துள்ளார்போலும் சில காட்சிகளை இங்கு தவிர்த்திருக்க முடியும். நீண்ட காட்சிகள் சலிப்பை ஊட்டின. காட்சி மாற்றங்கள் துரிதப்படுத்தப்பட்டிருக்கலாம். க. சௌந்தரராசா, வை. கோகிலான், க. கனகரத்தினம் ஆகியோர் திறம்பட நடித்தனர். ஒலிபெருக்கியின் அத்தியாவசியத்தை இந்நாடகம் நடித்தவர்கள் உணரவில்லை. ரசிகர்களை இந்நாடகம் கவரும் வாய்ப்பு இதனால் சிறிது தடைப்பட்டுவிட்டது.

ஏனைய பரத நாட்டியம், கிராமிய நடனம், கண்ணன் நாடகம், கீழைத்தேய நடனம் முதலியவற்றில் பங்கு கொண்ட மாணவிகள் தங்களால் இயன்ற அளவு நடித்துள்ளனர். கீழைத்தேய நடனத்தில் பங்குகொண்ட நால்வரில் க. வசந்தா முக பாவனையுடன் மிகவும் திறமையாக நடனமாடினார். பின்னணிப் பாடகிகளான சகோதரிகள் கு. யோகலட்சுமி, கு. பாலசரஸ்வதி, தி. திலகவதி இனிமையான குரலில் பாடி சபையோரைக் கவர்ந்தனர்.

நாடகங்களின் நாடகாசிரியரும், டைரக்டருமான மேற்படி வித்தியாலய சங்கீத ஆசிரியர் திரு. கந்தசாமி தனது அயராதமுயற்சியினால் நாடகங்களை திறமையாக மேடையேற்றுவதற்கு காரணமாயிருந்தார் என்றால் மிகையாகாது. மற்றக் கலை நிகழ்ச்சிகளை எல்லாம் மேடையில் அளிக்க ஒழுங்கு செய்த கல்லூரி சங்கீத ஆசிரியர் பாராட்டுக்குரியவர்.

மொத்தத்தில் இந்த பெற்றோர் தினவிழா சிறப்பாக அமைந்திருந்தது. மின்சார ஒளி, விழாவுக்கு மேலும் சிறப்பைக் கொடுத்தது.

## ஆங்கவர்க்கே...

11-ம் பக்கத் தொடர்ச்சி

விண்ணாகி மண்ணாகியித்தனையும் வேறாகிக் கண்ணாரமுதமுமாய் நின்றான்' எனறிவ்வாறெல்லாம் இறைவன் பெருமையை எடுத்தியம்புகிறார்.

### இறைவன் திருவருள்

இறைவன் திருவருள் மழைபோன்றது. மேகமானது உமையம்மையின் திருமேனிபோல நீலநிறத்தோடு விளங்கி, அவளது சிற்றிடைபோல மின்னலை விடுத்து, பெருமாட்டியின் சிலம்பொலிபோல் இடி முழக்கம் செய்து, அவளது திருப்புருவம்போல வானவில் வீசி மழை பெய்யும். அம்மழைபோல் இறைவன் திருவருளை ஆன்மாக்கள்மேல் பாலிக்கின்றார்.

இவ்வுலகினரும், வானுலகினரும், பிறவுலகினரும் அறிவதற்கு அரிய திருவுருவத்தை சிறுமையுடைய எம்மை அடிமையாகக் கொண்டு குற்றம் பொறுத்துச் சீர் செய்யும் பெருங்குணத்தையும் திருவருளையும் வியக்காமலிருக்க முடியாது. ''தானே வந்தெம்மைத் தலையளித்தாட்கொண்டருளும்'' திருவருட்திறத்தை மாணிக்கவாசகர் அருமையாக எடுத்துக் காட்டுகின்றார்.

இவ்வாறெல்லாம் திருவருள் பாலிக்கும் இறைவனிடம் மகளிர் வேண்டுவதக மாணிக்கவாசகர் கூறும் செய்தி யாதெனில்,

''உன்னடியார் தாள்
பணிவோம் ஆங்
கவர்க்கேபாங்காவோம்
அன்னவரே எங்கணவராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்
பாய்ப் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்
கோன் நல்குதியேல்
என்ன குறையும்இலோம்...

இறைவனில் பக்தியுடையோரே எமக்கும் கணவராக அமையவேண்டும் என அவர்கள் வேண்டுதல் செய்யும் உளப்பாங்கை இக்கால மகளிரும் பின்பற்றினால் நாடு சிறந்து விளங்கும் என்பதற்கு ஐயமில்லை. இறை பக்தியுடைய தலைமகன் தன் நாட்டுக்கும் தன் மனைக்கும் நல்லனவற்றையே செய்வான் என்பதுகண்கூடு. மகளிர் யாவரும் தம்முடைய கணவர் சிவனடியாராக விளங்கவேண்டும். இறைவனே! இன்னவகையாய் எமக்கருளினீராகில் எமக்கு வேறு யாது குறையும் ஏற்படாது எனக் கூறிய மகளிரது மன உறுதியில் திடமுள்ளோராய் இறைவனுக்கு ஒரு விண்ணப்பம் விடுக்கின்றனர். ''எங்கள் பெருமான் உனக்கொன்றுரைப்போங் கேள். எங்கொங்கைநின்னன்பரல்லார் தோள் சேரற்க'' என்ற அவர்களது உறுதிப்பாடு போற்றுதற்குரிய தாயமைகின்றது.

காதிற் பிணித்த தோடு ஆடும்படியாகவும், உடம்பிலணியப்பட்ட பொன் அணிகள் ஆடவும், கூந்தல் மாலை ஆடவும், மாலையைச்சுற்றும் வண்டுக்கூட்டம் சுழலவும், குளிர்ந்த நீருள்மூழ்கி, தில்லைச் சிற்றம்பலத்தைப் புகழ்ந்து பாடி, அறிவநூற்

[15ம் பக்கம் பார்க்க]

## தமிழ்ப் படங்களில்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கவும் ஒரு எல்லைகட்டி எடுப்பதால் இதில் முயற்சி செய்வதில்லை. மேலும் நம் தமிழ் படம் எடுப்பவர்கள் கன்சர்வேடிவ் மனப்பான்மை உடையவர்கள்.

படம் முடிவில் வில்லன் அடிபட்டு கதாநாயகன் காதலி வெற்றி பெற்று கல்யாணம் செய்து கொண்டால்தான் மனம் நிறைவு பெறும். ஆனால் உலகில் நடப்பதென்ன? தீய வழியில் செல்பவர்கள் சம்பாதிப்பவர்கள் உலகில் வசதியுடனும் புகழுடனும் வாழ்வதில்லையா? அதை அப்படியே காட்ட முடிகிறதா? காதல் எல்லாம் கல்யாணத்தில்தானா முடிகிறது. தீயவன் வெற்றி பெறுவது உண்மை. அதை சரி என்று கூறுவதுபோல் படத்தில் நம்மால்காட்ட முடியவில்லை. வீட்டில் பல துன்பம் இருந்தாலும் ஏதோ ஒரு மன நிறைவுக்காகத்தான் படம் பார்க்கவருகிறார்கள். அந்த நிறைவை தமிழ்ப் படங்கள் தரவேண்டும். இதுதான் நமது பழக்கம். இப்பழக்க வழக்கங்கள் உள்ள படம் 'உலக மார்க்கெட்' பெறுவது எப்படி? ஏராளமான பொருள் செலவு—அந்நியச் செலாவணி போன்ற சிரமங்களும் இந்த முயற்சியில் பலரை ஈடுபட வைக்க முடியாமல் தடுக்கிறது.

### நாடகம்

கே: நாடகத்தில் நடிக்க உங்களுக்கு ஆர்வம் உண்டா?

ப: என்ன இப்படிக்கேட்டுவிட்டீர்கள்? நாடகம்தான் எனக்கு உயிர். மாதம் இரண்டு மூன்று தடவை நண்பர்களுடன் சேர்ந்து நடிக்கிறேன். ஓய்வு இல்லாததால்தான் நடிக்க முடியவில்லை நாடகம்தான் என்னை சினிமாவுக்கு அனுப்பிவைத்தது நான் தனியாக 'கம்பெனி' வைத்திருக்கவில்லை.

நாடக மறுமலர்ச்சி சினிமா உலகிலும் பெரும் மறுமலர்ச்சி ஏற்படுத்துவது திண்ணம்.

### வெளிநாடு பயணம்

கே: மனைவியுடன் வெளிநாடு போகும் திட்டம் உண்டா?

ப: இப்போதைக்குஇல்லை. காஷ்மீரிலேயே 31/2 நாட்கள் தான்தங்கமுடிந்தது. ஆசை இருந்தும் தங்க முடிவதில்லை—காலமில்லை. மீண்டும் காஷ்மீர்செல்ல ஆசையாக் உள்ளது. அனைவரும் பார்க்கவேண்டிய இடம் காஷ்மீர்.

### வெளியேசெல்வது ஏன்

கே: நீங்கள் புதுவீடு கட்டியுள்ளீர்களா?

ப: இல்லை. முன்பே நல்ல வீடு வாங்கிவிட்டேன்.

கே: நீங்கள் படப்பிடிப்பு நேரத்தில் 'செட்'டுக்கு வெளியே வந்து நண்பர்களுடன் பேசிக்கொண்டிருப்பதாக ஒரு 'டைரக்டர்' சொல்லியுள்ளாரே?

ப: செட்டில் இடைநேரத்தில் நான் சத்தம் போட்டுப் பேசிச் சிரிப்பேன். சிவாஜி போன்ற பெரியவர்கள் செட்டுக்குள் இருக்கும்போது மரியாதைக்காக நான் வெளியே போய் பேசிக்கொண்டிருப்பதுண்டு. நான் 'அவிட்டு' சிரிப்பு சிரிப்பேன். அதனால்தான் நண்பர்களுடன் வெளியே பேசுவேன் இதைத்தவிர தொழிலில் அலட்சியம் காரணமல்ல. டைரக்டர் திருலோக்சந்தர் அன்புடன்தான் அதைக் கூறினார். நண்பர்கள் கூட்டத்திலேயே இருந்து பழக்கப்பட்டவன் நான் என்ன செய்வது?

### நடிகர் சங்கம

கே: நடிகர்'சங்கம்'பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: நடிகர் சங்கம் பொது நலத்தொண்டில் ஈடுபட வேண்டும். வெறும் போட்டி பொறாமைகளை வளர்க்கக் கூடாது.

கே: ரசிகர்கள் தொல்லையிலிருந்து தப்ப நடிகர், நடிகைகள் மக்கள் மத்தியில் வந்து பழகினால் என்ன?

ப: மக்களிடையில் கலந்து பழகவும் கடைவீதிகளில் நடக்கவும் எனக்கும் ஆசைதான். இந்த நாட்டில்மட்டுமல்ல, எந்த நாட்டிலும் இதே நிலைதான் நடிகர்களுக்கு உள்ளது. தமிழ் நாட்டில் பரவாயில்லை. ஹொலிவுட்டில் மொய்த்துப்பிய்த்து முத்தமிட்டுவிடுவார்கள். இங்கு அப்படி இல்லை.


### வெஸ்லி சினிமா

மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
ரவிச்சந்திரன்-கே. ஆர் விஜயா
நடித்த
நினைவில் நின்றவள்

### ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்
கிருஷ்ணா - கே. ஆர். விஜயா
வாணிஸ்ரீ
நடித்த
மாஸ்டர் மதராஸ்

### REGAL JAFFNA

Daily 10-30 a.m, 2-00
4-45, 7, & 9-45 p.m
Sean Connery,
Karin D'Or
in
YOU ONLY
LIVE TWICE

### ஸ்ரீ காலிங்கன்

இணுவில்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி - பத்மினி
நடித்த
கல்யாணம்பண்ணியும்
பிரம்மச்சாரி

### MANOHARA JAFFNA

Daily 4-45, 7 & 9-45, p.m
Poya Prepoya 10-30 a.m.
Janet Leigh
Edward G. Robinson
in
OPERATION
GRANDSLAM
(Scope-color)

வல்வெட்டித்துறை

### றஞ்சனா தியேட்டர்

தினசரி: 6-30, 9-30
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
நாடோடி

### ராணி (யாழ்ப்பாணம்)

[தினசரி 3 காட்சிகள்]
ஜெமினி - சரோஜாதேவி
எஸ். எஸ் ஆர். - ராஜசுலோஜனா
நடித்த
குலவிளக்கு

### வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
கிங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை]
ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான
மற்றுமோர் வெற்றிச்சித்திரம்



★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே ஆர். விஜயா
★ நாகேஷ் ★ மனோரமா
நடித்த
திருவருட்செல்வர்
[ஈஸ்ட்மென் கலர்]

### வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்
★ ஜெமினி கணேசன் ★ ரங்கராவ்
சௌகார் ஜானகி, வாணிஸ்ரீ, ரோஜாரமணி, ஷகிலா
நடித்த
குழந்தை உள்ளம்
டைரக்ஷன்: சாவித்திரி கணேசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்ணக ...

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

அதைப்பற்றி சரியான தெளிவு பெற்றிருக்கவில்லை என்பது தெளிவாகிறது அல்லவா? அதோடு அவன் அரும்பெரும் செய்திகள் தான் அறிந்து சொன்னான். தீர்க்க முடியாத வியாதிகளுக்கு அவன் மருந்து சொல்லவில்லை.

இதற்கு ''இறந்தவர்கள் பேசும் பலகை'' என்ற பெயர் இனிப் பொருந்தாது. ''விண்ணுலகத் தொடர்புப் பெட்டி'' என்பதே சிறந்த பெயராகும். இதுநாள்வரை அந்தப் பெயர் ஓரளவு பொருத்தமாக இருந்தது. இப்போது அப்படியில்லை. ஏன் என்று கேட்டால் சாதாரண மக்கள் இறப்பார்கள். ஆனால் முக்தியடைந்த மகான்களை இறந்ததாகச் சொல்லுவது பொருத்தமில்லை. இதுநாள்வரை அநேக மீடியம்மூலம் அவரவர் உறவினர்கள் மட்டுமே பேசினார்கள். ஒரு சில மீடியங்களில் மட்டும் ஒரு சில மகான்கள் பேசினார்கள். அதுவும் குறிப்பிட்டு சொல்லுகிறப்போல் இல்லை. செல்வி வித்தகத்தின் மீடியத்தின்மூலம் பூவுலகில் தாய் வயிற்றில் அவதரித்த மாபெரும் மகான்களும் முக்தி நிலையில் இருப்பவர்களும் சர்வ சாதாரண மக்களும் பேசக்கூடியதாய் இருக்கிறது.

நான் அன்று சொன்ன கருத்து வேடிக்கை பார்க்கச் சென்றபொழுது சொன்ன கருத்தாகும். ஆராய்ந்து சொன்னவை அல்ல. எனக்குப் பூரண ஞானம் ஏற்பட்டால் நான் மௌனத் துறவியாகிவிடுவேன் என்று என் தெய்வ குருநாதர் மகான் ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்ச சுவாமியவர்கள், உலகத்தாயான அம்பிகையிடம் கேட்டுக்கொண்டதாக நான் இப்போது அறிகிறேன்-அதாவது இங்கு வந்த பிறகு. அதனால் எனக்கு ஆண்டவன் சிற்சில உண்மைகளை மறைத்து வைத்திருந்திருக்கிறான். எந்த ஒரு விஷயத்தை, எந்தக் காலத்தில் யாரைக் கொண்டு, எப்படி நடத்தி வைக்கவேண்டுமோ, அதன்படியே ஆண்டவன் நடத்தி அருள்வான். இதைத்தான் அவனின் திருவிளையாடல் என்பது. அன்று என்னைச் சொல்ல வைத்ததும் அவனே. இன்று மறுக்க வைத்து, உண்மையை விளங்கவைப்பதும் அவனே. இன்றைய நாத்திகத்தைப் போக்குவதற்கு என்றே திட்டம் போட்டுவிட்டான். அதை எடுத்தெறிய அன்றே விதை விதைத்துவிட்டான். அவ்விதை இப்போது விருட்சமாகி இருக்கிறது. அவ்வளவுதான். என்னே ஆண்டவனின் திருவிளையாடல்.

அன்று நான் இவ்விஷயத்தைக் கேட்டவுடன் புன்னகை புரிந்தேன். புன்னகை புரியாமல் வேறென்ன புரிந்திருக்க முடியும்? எனக்கு இப்போதல்லவா விஷயமே புரிந்திருக்கிறது. சரிவரப் புரியாமல் தவறான கருத்தைக் கொண்டதற்கு மனம் வருந்துகிறேன். என்னே ஆண்டவனின் விநோத விளையாட்டு.

இப்போது நானே எவருக்கும் அழைப்பு விடுக்கிறேன். அவர்களின் எப்பேர்ப்பட்ட சந்தேகங்களையும் தீர்த்து வைக்கிறேன். அன்று நான் அங்கு நடந்த நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக்கொள்ளாமல் அந்தக் கருத்தைக் கூறினேன். இன்று நேரடியாக, நிகழ்ச்சியில் முதல்வனாகப் பங்கெடுத்து, வெற்றிகரமாக இதைப் பரப்பத் தயாராகக் காத்திருக்கிறேன். ஓடி வாருங்கள் வித்தகம் இருக்கும் இடத்திற்கு; சந்தேகம் தானாகவே ஓடிவிடும்.

## ஆவி உலக நிலைமை

# கேள்விகளுக்கு ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான் தரும் பதில் விவரங்கள்

கைலாயத்தில் முத்தி நிலையிலிருக்கும் சைவசமய ஐந்தாங்குரவராகிய பகவான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் (யாழ்ப்பாணம், நல்லூர்) அவர்கள், இறைவன், ஆன்மா, சமயம் பிதிர்கள், சிரார்த்தம் சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு விண்ணுலகத் தொடர்புப் பெட்டி (இறந்தவர்கள் பேசும் பலகை) மூலமாக மீரிகாமம், இந்திப்பரப்ப ஆனந்த நிலயம் என்ற இடத்தில் வைத்து செல்வி வித்தக விநாயகவடிவின் மீடியம்மூலமாக அருளிய பதில் விளக்கங்கள்.

கேள்வி கேட்பவரின் பெயர்:- ஸ்ரீ சி. கணேசலிங்க ஐயர், பாலர் ஞானோதய சபை, காசி விநயகர் ஆலயம், தெல்லிப்பளை.

கேள்வி 1: ஆவியுலகத்தில் இறந்தவர்களுடைய ஆவிகள் யாவும் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அப்படியானால் கோடிக்கணக்கில் ஆவிகள் அங்கு வசிக்கின்றவா? அங்ஙனம் வசிப்பதாயின் சீவராசிகள் எங்கிருந்து பிறக்கின்றன?

கேள்வி 2: சைவசமய முறைப்படி இறந்த ஆன்மாக்கள் ஓர் ஆண்டின் மேல் பிறவி எடுப்பதாயும் அதன்மேல் செய்யப்படும் சிரார்த்தம் முதலியவற்றை ஆவியுலகத்திலுள்ள குறிப்பிட்ட சிலரே ஏற்றுக்கொள்வதாகவும்கூறப்படுகின்றது. இதுபற்றி தங்களுடைய கருத்தென்ன?

முதல் கேள்விக்கும் இரண்டாவது கேள்விக்கும் உரிய பதில்:-

சீவராசிகளும் ஆண்டவனும் என்றும் இருக்கின்றார்கள். சீவராசிகளின் பாவ புண்ணிய வினைப்படி அவற்றிற்கு ஆண்டவன் உடலைக் கொடுத்துக்கொண்டேயிருக்கிறான். இறந்த ஆவிகள் எல்லாமே ஆவியுலகத்திலேயே தான் என்றும் இருக்கும் என்பதில்லை. அதற்குரிய வினைப்படி மீண்டும் பிறப்பு இருந்தால் பூவுலகில் பிறக்கும். இல்லாவிட்டால் முத்திநிலை அடைந்துவிடும். மீண்டும் பிறந்தவர்களுக்கு அவர்களுடைய முன்ஜென்ம உறவினர்கள் செய்யும் பிதிர்க்கடன்களைத்தான் குறிப்பிட்ட சிலர் ஏற்றுக் கொள்கிறார்கள். அந்த ஆவி மீண்டும் பூவுலகில் பிறந்துவிட்டால் அவர்களுக்குரியதைச் செய்தாலும் செய்யாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் அப்படி செய்யாமலிருப்பது மீண்டும் அவ்வுலகில் மறுபிறப்பு எடுத்த பின்னரே செய்யாமல் இருக்கவேண்டும். ஆனால் அதை எப்போதும் செய்வதால் நன்மையேயன்றி தீமையில்லை. இதை அறிவதற்கு இந்த இறந்தவர்களுடன் பேசுவதுதான் சுலபமான வழியாகும்.

அங்ஙனம் ஓர் ஆத்மா மறுபிறப்பு எடுத்த பிறகும் நீங்கள் பிதிர்க்கடன்கள் செய்திருந்தீர்களானால் அதனால் எவ்வித பிரயோஜனமுமில்லையே என்று எண்ண வேண்டாம். அங்ஙனம் அதிகப்படியாக செய்யப்படும் பூஜைகளினால் அப்பூஜை செய்தவருக்கு பெரும் புண்ணியம் கிட்டுகின்றது அதோடு அப்படி அந்த ஆத்மா பிறவி எடுத்தபின்னும் அவர்களுக்கு நீங்கள் அவர்களை நினைத்து சிரார்த்தங்களைச்செய்தால் அவற்கு ஆண்டவனே சிரார்த்தம் செய்தவர்களுக்கு தகுந்த பலனைக்கொடுத்து அருள் புரிகின்றான், என்பதை நான் இங்கு வந்த பின் அறிகிறேன். அதோடு அந்த ஆத்மா பிறந்த பின் நீங்கள் செய்யும் கடன்களை இங்கு தேவர்களே ஏற்றுக்கொள்கின்றார்கள். அதனால் பிதிர்க்கடன்களை விடமால் செய்துவருவது அதிக நன்மையே அளிக்கும்.

இறந்த எந்த ஆன்மாக்களும் ஒரு வருடத்திற்கு மேல் பிறவியெடுக்கவேண்டுமென்ற நியதி இல்லை. அப்படி அவர்கள் எடுப்பதுமில்லை. இதை நான் இங்கு வந்தபின் தெளிவாகஉணர்ந்து கூறுகின்றேன். அதோடு அவ்வுலகத்தில் பாவஞ் செய்த ஆத்மாக்கள் இவ்வுலகத்தில் பல வருடங்கள் நரகத்தில் அதற்குரிய துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. அப்படியிருக்கும் போது ஒரு வருடம் கழிந்தவுடனேயே அந்த ஆன்மா எப்படி மறுபிறவி எடுக்கமுடியும்?

கேள்வி 3: இறந்தவர்களுடையஆவிகள் பதில்தரும் போது இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் என்பனவற்றில் எக் காலத்தைப் பற்றிக் கூறுகின்றன?

பதில்: முக்காலத்தையும் கூறுவர். ஆனால் அது அவர்களுக்கு இஷ்டமிருந்தால் தான் கூறுவர். சிலவற்றைக் கூறக்கூடாது என்பது அவர்களுக்கு இடப்பட்ட கட்டளை. அதைப் பொறுத்தே அவர்கள் அவற்றைக் கூறுவர். அதோடு சகல ஆவிகளுக்கும் முக்காலத்தைப் பற்றி அறிந்துகூறமுடியாது. சில பெரிய சுவாமிகள்தான் கூறுவார்கள். சிலசமயம் மற்ற ஆவிகளும் அவர்களிடம் கேட்டு அவ்வுலகிலுள்ள உங்களுக்கு கூறுவர். இப்படி இன்னும் பல சந்தேகங்கள் இருப்பின் அதைக்கேட்கும் முறையில் பணிவாகக் கேட்டால் பூரண விளக்கங்களையும் கொடுக்க யான்காத்துக் கொண்டிருக்கின்றேன். தயாராகவும் இருக்கின்றேன். எல்லோருக்கும் ஆசீர்வாதம்.

உயர்திரு. ஸ்ரீ ப. சின்னராசா, மயிலிட்டி, காங்கேசன்துறை (29-11-69).

கேள்வி 1: ஆவியுலகம் என்பது எங்கே இருக்கின்றது? அது இப்பூமியிலா? அல்லது ஆகாயத்திலா அல்லது திங்கள் செவ்வாய் போன்ற கிரகங்களிலா அல்லது நட்சத்திர மண்டலங்களிலா?

பதில்: அன்ப, தங்கள் எண்ணப்படி ஆவியுலகம் பூவுலகத்திலுமில்லை, ஆகாயத்திலுமில்லை. [illegible] இவ எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டது ஆவியுலகம். ஆண்டவன் எங்கிருக்கின்றானோ அவனுக்கருகில்தான் ஆவியுலகமும் இருக்கின்றது. யான் இப்படிச் சொன்னால் தங்களுக்கு ஒரு கேள்வி எழும். அப்படியென்றால் ஆண்டவன் தூணிலுமிருப்பான், துரும்பிலுமிருப்பான் என்பதெல்லாம் வெறும் பேச்சுத்தானா என்று. அப்படி இல்லை. ஆண்டவன் எல்லோருடனும் இருக்கிறான். எங்கும் இருக்கிறான் ஆனால் அவன் உருவமாக இருக்கும் இடம்என்றுஒன்று இருக்கிறதல்லவா? அதுதான் கைலாயம். சுருங்கச் சொன்னால் ஓர் அரசனின் ஆட்சி நாடெங்கும் இருப்பினும் அந்த அரசன் இருப்பது அரண்மனையில்தானே. அதுபோலத்தான், அவன் இருப்பதோ அரண்மனையில். ஆனால் அவன் ஆட்சியோ நாடெங்கும் இருக்கின்றது. அதுபோல்தான் ஆண்டவன் இருப்பது கைலாயம். ஆனாலும் அவன் எல்லோரிடமும் தன் சக்தியால் இருப்பான். அது அவனுக்கு மட்டுமே முடியும். வேறு யாருக்கும் இயலாது. அதேபோல் ஆவி உலகமும் ஆண்டவனுக்கருகில் இருப்பினும் ஆவியுலகத்தில் வசிப்பவர்கள் அவன் அருளால் எல்லா லோகங்களுக்கும் சென்று பேசமுடியும். எந்த மண்டலங்களுக்கும் மனிதன் செல்ல முடியும். ஆனால் ஆவியுலகத்திற்கு இறந்தாலே அன்றி, மனிதன் தூல உடலோடு ஒருநாளும் வரமுடியாது அதற்கு அவன் விஞ்ஞானம் ஒருநாளும் உதவாது.

கேள்வி 2: ஆவி உலகத்திலுள்ள ஆன்மாக்கள் அங்கு என்ன செய்துகொண்டு இருக்கிறார்கள்? எமது சமய முறைப்படி பாவபுண்ணியங்களை அனுபவிக்கின்றார்களா அல்லது வேறு உடம்பு எடுத்துதொழில்படுகின்றார்களா அல்லது வெறும் ஆன்மாக்களாகவே இயங்குகிறார்களா?

பதில்: ஆவி உலகத்திலுள்ள ஆன்மாக்கள் அவரவர் செய்த பாவபுண்ணியங்களுக்கேற்ப இன்ப துன்பங்களை அனுபவித்துக்கொண்டும், சதா இறைவனைத் தொழுதுகொண்டும் இருக்கிறார்கள். ஆவி உலகத்தில் தொழில் முறையெல்லாம் கிடையாது. தொழில் எல்லாம் பூவுலகில்தான். ஆவி உலகத்திற்கென்று உடம்பு எடுப்பதுவும் கிடையாது. உடம்பு எடுத்தால் பூவுலகத்திற்காகத்தான் எடுக்க வேண்டுமேயன்றி ஆவி உலகத்திற்காக உடம்பு எடுப்பதில்லை. அவ்வுலகில் தூல உடம்பு எடுத்து வாழ்ந்து இறந்தபின் காற்றுப்போலுள்ள சூக்கும உடலோடுதான் ஆவியுலகத்தில் வாழ்வார்கள். பூவுலகத்தில் எடுக்கும் உடம்புக்கு இரண்டுவித உடம்புகள் உண்டு. ஒன்று தூல உடல். மற்றொன்று சூக்கும உடல். பூவுலகில் தூலஉடல் இறந்தபின் சூக்குமஉடல் ஆவி உலகத்தில் வாழ்கின்றது. தூலஉடல் கண்ணுக்குத் தெரியும். சூக்கும உடல் தூல உடலோடு இருப்பவர் கண்களுக்குத் தெரியாது. ஆன்மாக்கள் சூக்கும உடலோடுதான் இருக்கின்றார்கள்.

கேள்வி 3: இவ்வான்மாக்கள் எப்பொழுது மறுபடி பூமியில் பிறவி எடுக்கின்றன அல்லது முத்தியடைகின்றன? இவ்வான்மாக்களை அங்கு இயக்குபவர்களின் தோற்றம் தொழில்கள் என்ன? இவ்வான்மாக்கள் அங்கு என்னென்ன செய்கின்றன?

பதில்: ஆன்மாக்கள் அது அது செய்த பாவபுண்ணியங்களுக்கேற்ப இன்ப துன்பங்களை அதற்குரிய காலம் வரை அனுபவித்துவிட்டு பிறகே அதனதன் வினைப் பயன்படி பிறவியோ முக்தியோ அடைகின்றன. அதற்கு காலவரை கிடையாது. ஒருவருடமும் ஆகும், இரு வருடமும் ஆகும். பல வருடங்களும் ஆகும்.

ஆன்மாக்களை இயக்குவது ஆண்டவன். அவனுடைய தோற்றம் உங்களுக்கேதெரியும் அவன் இங்கு கைலாயத்தில் உமையோடு கூடிய ரிஷப வாகனத்துடன் காட்சியளிக்கிறான். ஆன்மாக்களை மட்டுமல்ல. அவ்வுலக மனிதர்களையும் சகல உயிர்களையும் இயக்குவது ஆண்டவனே. ஆண்டவனின் தொழில்: படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்துமே. இங்கு ஆன்மாக்கள் இறைவனின் கட்டளைப்படியே ஒவ்வொன்றையும் செய்து இயங்கி வருகிறார்கள். இறைவனின் கட்டளைகள் பலவிதங்களில் இருக்கின்றன. இவைகளில் சில தேவ இரகசியங்கள் ஆதலால் சொல்லக்கூடாது,

கேள்வி 4: இவ்வான்மாக்கள் எந்தவிதத்தில் அல்லது எப்பொழுது யாருடையஉத்தரவுகளுக்கிணங்கிப் பூமியில் பிறக்கின்றன?

பதில்: இக்கேள்விக்குப் பாதிப்பதில் மூன்றாவது பதிலில்கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆண்டவன் உத்தரவுக்கிணங்கி ஆன்மாக்கள் பூமியில் பிறக்கின்றன.

கேள்வி 5: ஆன்மாக்கள் பாவ புண்ணியங்களுக்கேற்ப பூமியில் பிறந்து அனுபவிக்கின்றன. பின்னர் ஆவியுல

[16ம் பக்கம் பார்க்க]

## ஆங்கவர்க்கே...

[14ம் பக்கத் தொடர்ச்சி]

பொருளினைப்பாடி, இறைவன்அப்பொருளாய் நிற்கும் முறையையும்பாடி. ஒளியுருவனின் ஆற்றலைப்பாடி, அவன் சென்னியிற் சூடப் பெற்றுச் சூழ்ந்துள்ளகொன்றைமாலையையும்பாடி. அவன் ஆதியான முறையையும்பாடி பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை தன் பாதத்திறம்பாடி நீராடும் மகளிரின் வேண்டுதலுக்கு இறைவன் திருவருள் கிடைப்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

'நாடு செழிக்க நல்லமழை வேண்டும், இல்லறம் நல்லறமாகநல்ல கணவரைக்கன்னியர் கல்யாணம் செய்து கொள்ளவேண்டும்' என்ற பாவை நோன்பின் பழைய அடிப்படைக் கருத்துக்களை விளக்க வந்ததே இத்திருவெம்பாவைத் [illegible]கும்.


JAFFNA COLLEGE
Bunker Memorial Lectures
1969
Dr. K. G. Saiyidain
will speak on
'CRISIS IN MODERN SOCIETY'
at
Veerasingham
Memorial Hall, Jaffna
on
17th, & 18th. December,
beginning at 6 p. m.
each day.
All are welcome
1862

வரிவிளம்பரம்

விற்பனைக்கு
சகல பகிரங்கப் பரீட்சைகளுக்குமுரிய பொதறிவு வினா-விடை புதிய பதிப்பு 2000 க்கு மேற்பட்ட வினா-விடைகள். ஆக்கம் திரு. த. ந. பஞ்சாட்சரம். விலை 3 ரூபா. ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை, 213, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1590

தேவை
மாநகரசபை எல்லைக்குள் சைக்கிள் மூலம் பத்திரிகை விநியோகம் செய்யக்கூடிய பையன்கள் தேவை. பிணைப் பணம் 1500ரூபா. சம்பளம் 125 ரூபா தி. தர்மலிங்கம், 32, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 1713

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மகாத்மா மணிமொழிகள்

அகிம்சை ஒரு மேலான நெறி. அதுதான் சிறந்த அன்பு அதனுல்தான் மனிதனுடைய உள்ளத்தை மாற்ற முடியும்.

ஃ ஃ ஃ

மின்சாரத்திலிருந்து சக்தியானது எப்படிப் பயன ளிக்கிற முறையில் வேலே செய்கிறதோ அவ்வண்ணம் வேலே செய்யும் சக்திதான் சத்தியாக்கிரகம்.

ஃ ஃ ஃ

ஒவ்வொரு மனிதனும் கடவுளின் வடிவமாயிருக்கிருன். ஆனுல், அவன் அறியாமை என்னும் இருளினுல் மூடப்பட்டிருக்கிருன். அறியாமையானது உள்ளத்திலிருக்கும் பரம்பொருளேச் சேரவிடாமல் தடுக்கிறது.

மில்க்வைற் நீலசோப் 50 மேலுறைகளே கொடுத்து ஒரு 1970-ம் ஆண்டு கலண்டரைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலே
யாழ்ப்பாணம்.

கிளே:
மில்க் வைற் டிப்போ,
83, ஜிந்துப்பிட்டிவீதி,
கொழும்பு-13.

# சிப்பாய்களே கட்டுப்படுத்த மன்னுரில் பொலிசார் சுட்டனர்; நிலைமையை சமாளிப்பதாக எம். பி.க்கு பிரதமர் உறுதி

தள்ளாடி, திங்கள்

மன்னுரில் தள்ளாடி இராணுவ முகாமைச் சேர்ந்த இரண்டுஇராணுவச்சிப்பாய்கள் அடித்துக்கொலேசெய்யப்பட்டு தாழ்வுபாடுக்கடற்கரையில் புதைக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்துதாழ்வுபாடிலும் மன்னுர்ப்பகுதியிலும் எழுந்துள்ள நிலைமை சம்பந்தமாகவும் அங்கு சட்டம், ஒழுங்கு, அமைதி ஆகியவற்றை நிலைநாட்டுவதுபற்றியும் மன்னுருக்கு இன்று விரைந்துவந்து சேர்ந்த உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. டெடிகம, இராணுவத் தளபதி சேபால அட்டிகல, வடபகுதிப் பொலிஸ் சுப்பிரின்டன்ட் திரு. ஆர்.சுந்தரலிங்கம் ஆகியோரும் மன்னுர் அரசாங்க அதிபர், மன்னுர் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. ஏ. அழகக்கோன் மற்றும் அதிகாரிகள் பலரும் தள்ளாடி இராணுவ முகாமில் இன்று மாலே கூடி ஆலோசனை செய்தார்கள்.

### பொலிசார் சுட்டனர்

தாழ்வுபாடு கடற்கரையில் புதைகுழியொன்றிலிருந்து இரண்டு இராணுவச் சிப்பாய்களின் சடலங்கள் நேற்றுத் தோண்டியெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து பொலிசார் புலன்விசாரணை செய்துவருகின்றனர். இரண்டு இராணுவ வீரரின் மரணம் சம்பந்தமாக மன்னுர் பதில் நீதிபதி திரு. நவரத்தினம் மரணவிசாரணை நடத்தியபோது அங்கு சமூகமளித்திருந்த சட்டவிரோதக் குடியேற்றத்தடுப்புப் பிரிவின் இராணுவத் தளபதி இராமநாயகா, தள்ளாடி முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய்கள் முகாமிலிருந்து வெளியே செல்லக்கூடாதென்றும் துப்பாக்கிகளே எடுத்துச் செல்லக்கூடாதென்றும் நேற்றுமாலே உத்தரவுபிறப்பித்துவிட்டுச் சென்றுராம். ஆனுல் நேற்றிரவு தள்ளாடி இராணுவச் சிப்பாய்கள் சிலர் வெளியேவந்து தபால் தந்திப்பகுதிக்குச் சொந்தமான ஒரு லொறியை எடுத்துக்கொண்டு தாழ்வுபாடு கிராமத்துக்குச் சென்றதாகவும் அந்த லொறியில் பெட்ரோல், கல்லு, தடி முதலியனகொண்டுசெல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதுபற்றி மன்னுர்ப் பொலிசாருக்குத் தகவல் கிடைத்ததும் பொலிசாரும் அங்கு சென்றனராம். இதற்கிடையில் தாழ்வுபாடு கிராமத்தில் நுழைந்த ராணுவச் சிப்பாய்கள் அங்குள்ளவர்கள்மீது தாக்குதல் நடத்தத் தொடங்கியதாகவும் வீடு ஒன்றுக்குத் தீவைக்க முயன்றதாகவும் கூறப்படுகிறது. இச்சமயத்தில் அங்கு வந்து சேர்ந்த பொலிசார் நிலைமையைச் சமாளிக்க எடுத்த நடவடிக்கைகள் பயனளிக்காமல்போகவே நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகவும் இதில் இருவர் காயமடைந்ததாகவும், காயமடைந்த இருவரும் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

தள்ளாடி முகாமுக்குச் சமீபத்திலுள்ள மன்னுர்ப் பாலத்திலும் சில சிப்பாய்கள் தாக்குதல் நடத்திய போது நிலைமையைச் சமாளிக்க பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ய நேர்ந்ததாம். இதிலும் இருவர் காயமடைந்ததாகத் தெரிகிறது.

### பிரதமருடன் எம். பி. தொடர்பு

இச்சம்பவங்களேத் தொடர்ந்து நிலைமை மோசமாகலாமென அச்சமடைந்த மன்னுர்ப் பிரதிநிதி திரு. அழகக்கோன் பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவுடன் தொலேபேசியில் தொடர்புகொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென வற்புறுத்தியதாகவும் தாம் நிலைமையைத் தெரிந்திருப்பதாகவும் உரிய நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருப்பதாகவும் அஞ்சுவதற்கில்லையென்றும் பிரதமர் உறுதியளித்தாராம்.

இதற்கிடையில் தாழ்வுபாடு கிராமத்திலுள்ள பலர் பீதியடைந்து அங்கிருந்து வெளியேறி வேறு கிராமங்களுக்குச் சென்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

தள்ளாடி முகாமிலுள்ள இராணுவ சிப்பாய்களே உடனடியாக அங்கிருந்து இடமாற்றம் செய்யவேண்டுமென்றும் இரண்டு சிப்பாய்களின் கொலேபற்றிய புலன் விசாரணையை பொலிசாரிடம் ஒப்படைத்துவிடவேண்டுமென்றும் திரு. அழகக்கோன் பிரதமரைக் கேட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

தாழ்வுப்பாடு கிராமத்தில் இப்போது தற்காலிகமாக ஒரு பொலிஸ் நிலையம் நிறுவப்பட்டிருக்கிறது

## கொழும்பு - பதுளே...

(1-மபக்கததொடர்ச்சி)

20-ம் வட்டாரம் (கோட்டை)
ஜாபீர் ஏ காதர் (யு என் பி)
பெரும்பான்மை - 430

21-ம் வட்டாரம் (கொம்பனித்தெரு)
எம் டி கிச்சிலான்(யு என் பி)
பெரும்பான்மை - 1054

22 ம் வட்டாரம் (வேக்கந்தை)
டி எஸ் எச் ஸீபட் சில்வா (ஶ்ரீ ல சு க)
பெரும்பான்மை - 258

23-ம் வட்டாரம் (ஹுனுப்பிட்டி)
திருமதி மீனு இரத்தினம் (சுயேச்சை)
பெரும்பான்மை - 96

24-ம் வட்டாரம் (சுதுவெல்ல)
பி நந்தசேனகூறே (யு எள் பி)
பெரும்பான்மை - 516

25-ம் வட்டாரம் (பஞ்சிகாவத்தை)
சுமதிபாலா ஜயவர்த்தனு (ஶ்ரீ ல சு க)
பெரும்பான்மை - 1038

26-ம் வட்டாரம் (மருதானே)
ஜி டபிள்யு அபேகுணரத்னு (யு என் பி)
பெரும்பான்மை - 510

27-ம் வட்டாரம் (மாளிகாகந்தை)
ஏ எச் மாக்கான் மாக்கார் (யு என் பி)
பெரும்பான்மை 834

28-ம் வட்டாரம் (மாளிகாவத்தை கிழக்கு)
எம் எஸ் எம் சறூக் (ல ச ச க)
பெரும்பான்மை - 596

29-ம் வட்டாரம் (தெமட்டகொடை)
பந்துலகொலன்ன (ஶ்ரீ ல சு க)
பெரும்பான்மை - 557

30-ம் வட்டாரம் (வனுத்தமுல்ல)
எச் டி எஸ தர்மசிறிவர்த்தனு (ஶ்ரீ ல சு க)
பெரும்பான்மை - 456

31-வட்டாரம் (குப்பியாவத்தை கிழக்கு)
எம் ஹலீம் இஷாக் (ஶ்ரீ ல சு க)
பெரும்பான்மை - 524

32-ம்வட்டாரம் (குப்பியாவத்தை மேற்கு)
டபிள்யு கே சமரதாசா (ல ச ச க)
பெரும்பான்மை-353

33-ம்வட்டாரம்(பொரளே வடக்கு)
எம் ஜி மெண்டிஸ் (கம்யூ)
பெரும்பான்மை - 1105

34-ம் வட்டாரம் (நாராம்பிட்டி)
விக்டர் டாபரே (ஶ்ரீ ல சு க)
பெரும்பான்மை - 998

35-ம்வட்டாரம்(பொரளே தெற்கு)
ஜி பி பெரேரா (யு என் பி)
பெரும்பான்மை -531

36-ம் வட்டாரம் (கறுவாக்காடு)
லயார்ட் ஜயசுந்தரா (யு என் பி)
பெரும்பான்மை - 9038

37-ம் வட்டாரம் (கொள்ளுப்பிட்டி)
பி சுமதி இரத்தினு (யு என் பி)
பெரும்பான்மை - 1220

38-ம்வட்டாரம் (பம்பலப்பிட்டி)
ஈ எல் பி மெண்டிஸ் (யு என் பி)
பெரும்பான்மை - 840

39-ம் வட்டாரம் (மிலாகிரிய)
திரு [illegible] (யு என் பி)
பெரும்பான்மை - 1402

40 ம் வட்டாரம் திம்பிரிகசாய)
பேட்ரம் ரொட்ரிகோ (யு என் பி)
பெரும்பான்மை-847

41-ம்வட்டாரம் (கிரில)
பேனுர்ட்சொய்சா(ல ச ச க)
பெரும்பான்மை -882

42-ம் வட்டாரம்(ஹவ்லக்டவுண்)
எட்மன் சமரவிக்ரம (யு என் பி)
பெரும்பான்மை - 751

43 ம் வட்டாரம் (வெள்ளவத்தை வடக்கு)
இராஜரத்தினம் மகேந்திரா (யு என் பி)
பெரும்பான்மை - 311

44-ம் வட்டாரம் (கிரிலப்பனே)
பந்துஜீவபெரரா(ஶ்ரீ ல சு க
பெரும்பான்மை - 165

45-ம் வட்டாரம் (பாமன்கடை கிழக்கு)
ஆனந்தபிரேமசிங்கா (ல ச ச க)
பெரும்பான்மை - 174

46-ம் வட்டாரம் (பாமன்கடை மேற்கு)
ஸி எஸ் பெர்னுன்டோ (யு என் பி)
பெரும்பான்மை-887

47-ம் வட்டாரம் (வெள்ளவத்தை தெற்கு)
விநந்தசேன பீரிஸ் (யு என் பி)
பெரும்பான்மை -573

## கேள்விகளுக்கு . . .

(15ம் பக்கத் தொடர்ச்சி)

கில்ஏன் தண்டனை அடைய வேண்டும்?

பதில்: ஆன்மாக்கள் எண்ணற்றன. சகல ஆன்மாக்களும் பூமியில் பிறந்துதான் தண்டனை அனுபவிக்கும் என்பதில்லை. ஒரு பகுதியினர் ஆவியுலகிலேயே தண்டனையை அனுபவிக்கின்றனர். ஒருபகுதியினர் பூவுலகில் பிறந்து தண்டனையை அனுபவிக்கின்றனர். ஒருபகுதியினர் இரு உலகங்களிலும் தண்டனையை அனுபவிக்கின்றனர் அது அவரவர் பாவ புண்ணியங்களுக்கேற்ப அமைகின்றது. அதேபோல் ஒரு பகுதியினர் ஆவியுலகிலேயே தண்டனையை அனுபவித்துவிட்டு நேராக கைலாயம்செல்வர். ஒருபகுதியினர் பூவுலகில் பிறந்து பின் அங்கு புண்ணியம்செய்து கைலாயம் செல்கின்றனர். இப்படிப் பல விதங்கள் இருக்கின்றன. தற்சமயம் கலியுகத்தில் சில ஆன்மாக்கள் இருக்கின்றன. எப்படியென்ருல் எவ்வுலகத்திலும் தண்டனையை அனுபவிக்குமாறு தவறுகள் செய்பவர்கள் அவர்களுக்கு ஆவியுலகிலும் பூவுலகிலும் மாறி மாறி துன்பம் உண்டு. துன்பகாலம் முடியும்வரை.

திருச்சிற்றம்பலம்.

## 3000முட்டைகள்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பென்ஸ் விலையுடைய மலிவுப் பதிப்புகளாக மாற்றினுர் அலன்லேன். தனது மலிவுப் பதிப்புகளுக்கு 'பென்குவின்' என்ற பறவையினத்தின் பெயரையும் அவர் தான் தேர்ந்தெடுத்தார். ''பென்குவின் பறவையின்'' அலாதியான தோற்றமும், நடையும் இனமறியா உணர்ச்சியை என்னுள் உண்டாக்கியது. அதனுலேயே அதை என் புத்தக இலட்சினையாகத் தேர்ந்தெடுத்தேன் என்று லேன் கூறுகிருர்.

அரச கௌரவத்தையும் வெகு விரைவில் பெற்ற ஸேர் அலனுக்கு இப்பொழுது 66 வயதென்ருலும், உலகப் புகழ் பெற்ற இக் கம்பனிக்கு இன்னும் தலைவராகவே இருக்கிருர். இக் கம்பனி சில வருடங்களுக்கு முன் ஆங்கிலப் பாடத்திட்டத்தை மலிவுப் பதிப்பாக வெளியிட்டபோது 370,000 பிரதிகள் உடனடியாக விற்பனை செய்யப்பட்டன. இது இன்று வருடத்திற்கு40,000 பிரதிகளாகப் பெருகிவருகிறது. பிரிட்டனிலேயே மிகக் கூடிய மலிவுப் பிரதிகளேப் பிரசுரித்து, விற்பனை செய்யும் கம்பனி 'பென்குவின்'தான். இதன் பிரசுரங்களில் 50 விகிதம் ஏற்றுமதியாகின்றன.

இப்பத்திரிகை 'ஈழநாடு லிமிட்டெட்' ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம்சிவன் கோவில் மேலே வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org